# INRAMIZ VACHAKAM

# இன்றமிழ் வாசகம்

(PROSE & POETRY)

**PART I FOR FORM IV**


*Compiled By*

Vidwan K. C. VANMEEKANATHAN, B.O.L., L.T.,

(Author of EVERY DAY LIFE OF THE ANCIENT TAMILS)

*(Formerly Lecturer in the Madura College and also Tamil Pandit, Hindu High School, Triplicane, Madras)*



MADRAS

**THE ORIENT PUBLISHING Co., (Regd.)**

1[illegible]44 [Price 0-14-6

# இன்றமிழ் வாசகம்

(செய்யுளும் உரைநடையும்)

முதற் பாகம்

(நான்காவதுபார மாணவர்கட்குரியது)

தொகுத்தோன்

**வித்துவான், கி. சி. வன்மீகநாதன், B.O.L., L.T.**

**தி ஓரியண்ட் பப்ளிஷிங் கம்பெனி**

(ரிஜிஸ்டர்ட்)

சென்னை

1944

காபிரைட்]

[விலை ரூ. 0—14—6

First Edition ... 1941
Second Edition ... 1944

The Liberty Press, Madras.

# முகவுரை

**தமிழன்புடையீர் !**

நந்தஞ் செந்தமிழ்மொழி தழைத்தோங்க நாம் பல்லாற்ருனும் பாடுபடுதல் நம்முடைய கடமையாகும். தமிழ்மொழி தழைக்க வேண்டுமேல் உயர்தரப் பள்ளி மாணவர்கள் தமிழைக் கற்று வல்லுநர்களாதல் வேண்டும். அக்கருத்துப்பற்றியே அரசாங்கத்தாரும் பல்திறப் பாடங்களையும் அவ்வவர் தாய்மொழி வாயிலாற் கற்றல் வேண்டுமென விதித்துள்ளனர். ஆகவே தமிழ் நாட்டின்கண் உறையும் மாணவர்கள் கற்றுத் தமிழறிவு பெறும் வண்ணம் பல பாடபுத்தகங்களை எழுதி வெளியிடுதல் தமிழ்த் தாய்க்குச் செய்யும் தொண்டுகளில் தலை சிறந்த தொண்டாகும்.

'இன்றமிழ் வாசகம்' என்ற பெயருடன் இலங்கும், செய்யுளும் உரைநடையும் விரவிய இத் தொகைநூல் உயர்தரப் பள்ளி மாணவர்களின் மன நிலையை ஒருவாறு அறிந்து வெளியிடப் பெற்றதாகும். இந்நூலின் செய்யுட் பகுதியில் துதிப்பாடல்கள், நீதிப் பாடல்கள், புராணப் பாடல்கள், பல்சுவைகளைக் கொண்ட பாடல்கள் என நான்கு பிரிவுகளை நிரல்பட அமைத்துள்ளேன். ஒவ்வோர் பகுதிப் பாடல்களிலும் உள்ள கடின சொற்களைத் தொகுத்தெழுதியும், பல்லாற்ருனும் எழும்பும் வினக்களைச் சேர்த்தும், இறுதியில் விளக்கமான முறையில் இலக்கணப் பயிற்சியை அளித்தும் உள்ளேன்.

அவை தனி இலக்கணப் பாடங்கள் பயிலுதற்குச் சிறிது துணை செய்யும் என்பது என் நினைவாகும். புத்தகத்தினிறுதியில் செய்யுட் பகுதி ஆசிரியர்களின் வரலாறுகளும், செய்யுட்களில் உள்ள அரும்பதங்கட்குப் பொருளும் சேர்த்துள்ளேன்.

இந்நூலில் அமைந்துள்ள உரைநடைப் பகுதிப் பாடங்கள் தமிழ்நாட்டுப் பேரறிஞர் பலரால் எழுதப் பெற்றனவாகும். மாணவர்கட்குத் தமிழின்கண் ஆர்வத்தை உண்டாக்கும் கட்டுரைகளும், மாணவர்க்குப் பொது அறிவைத் தரும் கட்டுரைகளுமாக அவை அமைந்துள்ளன. பாடங்களினிறுதியில் வினாக்களையும், பயிற்சிகளையும் கலந்து பயிற்சி என்ற தலைப்புடன் இயைத்துள்ளேன்.

மாணவர்க்குதவும் நோக்குடன் தொகுத்துள்ள இந்நூல், மாணவர்கட்கு உண்மையில் உதவிபுரியுமேல் அதுவே என்னைப் பெரு மகிழ்வு எய்துவிக்கும்.

**கி. சி. வன்மீகநாதன்**

# நன்றி கூறல்

கீழ்க்கண்ட கட்டுரைகளை எழுதி அவற்றை இப்புத்தகத்தில் சேர்த்துக் கொள்ள அனுமதி அளித்தோர்க்கு என் மனநிறை நன்றி உரித்தாகுக.

| கட்டுரைகள் | | கட்டுரை எழுதியோர் |
| --- | --- | --- |
| 1. மானங்காத்த் மைந்தர் | ... | மகாமகோபாத்தியாய தாக்ஷிணத்ய கலாநிதி, டாக்டர் உ. வே. சாமிநாதையர். |
| 2. புகழேந்திப் புலவர் | ... | வித்துவான், திரு. வே. வேங்கடராசலு ரெட்டியார், தமிழாராய்ச்சிச் சொற்பொழிவாளர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. |
| 3. தமிழ்ப் பைத்தியம் | ... | வித்துவான், திரு. எம். எஸ். செல்லம், B.O.L,. L.T. தலைமையாசிரியர், இராமகிருஷ்ண மிஷன் தென்பிரிவுப் பாடசாலை, தியாகராயநகர், சென்னை. |
| 4. பாரத வீரன் | ... | வித்துவான் திரு. கோ. அரங்கசாமி ஐயங்கார், தமிழாசிரியர், இந்து உயர்தரப் பாடசாலை, சென்னை. |
| 5. கையினுல் காகித உற்பத்தி செய்தல் | ... | திரு. வி. எஸ். கிருஷ்ணசாமி, M.A. I.F.S. காட்டிலாகா அதிகாரி. |
| 6. பாற்பண்வணை | ... | திரு. எஸ். கே. மூர்த்தி, சென்னை. |
| 7. நாடகக் கதையின் தன்மை | ... | ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார், B.A., B.L. |

| கட்டுரைகள் | | கட்டுரை எழுதியோர் |
|---|---|---|
| 8. "நாவலர்" பெருமை | ... | திரு. ஏ. சிதம்பரநாத செட்டியார், M.A. தமிழ்ப்பேராசிரியர், அண்ணமலைப் பல்கலைக் கழகம், அண்ணமலை நகர். |
| 9. கிழவியின் நிழல் | ... | வித்துவான் கி. வா. ஜகந்நாதன், B. O. L., ஆசிரியர், கலைமகள், சென்னை. |
| 10. மைசூர்த் தசரா | ... | பண்டிதர், திரு. கா. பொ. இரத்தினம், B.O.L., யாழ்ப்பாணம். |
| 11. கூட்டுறவு முறையில் விவசாயம் | ... | திரு. என். இலக்குமணன், ஆசிரியர், கூட்டுறவு, கோயம்புத்தூர். |
| 12. தாராபாய் | ... | திரு. சம்பந்தம், யாழ்ப்பாணம். |



இந்நூலில் 'தாராபாய்' என்ற தலைப்புள்ள கட்டுரையைச் சேர்க்க அன்புடன் அனுமதி அளித்த 'கலைமகள்' பத்திரிகை ஆசிரியருக்கும், நபி ஜயந்தி கொண்டாடப்படுவதன் நோக்கம், நாடகக் கதையின் தன்மை கூட்டுறவு முறையில் விவசாயம் ஆகிய மூன்று கட்டுரைகளையும் இந்நூலில் சேர்க்க விருப்புடன் அனுமதி அளித்த திருச்சி அகில இந்திய ஒலிபரப்புச்சாலை அதிகாரிகளுக்கும் யான் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

"கைம்மாறு கருதாக் கடப்பாடு மாரிமாட்டு
என்ஞற்றுங் கோல்லோ உலகு"

கி. சி. வன்மீகநாதன்

# பொருளடக்கம்

## செய்யுட் பகுதி


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **I.** | **கடவுட் போற்றுதல்** | | |
| 1. | பெரிய புராணம் .... | .... | 1 |
| 2. | இராமாயணம் .... | .... | 1 |
| 3. | தேவாரம் .... | .... | 2 |
| 4. | திருவாசகம் .... | .... | 3 |
| 5. | நாலாயிரத் திவ்ய பிரபந்தம் | .... | 3 |
| 6. | சகலகலாவல்லி மாலை | .... | 5 |
| **II.** | **பெரியார் பொருண் மொழிகள்** | | |
| 1. | புற நானூறு .... | .... | 8 |
| 2. | நீதி நெறி விளக்கம் .... | .... | 9 |
| 3. | திருக்குறள் .... | .... | 10 |
| 4. | பழமொழி .... | .... | 13 |
| 5. | நாலடியார் .... | .... | 16 |
| 6. | ஆசாரக் கோவை .... | .... | 18 |
| **III.** | **காதை** | | |
| 1. | பாரத வெண்பா .... | .... | 20 |
| 2. | திருவிளையாடற் புராணம் | .... | 25 |
| 3. | குசேலோபாக்கியானம் | .... | 30 |
| 4. | பெரிய புராணம் .... | .... | 37 |
| 5. | அரிச்சந்திர புராணம் .... | .... | 42 |
| **IV.** | **பல்சுவை** | | |
| 1. | திருவரங்கக் கலம்பகம் | .... | 51 |
| 2. | திருவேங்கடத்தந்தாதி | .... | 51 |

பக்கம்

3. மதுரைக் கலம்பகம் .... .... 51
4. சிதம்பரச் செய்யுட் கோவை .... 52
5. பணவிடு தூது .... .... 52
6. குற்ருலக் குறவஞ்சி .... .... 53
7. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் .... 53
8. தனிப் பாடல்கள் .... .... 54

## உரைநடைப் பகுதி

1. மானங் காத்த மைந்தர் .... .... 59
2. நூல் நிலையம் .... .... .... 69
3. புகழேந்திப் புலவர் .... .... 74
4. தமிழ்ப் பைத்தியம் .... .... 86
5. பாரத வீரன் .... .... .... 91
6. *நபி ஜயந்தி கொண்டாடப்படுவதன் நோக்கம் 99
7. கையினுல் காகித உற்பத்தி செய்தல் .... 105
8. பண்டைத் தமிழரின் வீர வாழ்க்கை .... 110
9. பாற்பண்ணை .... .... .... 119
10. *நாடகக் கதையின் தன்மை .... 123
11. "நாவலர்" பெருமை .... .... 133
12. கிழவியின் நிழல் .... .... 141
13. மைசூர்த் தசரா .... .... 151
14. *கூட்டுறவு முறையில் விவசாயம் .... 157
15. தாராபாய் .... .... .... 167

குறிப்புரை .... .... .... 179

---

* இக் கட்டுரைகள் திருச்சி அகில இந்திய ஒலிபரப்புச் சாலை அதிகாரிகளின் அனுமதி பெற்றவையாகும்.

# செய்யுட் பகுதி

# இன்றமிழ் வாசகம்

(செய்யுளும் உரைநடையும்)

முதற் பாகம்

## செய்யுட் பகுதி

## 1. கடவுட் போற்றுதல்

### 1. பெரியபுராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். (1)

—சேக்கிழார்.

### 2. இராமாயணம்

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே. (2)

—கம்பர்.

பயிற்சி

பொருளறிக:—மலி, நீர், வேணி, அலகு, நீக்கல், அன்னவர், சரண்.

1. சேக்கிழார், சிவபெருமானின் அடியார்க்கெளியனும் தன்மையை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?
2. கம்பர் கூறும் கடவுளின் தன்மைகள் எவை ?
3, நூலுக்குக் கடவுள் வணக்கம் ஏன் இருத்தல் வேண்டும் ?

## இலக்கணம்

1. பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்துக் காட்டுக :—
உலகெலாம், நிலவுலாவிய, உளவாக்கல், அலகிலா.
2. இரண்டாவது செய்யுளிலுள்ள உம்மைகள் என்னவும்மைகள் ?
3. 'அன்னவர்க்கே'. இச்சொல்லின் ஏகாரம் எவ்வேகாரம் ?

## 3. தேவாரம்

### திருவையாற்றுப் பதிகம்

(பண்—காந்தாரம்)

மாதர் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா
றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். (3)

கடிமதிக் கண்ணியி னானைக்
காரிகை யாளொடும் பாடி
வடிவொடு வண்ணமி ரண்டும்
வாய்வேண் டுவசொல்லி வாழ்வேன்

அடியிணை யார்க்குங் கழலான்
ஐயா றடைகின்ற போது
இடிகுரல் அன்னதோர் ஏன
மிசைந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். (4)

—திருநாவுக்கரசர்.

## 4. திருவாசகம்

### திருப்பூவல்லி

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்
[தேன்
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ! (5)

பாலும் அமுதமும் தேனுடனும் பராபரமாய்க்
கோலும் குளிர்ந்துள்ளம் கொண்டபிரான் குரை
[கழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ! (6)

—மாணிக்கவாசகர்.

## 5. நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

### நாச்சியார் திருமொழி

(வாரணமாயிரம்)

வாரண மாயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம்செய்து, மணநீர்
அங்கவனோடும் உடன்சென்(று) அங்(கு) ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

—ஸ்ரீ ஆண்டாள்.

பெரிய திருமொழி - அஞ்சாம்பத்து

ஏழை யேதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கியுன் தோழி
உம்பி எம்பியென் றொழிந்திலை உகந்து
தோழன் நீ யெனக் கிங்கொழி யென்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட
ஆழிவண்ண! நின் னடியிணை அடைந்தேன்
அணிபொழில்திரு வரங்கத்தம் மானே. (9)

கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை
வைகு தாமரை வாங்கிய வேழம்
முடியும் வண்ணமோர் முழுவலி முதலை
பற்ற மற்றது நின்சரண் நினைப்பக்
கொடிய வாய்விலங் கினுயிர் மலங்கக்
கொண்ட சீற்றமொன் றுண்டுள தறிந்துன்
அடிய னேனும்வந் தடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே. (10)

—திருமங்கையாழ்வார்.

பயிற்சி

பொருளறிக:—இணை, புணையாளன், குரை, ஞாலம், பரவுதல், வரவுதல், வாரணம், நம்பி, மட்டித்து, கண்ணி, போது, சுவடு,

ஐயாறு, பிடி, களிறு, கடி, மதி, ஆர்க்கும், ஏதலன், மாழை, உகந்து, பொழில், காமரு, பொய்கை, மலங்க.

1. திருநாவுக்கரசர், திருவையாற்றில் புகும்பொழுது எத்தகைய காட்சிகளைக் கண்டார்?
2. பூவல்லி கொய்தல்: விளக்குக.
3. மாணிக்கவாசகர் எவ்வாறு பூவல்லி கொய்வதாகக் கூறுகின்றார்.
4. நாலாயிர திவ்விய பிரபந்தம், தேவாரம்: இவற்றைப் பற்றிய சிறு குறிப்புக்கள் வரைக.
5. நாச்சியார் கனநிகழ்ச்சியைச் சுருக்கி வரைக.
6. திருமங்கை மன்னர் திருமாலின் எவ்வெச் செயல்களை வியந்து புகழ்கின்றார்?

## இலக்கணம்

1. பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்து எழுதுக:—
இணையார், திருவடி, பொற்குடம், ஐயாறு, இன்னருள், அரங்கத்தம்மான்.
2. மேற்கண்ட செய்யுட்களிலிருந்து இடைச் சொல்லுக்கு ஓர் உதாரணமும், உரிச்சொல்லுக்கு ஓர் உதாரணமும் எழுதுக.
3. தொடரிலக்கணம் கூறுக:—
கடிமதி, பொற்குடம், இன்னருள், பூம்பொழில்.

## 6. சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. (11)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே. (12)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. (13)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. (14)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்
செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. (15)

—குமரகுருபர சுவாமிகள்.

## பயிற்சி

பொருளுணர்க :—பதம், வெள்ளை, சகம், தெள்ளி, தூக்கும், பனுவல், ஓதிமப்பேடு, பண்.

1. குமரகுருபரர் கலைமகளை எவ்வெவ்வாறு உருவகப்படுத்துகின்றார் ?
2. குமரகுருபரர் கலைமகளிடம் என்னென்ன வேண்டுகின்றார் ?
3. கலைமகள் எத்தகைய தெய்வம் ? ஏன் ?

## இலக்கணம்

1. பின்வரும் பதங்களைப் பிரித்துக்காட்டுக :—வெண்டாமரை, தண்டாமரை, செழுந்தமிழ், வெள்ளோதிமம்.
2. வெண்டாமரை : தொடரிலக்கணம் கூறுக.
3. உருவகம் என்றால் என்ன ? விளக்குக.
4. தமிழ், கவி : இவ்விரண்டும் எவ்வெவ்வாறு உருவகப்படுத்தப் பட்டுள்ளன ?

—

## II. பெரியார் பொருண்மொழிகள்

### 1. புறநானூறு

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் உழக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. (1)

—பொன்முடியார்.

பல்சான் றீரே! பல்சான் றீரே!
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுள்
பயனில் மூப்பில் பல்சான் றீரே!
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே. (2)

—நரிவெரூஉத்தலையார்.

பயிற்சி

பொருளறிக :—புறந்தருதல், வடித்தல், நன்னடை, ஒளிறு, சமம், திரை, கவுள், கணிச்சி, அல்லது, ஓம்புமின்,

1. தாய், தந்தை, கொல்லன், அரசன், மகன் : இவர்களுடைய கடமைகளை முறையே யெழுதுக.
2. நரைக்கு எவ்வுவமை கூறப்பட்டுள்ளது ?
3. நல்லாற்றுப் படூஉம் நெறி எது ? ஏன் ? அஃது எத்தகையது

## இலக்கணம்

1. மேற்காட்டிய செய்யுட்களிலிருந்து பண்புத்தொகைக்கு ஓர் உதாரணம் எழுதி விளக்குக.
2. உயிரளபெடை யென்றால் என்ன? உதாரணம் காட்டி விளக்குக,
3. இலக்கணக் குறிப்பு வரைக:—தருதல், உழக்கி, சான்றீரே, இரங்குவீர், மாதோ, ஓம்புமின், நெறியுமார்.

## 2. நீதிநெறி விளக்கம்

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (1)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலமும் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா ; யாரே
அழகுக் கழகுசெய் வார். (2)

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி. (3)

மெய்வருத்தம் பாரார் ; பசிநோக்கார் ; கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் ; அவமதிப்பும் கொள்ளார் ;
கருமமே கண்ணா யினர். (4)

தெய்வம் உளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லை! தம் இன்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (5)

—குமரகுருபர சுவாமிகள்.

## பயிற்சி

பொருளறிக :—அவை, விதிர்ப்பார், ஆகுலம், நவை, நல்கூர்ந்தார், பூத்தல், நட்டல், ஒற்று, கோறல், செவ்வி, கண்ணின்று, ஒறுக்கும்.

1. பூத்தலிற் பூவாமை நன்று : எவை ?
2. கற்றோர்க்கு அழகைத்தருவது எது ? ஏன் ?
3. ஒற்று : விளக்குக.
4. கெடுவது காட்டும் குறிகள் எவை ?
5. கருமமே கண்ணாயினார் தன்மைகள் எவை ?
6. தெய்வம் இலதென்பார்க்கு ஏன் கடவுள் தண்டனை விதிப்பதில்லை ?

## இலக்கணம்

1. மேற்காட்டிய செய்யுட்களிலிருந்து முற்றும்மைக்கு ஓர் உதாரணம் தருக.
2. பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்துக் காட்டுக :—
   ஈத்துண்ணார், இன்னலம், பிறிதாதல், கண்டுஞ்சார்.
3. போலி என்றால் என்ன ? ஒருதாரணமெழுதி விளக்குக.
4. குற்றியலுகரம் என்றால் என்ன ?
5. நன்று, அழகு, ஒற்று : இவை எவ்வெக் குற்றியலுகரத்தின் பாற்படும் ?

## 3. திருக்குறள்

### அருளுடைமை

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு. (1)

## புலான்மறுத்தல்

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும். (2)

## தவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. (3)

## கள்ளாமை

உள்ளத்தான் உள்ளலுந் தீதே பிறர்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். (4)

## வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். (5)

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். (6)

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (7)

## வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். (8)

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்
[னும்
ஏமப் புணையைச் சுடும். (9)

## இன்னா செய்யாமை

இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். (10)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (11)

கொல்லாமை

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. (12)

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. (13)

நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. (14)

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (15)

ஊழ்

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும். (16)

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். (17)

ஆள்வினையுடைமை

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (18)

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (19)

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். (20)

திருவள்ளுவர்.

## பயிற்சி

பொருளறிக :—நோன்றல், உறுகண், உள்ளல், வாய்மை, புரை, சேர்ந்தாரைக்கொல்லி, ஏமம், புணை, இன்னா, ஒறுத்தல், நல்லாறு, நெருநல், உப்பக்கம், உலைவு.

1. இன்னாசெய்யாமை, நிலையாமை, ஆள்வினையுடைமை : விளக்குக.
2. எல்லாவுயிரும் தொழும் : யாரை?
3. தவம், வாய்மை : இவற்றின் இலக்கணங்களை யெழுதுக.
4. பொய்மையும் வாய்மையிடத்த : எப்பொழுது?
5. சினம் எத்தகையது?
6. இன்னா செய்தாரை ஒறுத்தல் ஏவ்வாறு?
7. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் விளைவது யாது?
8. நல்லாறெனப்படுவது யாது?
9. இறப்பும், பிறப்பும் எத்தகையன?
10. முயற்சியின் பெருமையைப் பற்றிப் பத்துவரிகள் எழுதுக.

## இலக்கணம்

1. உவமையணிக்கு ஓர் உதாரணம் காட்டி விளக்குக.
2. குற்றியலிகரம் என்றால் என்ன? உதாரணம் காட்டி விளக்குக.
3. ஆகுபெயரின் இலக்கணம் யாது? மேற்காட்டிய குறட்பாக்களிலிருந்து இரண்டு உதாரணங்கள் எழுதுக.
4. உருவக அணியுள்ள ஓர் குறட்பாவினை வரைக.

## 4. பழமொழி

அறிவினால் மாட்சியொன்(று) இல்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட(து) எவனாம்?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். (1)

தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற்(கு) இடைப்புகுதல்—எங்கும்
வியன் உலகின் வெள்ளாடு தன்வளி தீரா(து)
அயல்வளி தீர்த்து விடல். (2)

நெடியது காண்கிலாய், நீ எளியை ; நெஞ்சே!
கொடியது கூறினுய் மன்ற—அடியுளே
முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும். (3)

இறப்பச் சிறியவர் இன்ன செயினும்
பிறப்பினல் மாண்டோர் வெகுளார்—திறத்துள்ளி
நல்ல விறகின் அடினும் நனிவெந்நீர்
இல்லம் சுடுகலா வாறு. (4)

தாயானும் தந்தையா லானும் மிகவின்றி
வாயின்மீக் கூறும் அவர்களை ஏத்துதல்
நோயின் றெனினும் அடுப்பின் கடைமுடங்கும்
நாயைப் புலியாம் எனல். (5)

மன்னவ னாணைக்கீழ் மற்றையோர் மீக்கூற்றம்
என்ன வகையாற் செயப்பெறுப ?—புன்னைப்
பரப்புநீர் தாவும் படுகடற்றண் சேர்ப்ப !
மரத்தின்கீ ழாகா மரம். (6)

தாமேயும் தம்மைப் புறந்தர வாற்றுதார்
வாமான்றேர் மன்னரைக் காய்வ தெவன்கொலோ?
ஆமா வுகளு மணிவரை வெற்ப ! கேள்
ஏமாரார் கோங்கே றினர். (7)

தீயன வல்ல செயினும் திறல்வேந்தன்
காய்வன செய்தொழுகார் கற்றறிந்தார்—பாயும்
புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கில்; அதுவே
வலிமுன்னர் வைப்பார மில். (8)

முன்னும் ஒருகாற் பிழைப்பினை யாற்றவும்
பின்னும் பிழைப்பிற் பொறுப்பவோ?—இன்னிசை
யாழின்வண் டார்க்கும் புனலூர! ஈனுமோ
வாழை யிருகாற் குலை. (9)

நெறியால் உணராது நீர்மையும் இன்றிச்
சிறியார் எளியரால் என்று—பெரியாரைத்
தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று. (10)

—மூன்றுறையரையனார்.

## பயிற்சி

பொருளறிக :—மாட்சி, வியன், வளி, மன்ற, மீக்கூற்றம், வாமான், காய்வது, ஆமா, புல்வாய், ஆற்ற, ஆர்க்கும், நீர்மை, திங்கள்.

1. பழமொழிகளில் ஐந்தெழுதுக.
2. மூன்ருவது செய்யுளின் பின்னிரண்டு அடிகளின் கருத்துள்ள குறட்பாவினை வரைக.
3. வெள்ளாட்டின் தன்மையாது ?
4. சிறியவர் இன்னுசெயினும் பெரியவர் வெகுளார்: எதைப் போல ?
5. நாயைப் புலியாம் எனல் : எது ?
6. திங்களை நாய் குரைத்தற்று : எது ?
7. சேர்ப்பன், வெற்பன், ஊரன் : சிறு குறிப்புக்கள் வரைக.

## இலக்கணம்

1. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்திற்கு ஓர் உதாரணம் எழுதுக.

2. உவம உருபு ஒன்று எழுதுக.
3. நனி : என்ன சொல்?
4. பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்துக் காட்டுக :—
வெள்ளாடு, வெந்நீர், கோங்கேறினர், வண்டார்க்கும், தங்கணோர், தகவல்ல.

## 5. நாலடியார்

கல்வி கரையில ; கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல ; தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. (1)

வைப்புழிக் கோட்படா ; வாய்த்தீயின் கேடில்லை ;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வெளவார்,
மிச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. (2)

இம்மை பயக்குமால் ; ஈயக் குறைவின்றால் ;
தம்மை விளக்குமால் ! தாமுளராக் கேடின்றால்;
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. (3)

தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகலிலர் எஃகுடையார், தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம், அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி. (4)

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் ;
கடைநிலத்தோர் ஆயினும் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். (5)

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு. (6)

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்து
அல்லல் உழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து. (7)

கல்லாது நீண்ட ஒருவன், உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு—மெல்ல
இருப்பினும், நாய்இருந் தற்றே; இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று. (8)

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. (9)

விரிநிற நாகம் விடர்உள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின். (10)

—சமண முனிவர்கள்.

பயிற்சி

பொருளறிக :—குருகு, செறின், எச்சம், விச்சை, இம்மை, மம்மர், தவல், இகல், நகலின், உம்பர், களர்நிலம், ஆன்ற, நாவின் கிழத்தி, பூவின்கிழத்தி, புலந்து, கேண்மை, நந்தும், வைகல், விடர், உரும், சேண், உட்கும், அரண்.

1. குருகு யாருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது? அதன் தன்மையையெழுதுக.
2. ‘கல்வி’ என்னும் பொருள் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.
3. இடோரில் கற்றுணர்ந்தோர் மதிப்புப் பெறுவர்: எதைப் போல?
4. புத்தகம் போற்றும் புலவர், பொருள் தெரிந்து தேற்றும் புலவர்: விளக்குக.
5. கற்றோர் வறுமையால் துன்புறுவது ஏன்?
6. பெரியவர், சிறியவர், ஆகியோரின் நட்பின் தன்மைகள் எவை?
7. அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யார்: யார்? எப்பொழுது? எதைப்போல?

## இலக்கணம்

1. இராஅது: இஃதென்ன அளபெடை?
2. மூன்றும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை உருபுகள் வந்துள்ள சொற்றொடர்களை வரைக.
3. சால: என்ன சொல்?
4. உவமையணிக்கு ஓர் உதாரணச் செய்யுள் வரைக.

## 6. ஆசாரக்கோவை

நன்றியறிதல், பொறை யுடைமை, இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை, கல்வியொடு
ஒப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத்தா ரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. (1)

வைகறை யாமம் துயிலொழிந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை. (2)

அரசன் உவாத்தியாயன் தாய் தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி. (3)

பொய் குறளை வெளவல் அழுக்காறு இவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்; சிந்திப்பின்
ஐயம் புகுவித் தருநிரயத் துய்த்திடும்
தெய்வமுஞ் செற்று விடும். (4)

நந்தெறும்பு தூக்கணம்புட்காக்கையென் றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத்—தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும். (5)

—பெருவாயின் முள்ளியார்.

## பயிற்சி

பொருளறிக :—பொறை, ஒப்புரவு, வைகறை, முந்தையோர், குரவர், குறளை, அழுக்காறு, நிரயம், செற்று, நந்து.

1. எண்வகை ஆசாரவித்துக்கள் எவை?
2. முந்தையோர் கண்ட முறை யாது?
3. இவரைத் தேவரைப் போலத் தொழுக : அவர்கள் யாவர்?
4. ஐயந்தீர் காட்சியார் சிந்தியாதன எவை? அவற்றைச் சிந்தித்தால் விளைவன யாவை?
5. ஆசாரம் எப்பெற்றியானும் படும் : எத்தகையார்க்கு?

## இலக்கணம்

1. என்பதே : ஏகாரம் எவ்வேகாரம்?
2. புகுவித்து : என்ன வினை?
3. தொழிற் பெயருக் கோர் உதாரணம் எழுதுக.
4. வலித்தல் விகாரத்திற்கு ஓர் உதாரணம் எழுதுக.

# III. காதை

## 1. பாரத வெண்பா

மகாபாரதத்தில் கன்னன், துரியோதனனுடன் சேர்ந்திருந்தான். கன்னன் இயற்கையில்கொடைக்குணம்வாய்ந்தவன்; சிறந்த வீரனுமாவான். அவன் உடன் பிறந்த கவசகுண்டலங்கள் அவனைக் காப்பாற்றும். அதனையுணர்ந்த கண்ணன், கன்னனுடைய கவசகுண்டலங்களை அவனிடமிருந்து நீக்கக்கருதினார். ஆதலால் கண்ணன் இந்திரனை ஏவி அக்கவச குண்டலங்களைப் பெறுமாறு பணித்தார். இந்திரனும் தன் மகவான அருச்சுனனுக்கு உதவி செய்வான் வேண்டி அந்தணன் உருவுடன் கன்னனை அடைகின்றான்.

மூப்பும் பெரிதாகி முன்னின்றார் தாமஞ்சப்
பாப்புப் பெருக்கம் பல பூண்டு—கோப்பமைந்த
கொற்றவேல் அந்தரர்தம்கோமான் ஓர் அந்தணனாய்
உற்றடைந்தான் அங்கர்கோன் ஊர். (1)

### காவலோர் கன்னனிடம் கூறுவது

குடை யொன்று கைப்பிடித்துக் கொற்றவனேவா [யிற்
கடைவந் தடைந்தான்காண் கண்டாய்—குடைநிழற் [கீழ்ப்
போதிலுயர் தண்டார் பொலிமுடியாய் காண்பதற் [கோர்
வேதியனாய் நின்றான் விரைந்து. (2)

### கன்னன் அனுமதிபெற்ற காவலோர் அந்தணனை அழைத்தது

வேதியனே யுன்றன் வரவுரைப்ப வேல்வேந்தன்
நீதியாற் கேட்டு நினையழைத்தான்—சோதிச்

செழுந்தரள வெண்குடையான் தேர் வேந்தன்தன்
[பால்
எழுந்தருளாய் என்றார் இசைந்து. (3)

### அந்தணனிடம் கன்னன் கூறுவது

வாயில்அபி தாவிட்ட மாமறையோ னேத்தனியே
யேய மறைநூல் அதுகேட்டு—நேயமுடன்
நீவேண்டி வந்தபொருள் நீயுரைக்க என்றுரைத்தான்
கார்வேண்டும் கையான் கலந்து. (4)

### அந்தணன் மறுமாற்றம்

வண்மை யுடையாய் மறாய்என்பார் வையகத்தோர்
உண்மை யறியயான் வந்துற்றேன்—நன்மையின்
[கண்
மிக்குயர்ந்த வெண்குடையாய் மிக்காய் எனவுரைத்
[தான்
மிக்குடைய வெண்குடையான் மீண்டு. (5)

நல்லார்கள் எல்லாரும் நன்கறிந்து வேண்டுவன
சொல்லாது கொண்டார்கள் சொன்னலென்—எல்
[லாம்
அறநெறியே வந்திறைஞ்சும் அங்கநாட் டேறே
முறைமுறையே தான்நீ முயன்று. (6)

### கன்னன் மொழிதல்

இன்றேயிம் மாற்றம் உரைத்தாய் இருபிறப்பாய்
இன்றே உயிர்தான் இடிந்திடினும்—நன்றே நீ
ஏதேனும் வேண்டிற்றுப் பெற்றாய் எனவுரைத்தான்
மாதான மன்னன் மகிழ்ந்து. (7)

### அந்தணன் கூறுவது

ஈங்கென் மனக்கருத்தை யெல்லாம் இயம்புவன் [நான்
ஓங்கு புகழாய் உடன்பட்டால்—கோங்கு
சுரும்பவிழுந் தொங்கலாய் தொல்லுலகு தன்னில்
பெரும்புகழீ தென்றான் பெயர்ந்து. (8)

### கன்னன் உரை

அழகியதே சொன்னாய்நீ அந்தணனே யுந்தி
பழகியதே சொல்லின் மறுப்பேனோ-தழுவியபோர்த்
தன்னாய கன்படவே தான்சாவுக் கஞ்சிப்போம்
மன்னாக எண்ணாய் மதித்து. (9)

மன்றில் வலிந்தோனும் மாதவரைச் செற்றோனும்
நன்றி மறந்தோனும் நானிலத்துள்-அன்றியுந்தான்
பெற்றவரைத் தானிகழும் பேதையும் என்றிவர்கள்
உற்றவிடம் எய்துவன்நான் உற்று. (10)

### அந்தணன் இரந்தது

மற்றேதும் வேண்டேனின் வண்மை யழியாமற்
பெற்றேனெனின்யானும் பெற்றியான்—உற்ற
பிறர்க்குரைப்பன் உற்றவெற்குப்பெய்கழலாய்பானு
நிறக்கவச குண்டலங்கள் நேர். (11)

### கன்னன் கொடை

வாளாள்தா என்றாலும் வேண்டின் மறுப்பனோ
பேணா மறைமுனியே பேசுங்கால்—நாணாது
கொண்டிடுதி யென்றான் குறையிரந்து சென்றார்க்கு
மொண்டிடுபொற் கையான் முயன்று. (12)

உய்ய வுடன்பிறந்த குண்டலங்கள் மண்டலத்தார்
செய்தனவும் அல்ல திருத்தேரா—மெய்யே
மறுத்திட்டேன் என்று மயங்காதே காதை
அறுத்திட்டுக் கொண்ணீ யமர்ந்து. (13)

வாங்கப்படாதனகாண் மாமறையோய்மற்றவற்றைத்
தேங்காதே நீயறுத்துக் கொள்ளென்ன—ஆங்க [வனும்
மெய்நீட்டிச் சென்று விரைந்தவன்றன் காதருகு
கைநீட்டி னவற்றைக் கண்டு. (14)

## அசரீரி உரை

பார்த்தற்கா மாயன் பணியினல் அப்பார்த்தன்
போர்த்தொழிலில் வெல்லும் பொருட்டாக—ஏற் [கின்றான்
இந்திரன்காண் ஐயா இவைகொடேல் என்றுரைத்து
அந்தரத்தே ஓரசதி ஆங்கு. (15)

வசையில் மணிக்கவச குண்டலங்கள் மற்றும்
இசைவினெடு கொள்ள இருந்தான்—விசயன்றன்
தந்தையாம் இந்திரன்காண்உன்னைத்தடுக்கின்றேன்
உந்தையான் என்றான் உகந்து. (16)

## கன்னன் கொடுத்த சிறப்பு

தேவேந் திரன்வந்து தேகியெனக் கையேற்றால்
யாதேனும் யான்கொடுக்க மாட்டேனே—வாய்மை
மறுத்துரைக்கு மன்னோநான் என்னவண் காதை
அறுத்திட் டவணளிப்பான் ஆங்கு. (17)

### அந்தணன் மீண்டும் இரந்தது

கொற்றவனே நின்னுடைய கோலமணிக் குண்டலத்
[தால்
உற்றபயன் பெற்றேனுக் கொன்றுகுறை—இற்றை
[யதுன்
சிந்தைமகிழ்ந் தன்புடனே செங்கைச் சிகாமணி
[யைத்
தந்தருளாய் என்றான் தளர்ந்து. (18)

### கன்னன் அதையுங்கொடுத்தது

நினைவுக்கு வாய்மைக்(கு) உயிர்க்குறுதி யில்லை
மனுவுக்கும் வாழ்வுக்கும் அற்றே—நினைவிற்
கொடுத்தபோ தேகொண்டு கோதில் மறையோய்
நடத்தியே என்றான் நயந்து. (19)

### இந்திர அந்தணன் வேல்கொடுத்து மீண்டது

உற்ற விடத்துதவும் உண்மை ஒளிநெடுவேல்
கொற்றவனே கொள்நீ எனக்கொடுத்தான்—
[வெற்றிமிகு
தானவரை வென்றடக்கும் தண்டார் மதக்களிற்று
வானவர்கோன் உள்ளம் மகிழ்ந்து. (20)

—பெருந்தேவனார்.

பயிற்சி

பொருளறிக:—கொற்றம், அந்தரம், அங்கர்கோன், அபிதா, தார், பொலி, தரளம், கார், வண்மை, வையகம், இருபிறப்பாய், கோங்கு, சுரும்பு, தொங்கல், பேதை, வண்மை, பானு, உய்ய, பார்த்தன், அசதி, வசை, விசயன், உகந்து, தேகி, அவண், கோலம், கோது, தானவர்.

1. இந்திரன் எத்தகைய உருவோடு கன்னனையடைந்தான்? ஏன்?
2. கன்னனைக்கண்ட இந்திரன் கூறியன எவை?
3. இரு பிறப்பாய்: விளக்குக.
4. கன்னன் தான் கொடாவிடில் தன்னை எவ்வாறு நினைக்கும் படியாகச் சொல்லுகின்றான்?
5. கன்னன் தான் கொடாவிடில் தான் எக்கதியை அடைவதாகச் சொல்லுகின்றான்?
6. அசரீரி கூறியன எவை?
7. கன்னனுக்கு இந்திரன் பதிலாக எதைக் கொடுத்தான்?

## இலக்கணம்

1. பின்வருவனவற்றைப் பிரித்துக் காட்டுக :—
பாப்புப் பெருக்கம், தண்டார், நானிலம், கொண்ணீ, செங்கை, வாணாள், காதருகு.
2. தொடரிலக்கணம் கூறுக :—
அடைந்த வேதியன், தண்டார், சென்று நீட்டினான், மதக் களிறு.
3. மேலுள்ள செய்யுட்களில் வந்துள்ள வேற்றுமைத் தொடர்களை எடுத்து வரைக.
4. மரூஉமொழி என்றால் என்ன? உதாரணம் காட்டி விளக்குக.

# 2. திருவிளையாடல் புராணம்

## குண்டோதரனுக்கு அன்னமிட்டது

மதுரைக்கோயிலில் அமர்ந்துள்ள சிவபெருமான் சௌந்தர பாண்டியன் என்ற பெயருடன் வழுதிதிருமகனாக வந்து, மீன நோக்கின் மடவரலாகிய மீனாட்சியம்மையை மணந்தார். அத்திருமணம் நடந்த காலையில் அம்மையார் அனைவருக்கும் அன்னமிட்டார். அப்பொழுது சிவபிரானுக்குக் குடையெடுக்கும் குறுந்தாட் பூதமாகிய குண்டோதரனுக்கு அன்னமிட்ட பொழுது நிகழ்ந்தது ஈண்டுக் கூறப்பட்டுள்ளது.

கன்னி யர்க்கர சாயினுள் கடிமனை புகுந்து
மின்னி யற்சடை மாதவர் வேதியர் ஏனோர்
எந்நி லத்துள மன்னவர் யாவர்க்கு முறையே
பொன்னி யற்கலத் தறுசுவைப் போனகம்
[அருத்தா. (1)

பூசு கின்றவும் உடுப்பவும் பூண்பவும் பழுக்காய்
வாச மெல்லிலை ஏனவும் அம்முறை வழங்காத்
தேச மன்னவர் ஏனையோர் செல்லுநர்ச் செலுத்தி
ஈச னன்புறு கற்பினுள் இருக்குமவ் வேலை (2)

மடைவ ளத்தொழிற் புலவர்வந் தடியிணை வணங்கி
அடியரேம் அட்ட போனகம் ஆயிரத் தொன்றின்
இடைய தாயினும் தொலைந்தில தியாங்கண் மேற்
[செய்யக்
கடவ தேதெனப் பிராட்டிதன் கணவர்முன்
[குறுகா. (3)

பணிந்தொ துங்கிநின் றடிகண்முப் பத்துமுக் கோடி
கணங்கள் தம்மொடும் இங்கெழுந் தருள்வது கருதி
இணங்கும் இன்சுவைப் போனகம் எல்லையின் றாக்கி
உணங்கு கின்றதுண் டெஞ்சிய தெனைத்தென
[வுரைக்கின். (4)

இமையக் குன்றமும் அடைகலாய் இதன்புறங் கிடந்த
சிமையக் குன்றுகள் ஈட்டமும் சேர்ந்தென நிமிரச்
சமையக் கொட்டிய வாலரிப் புழுக்கலும் சாதக்
கமையக் கொட்டிய கறிகளின் வருக்கமும்
[அனைத்தே. (5)

என்ற போதிறை எம்பிரான் தேவியா ரிடத்தில்
ஒன்று மன்பினுல் ஒருவிளை யாடலை நினைத்தோ
தன்தனிக் குடைப் பாரிடத் தலைவன தாற்றல்
அன்றி யாவரும் அறிந்திடக் காட்டவோ அறி
[யேம். (6)

சிறிது வாணகை செய்துமூ வேந்தரிற் சிறந்த
மறுவின் மீனவன் அரும்பெறல் மகளுனக் கரிதிற்
பெறுவ தேதுவான் தருவுநின் பணிசெயப் பெற்
[றிங்(கு)
உறைவ தேற்பிறர் திருவெலா முன்னதேயன்றே.

அளவி லாதநின் செல்வத்தின் பெருக்கைநா மறிய
விளைவு செய்தனை போலும்நின் விருந்துணப் பசியால்
களைக டந்தவர் ஆகிநம் கணத்தினுட் காணேம்
தளவ மூரலாய் யாஞ்செயத் தக்கதே தென்
[றான். (8)

அடுக்க நின்றகுண் டோதர னகட்டிடை வடவை
மடுக்க வுன்னினன் அதுவந்து வயிற்றெரி பசியாய்த்
தொடுக்கஆலமுண்டாங்குடல் சோர்ந்துவேர்த் தாவி
ஒடுக்க முற்றைய பசியினல் உயங்கினேன் என்
[றான். (9)

குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடி
[சோ(று)
இடுமினப்புறஞ் சோறுபால் எனத்தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினள் குறியனும் உடனே
நடைத ளர்ந்துகண் புகைந்துவாய் புலர்ந்திட
[நடந்தான். (10)

படைக்க ணேவலர் இறைமகள் பணியினுல் பசிநோய்
தொடுத்த வன்தனைக் கொண்டுபோய்ச் சொன்றி
[மூன் விடுத்தார்
அடுத்தி ருந்ததே கண்டனர் அன்னமா மலையை
எடுத்த யின்றதும் அடிசிலங் கிருந்ததும் காணூர்.(11)

பாரித் துள்ளவெப் பண்டமும் பருஉக்குறும் கையால்
வாரித் தன்பெரு வயிற்றிடை வைப்பவும் துடுவை
பூரித் தாகுதி பண்ணிய தழலெனப் பொங்கிக்
கோரித் தொன்பது வாயிலும் பசித்தழல்
[கொளுந்த. (12)

அலங்க லோதிகண் டதிசயம் அடைந்து தன்னன்
[பின்
நலங்கொள் நாயகன் முன்புபோய் நாணமுட் கிடப்ப
விலங்கு பூங்குழல் சுவன்மிசை யிறக்கியிட் டொல்கி
நிலங்கி ளைத்துநின் ருள்நிலை கண்டனன் நிரு
[பன். (13)

அஞ்சி லோதியை வினவுவான் அறிகலான் போலக்
குஞ்சி யாரழல் அன்னவக் குடவயிற் றவனுண்(டு)
எஞ்சி யுள்ளவேற் பூதங்கள் இன்னமும் விடுத்துன்
நெஞ்சு வப்பவே யருத்துதும் என்னலும் நிமலை. (14)

ஐய இன்னுமிக் குறட்பசி யடங்கிடா வேறு
வெய்ய பாரிட வீரரை விடுத்தியேல் எடுத்து
வையம் யாவையும் வயிற்றிடை வைப்பரே அதனுல்
செய்ய காலருத் திரப்பெயர் தேற்றமாம் உனக்கே.

சங்க வார்குழைக் குறண்மகன் தன்செயல் தானே
இங்கு வந்துரை செய்திட அறிதியென் றிறைமுன்

மங்கை நாயகி குமுதவாய் மலர்பொழு தெயிற்றுத்
திங்கள் வாய்முழை யான்பசித் தீச்சுட வந்தான். 16

நட்ட மாடிய சுந்தர நங்கையெம் பிராட்டி
அட்ட போனகம் பனிவரை யனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவும்என் சுடுபசி தணியா(து)
இட்டு ணுதவர் வயிறுபோற் காந்துவ தென்ருன். 17

கையர் முப்புரத் திட்டதீக் கடும்பசி உருவாய்ப்
பொய்ய னேன்வயிற் றிடைக்குடி புகுந்ததோ என்
[னும்
கையெ றிந்திடும் அண்டங்கள் வெடிபடக் கதறும்
ஐய கோவெனும் உயிர்த்திடும் ஆவிசோர்ந் தயரும்.

—பரஞ்சோதிமுனிவர்.

## பயிற்சி

பொருளறிக :—மின்னியற்சடை, அறுசுவை, போனகம், பூசுதல், மடைத்தொழில், இணை, உணங்குகின்றது, சிமையக்குன்றுகள், ஈட்டம், ஒன்றும், பாரிடம், தளவமூரல், வடவை, அகடு, சொன்றி, அடிசில், அயின்றது, பாரித்து, துடுவை, அலங்கல், ஓதி, குழல், சுவல், கிளைத்து, அஞ்சிலோதி, குஞ்சி, குடவயிற்றவன், வார், அட்ட, பனிவரை, உயிர்த்திடும்.

1. சோறு எஞ்சியுள்ளதைக் கண்ட மீனுட்சியம்மையார் இறைவனிடம் கூறியன யாவை?
2. சிவபெருமான் குண்டோதரனை யனுப்பியது எவற்றைக்கருதி இருக்கலாம் என ஆசிரியர் கூறுகின்ருர்?
3. சிவபெருமான் மீனுட்சியம்மைக்கு உரைத்த மறுமொழிகள் யாவை?
4. குண்டோதரன் வந்து கூறியன எவை?
5. குண்டோதரன் விரைவில் சோற்றை யுண்டதை ஆசிரியர் எவ்வாறு கூறுகின்ருர்?

6. நாணங்கொண்ட மீனுட்சியம்மையார் சிவபெருமான் எதிரில் எவ்வாறு நின்ருர்? அவர் கூறியன யாவை?
7. சிவனுக்கு காலருத்திரப் பெயர் தேற்றம்: எதனுல்? எப்பொழுது?
8. குண்டோதரன் பசியால் வருந்திய கொடுமையை எவ்வாறு ஆசிரியர் கூறுகின்ருர்?

## இலக்கணம்

1. மேலுள்ள செய்யுட்களிலிருந்து அன்மொழித் தொகைக்கு இரண்டு உதாரணங்கள் எடுத்துவரைக.
2. செய்யா என்ற வாய்பாட்டு வினையெச்சத்திற்கு மூன்று உதாரணங்கள் எழுதுக.
3. கடிமனை: என்ன தொடர்?
4. பெயரெச்சத்தொடர், வினையெச்சத் தொடர் ஆகிய இரண்டிற்கும் ஒவ்வோர் உதாரணம் வரைக.
5. மேற்காட்டிய செய்யுட்களிலிருந்து உருவகம், உவமையாகிய இரண்டிற்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதி விளக்குக.

## 3. குசேலோபாக்கியானம்

குசேலன், கற்புடைய தன் மனைவியுடன் இல்லறம் நடத்துங் காலை இருபத்தேழு குழந்தைகளைப் பெற்ருன். வறுமைக் கடலில் மூழ்கினுன். ஆயினும் அவன் 'வறுமையிற் செம்மை' என்பதைக் கடைப்பிடித்து ஒழுகி, பிறரிடம் இரத்தல் தாழ்வைத்தரும் என்பதைத் தன் மனைவிக்கு எடுத்துரைக்கின்ருன். அவர்களின் வறிய நிலையையும், வறுமையிற் செம்மையையும் ஈண்டு ஆசிரியர் விளக்கியுள்ளார்.

திறலியை தவத்திவ் வாறு திகழ்ந்திடுங்
குசேல னென்பான்
உறலியை யத்த வத்திற் குதவிசெய்
திடுவான் நாளும்

அறலியை கதுப்பி னளோ ரணங்கினை
வதுவை செய்தான்
மறலிய மன்னர் சென்னி மணிமுடி
யிடறுந் தாளோய். (1)

மணமகன் உடம்பு போற்ற வல்லவள்
மனைவியே யென்(று)
உணர்வினர் மொழியு மாற்றம் உவன்செயல்
நோக்கிப் போலும்
தணவறும் அன்பும் சாந்தத் தன்மையும்
நன்மை யான
குணமுமோர் உருவங் கொண்டோர்
குடிப்பிறந் தனைய நீராள். (2)

மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந்(து)
உவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள் ; கொண்கன் நினைப்
பறிந்(து) ஒழுகு நீராள் !
தேசுறு வாய்மை யுள்ளாள் ; சினந்திடல்
என்றும் இல்லாள்
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் ; பெற்றதே
கொண்டு வப்பாள் ; (3)

மலையிட்ட செல்வத் தார்கள் மகிழவோர்
மகவுந் தாரான்
அலையிட்ட முட்டாட் செய்ய அம்புயத்
துறைவோன் ஓரேழ்

தலையிட்ட இருபான் மைந்தர் தந்தனன்
பெருமை யன்றே
சிலையிட்ட தழும்பு வாய்ந்த தெரியலந்
தடந்தோள் வேந்தே! (4)

பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல்
முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம்
விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானமென்
பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ!
இழிவிழிவு எந்த ஞான்றும். (5)

இருநிலத் தியாவர் கண்ணும் ஏற்பதை
இகழ்ச்சி யென்ன
ஒருவிய வுளத்தான் காட்டில் உதிர்ந்துகொள்
வாரு மின்றி
அருகிய நீவா ரப்புல் தானியம்
ஆராய்ந் தாராய்ந்(து)
உருவவொண் நகத்தாற் கிள்ளி யெடுத்துடன்
சேரக் கொண்டு. (6)

வந்துதன் மனைகை நீட்ட வாங்கிமற்(று)
அவற்றைக் குற்றி
அந்தமெல் லியல்பா கஞ்செய்(து) அதிதிக்கோர்
பாகம் வைத்துத்

தந்ததன் பங்க மின்று, தவலரும்
உவகை பூத்து
மந்திர மறைகட் கெட்டா மாலடி
நினைத்தி ருப்பான். (7)

இற்றிவன் வாழ்க்கைத் தன்மை
இருபத்தேழ் மைந்த ருக்கும்
மற்றவப் பாகக் கஞ்சி மட்குழி
சியைப்பால் வைத்துப்
பற்றுகோ ரிகையான் மொண்டு
வாக்கிப்பற் றுமை கண்டு
வெற்றுடம் பாகி நிற்பள்; மெலிவள்;
பின் என்செய் வாளால்! (8)

## வேறு

ஒரு மகவுக் களித்திடும்போ(து) ஒருமகவு
கைநீட்டும் உந்திமேல் வீழ்ந்து
இருமகவும் கைநீட்டும்; மும்மகவுங்
கைநீட்டும்! என் செய்வாளால்;
பொருமிஒரு மகவழும்; கண் பிசைந்தழுமற்
றொருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொரு மக(வு)
எங் ஙனம்சகிப்பாள் பெரிதும் பாவம். (9)

இவ்வண்ணங் கலாம் விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி இரங்கியேங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தால் அணைத்தும்மடித்
தலத்திருத்திச் சிறப்புச் செய்தும்

மைவண்ணக் கண்ணீரைத் துடைத்தும் முகம்
வெரிந் புறந்தை வந்துமாம்பல்
அவ்வண்ணம் வாய்முத்தம் கொண்டும் நயந்(து)
ஓர்விதத்தில் ஆற்றல் செய்வாள். (10)

## வேறு

மக்களுக் கிரங்கி வாடும்
மடத்தகை அணங்கு கேட்டி
தக்கமுற் பவத்தில் ஆன்ற
தருமம்நன் கியற்றி னோர்கள்
ஒக்கஇப் பவத்தி லின்பம்
ஒருங்கனு பவிப்பர் இன்றேல்
மிக்கவெந் துயரத் தாழ்வர்
இதற்குளம் மெலிவ தென்னே. (11)

துப்பிதழ் மடந்தை நல்லாய்!
தோன்றிய சீவ ரெல்லாம்
இப்புவி யிடத்துச் சால
எண்ணுவர் எண்ணி யாங்கே
எப்படி முற்றும் முற்றுது
எம்பிரான் ஒருவற் கன்றி
அப்படி முற்றிற் கீழ்மேல்
ஆம்பகுப் (பு) இரண்டுண் டாமோ. (12)

தேற்றமுற் பவத்திற் செய்த
தீங்குநன் கெனுமி ரண்டும்
ஆற்றல்சால் கரும மென்பர்
அக்கரு மத்தை நோக்கிச்

சாற்றுமிப் பிறப்பில் தக்க
தரித்திரம் செல்வம் நல்கிப்
போற்றுவ னுயிரை யெல்லாம்
பொலிசுடர்த் திகிரி வள்ளல். (13)

மைந்தர்கள் தம்மைப் போற்ற
வளநிதி வேண்டு மென்ருய்
நந்திய பறவை கானம்
நயந்துறை விலங்கு முன்ன
வந்தபல் லுயிர்க்குச் சேம
வைப்புண்டோ வருவா யுண்டோ
எந்திடத் தேனும் போய்ஒன்(று)
இரப்பது தானு முண்டோ. (14)

அல்லது நாளைக் கென்செய்
வாமெனும் கவலை யுண்டோ
எல்லையி லொன்றி னுலொன்(று)
இடிப்புண்டு வாழ்த லுண்டோ
ஒல்லுமவ் வுயிர்கள் தம்முள்
உணவிலா திறந்த துண்டோ
சொல்லரி பரந்த வுண்கட்
துடியிடைப் பேதை மாதே. (15)

கல்லினுட் சிறுதே ரைக்கும்
கருப்பையண் டத்து யிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி யண்ணல்

ஒல்லும்நின் மைந்தர்க் காவா
தொழிவனே ஒழியா னுண்மை
மெல்லியல் கொண்ட துன்பம்
விடுவிடு மறந்தும் எண்ணல். (16)

ஆதலின் நினது மைந்தர்க்(கு)
ஆயுளுள் ளளவை காறும்
ஓதிரு வினைக்குத் தக்க
உணவுண்டு புந்தி மாழ்கேல்;
ஏதுவந் தாலு மூழால்
எனநினைந் திருத்தல் வேண்டும்
மாதர்வாண் முத்த மூரல்
மயின்மரு ணடைப்பூங் கொம்பே! (17)

வளநிதி படைத்தோ மென்றும்
வடிவவில் லுடையோ மென்றும்
அளவில்சேய் ஈன்றோ மென்றும்
அனுபவத் தமைந்தோ மென்றும்
இளமையிற் சிறந்தோ மென்றும்
எழில்நல முடையோ மென்றும்
உளமகிழ் கூர்வர் சற்றும்
உண்மைநூல் உணர்ச்சி யில்லார். (18)

—வல்லூர் தேவராச பிள்ளை

பயிற்சி

பொருளறிக :—திறல், திகழ்ந்திடும், அறல், கதுப்பு, அணங்கு, வதுவை, மாற்றம், நீராள், கொண்கன், தேசு, திண், மகவு, முட்டாள், தெரியல், தடம், பருவரல், மல், இருநிலம், ஒரு

விய, உருவ, தவல், மட்குழிசி, கோரிகை, உந்தி, காலம், வெரிந், பவம், துப்பு, ஆற்றல், நந்திய, சேமவைப்பு, அரி, உண்கண், கண்ணி, மாழ்கு, மூரல், செய், எழில்.

1. குசேலர் மனைவியின் தன்மைகளைச் சுருக்கி யெழுதுக.
2. இரத்தலின் இழிவு மேற்கண்ட செய்யுட்களில் எவ்வாறு கூறப்பட்டுளது?
3. குசேலர் நீவாரப்புல் தானியத்தைக் கொண்டுவந்தது ஏன்?
4. குசேலர், மனைவியுடன் நடத்தும் இல்வாழ்க்கை எவ்வாறு விளக்கப்பட்டுளது?
5. இவ்வண்ணம் கலாம் விளைக்கும் மைந்தர் : எவ்வண்ணம்?
6. குசேலர், தன் மனைவியை நோக்கிக் கூறியன எவை?
7. உண்மை நூல் உணர்ச்சியில்லார் தன்மைகள் எவை?

## இலக்கணம்

1. அன்மொழித்தொகைக்கு இரண்டு உதாரணங்கள் எழுதுக.
2. இலக்கணக் குறிப்பு வரைக:—செய்தான், தாளோய், தடம், உவள், எண்ணல், நனி.
3. பின்வருவனவற்றைப் பிரித்துக் காட்டுக:—மாசிலா, முட்டாள், தவலரும், வெற்றுடம்பு, மும்மகவு, கண்ணீர், துப்பிதழ்.
4. கொண்ட துன்பம்; என்ன தொடர்?

# 4, பெரிய புராணம்

## திருநாவுக்கரசரும் அப்பூதியடிகளும்

திருநாவுக்கரசர் என்னும் சிவனடியார் பல திருப்பதிகளைத் தரிசித்துத் திங்களூர்க்கு வந்தார். திங்களூரில் நாவுக்கரசரிடம் மாறு அன்பு பூண்டிருந்த அப்பூதியடிகள் வாழ்ந்திருந்தார். கீழ் வரும் பாடல்களில் அப்பூதியடிகளின் மைந்தனுக்கு நிகழ்ந்ததும், அப்பூதியடிகளின் அன்பின் திறனும் நாவுக்கரையரின் தெய்வத் திறனும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

நாவுக்கு மன்னர்திரு நல்லூரின் நம்பர்பால்
மேவுற்ற திருப்பணிகள் மேவுறநாளும் செய்து
பாவுற்ற தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்றதிருத்தொண்டு செய்தொழுகிச்செல்லும்
[நாள். (1)

கருகாவூர் முதலாகக் கண்ணுதலோன் அமர்ந்தரு
[ளும்
திருவாவூர் திருப்பாலைத் துறைபிறவும் சென்றிறை
[ஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு செய்துபெருந் திருநல்
[லூர்
ஒருகாலும் பிரியாதே உள்ளுருகிப் பணிகின்றார். (2)

ஆளுடைய நாயகன்தன் அருள்பெற்றங் ககன்று
[போய்
வாளைபாய் புனல்பழனத் திருப்பழனம் மருங்கணை
[ந்து
காளவிடம் உண்டிருண்ட கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளிரவில் ஆடுவார் கழல்வணங்க நேர்பெற்றார். (3)

அப்பதியைச் சூழ்ந்ததிருப் பதியில்அர னார்மகிழும்
ஒப்பரிய தானங்கள் உள்உருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருள்தேர் நாவினுக்கு வேந்தர்தாம் மேவி
[னார்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகள்ஊர் திங்களூர். (4)

அந்தணரில் மேம்பட்ட அப்பூதி அடிகளார்
தந்தனைய ருடன்சாலை கூவல் குளம் தருதண்ணீர்ப்

பந்தல்பல ஆண்டஅரசெனும்பெயரால் பண்ணின
[மை
வந்தணைந்த வாகீசர் கேட்(டு) அவர்தம் மனை
[நண்ண. (5)

மற்றவரும் மனமகிழ்ந்து மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத் தொழுதெழுந்து, சூழ்ந்து
[மொழிக்
கொற்றவரை அமுதுசெயக் குறைகொள்வார் இறை
[கொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர் திருவுள்ளம் பெறப்
[பெற்றார். (6)

காண்டகைமை இன்றியும்முன் கலந்தபெரும் கேண்
[மையினா
ரூண்டபெரும் காதலுடன் போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅர சமுதுசெயத் திருஅமுதாம் படியமை
[த்து. (7)

திருநாவுக் கரசமுது செய்தருள, மற்றவர்தம்
பெருநாமம் சாற்றியஅப் பிள்ளைதனை அழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கத
[லிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்
[டார். (8)

ஆங்கவனும் விரைவெய்தி, அம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப் புகுமளவில், ஒருநாகம்

தீங்கிழைக்க, அதுபேணுன் திருஅமுது செய்தருள
ஓங்குகத லிக்குருத்துக் கொண்டொல்லை வந்தணைந்
[தான். (9)

தீயவிடம் தலைக்கொள்ளத் தெருமந்து, செழுங்
[குருத்தைத்
தாயர்கரத் தினில்நீட்டித் தளர்ந்துதனைத் தழல்நாகம்
மேயபடி உரைசெய்யான் விழக்கண்டு' "கெட்
[டொழிந்தோம்
தூயவரிங் கமுதுசெயத் தொடங்கார்"என் றது
[ஒளித்தார். (10)

தம்புதல்வன் சவமறைத்துத் தடுமாற்றம் இலராகி
"எம் பெருமான், அமுதுசெய வேண்டும்" என வந்
[திறைஞ்ச
உம்பர்பிரான் திருத்தொண்டர் உள்ளத்தில் தடு
[மாற்றம்
நம்பர்திரு அருளாலே அறிந்தருளி, நவைதீர்ப்பார்.

அன்றவர்கள் மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறும் சடையார்தம் கோயிலின்முன்
[கொணர்வித்தே
'ஒன்றுகொலாம்' எனப்பதிகம் எடுத்துடையான்
[சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளைஉணர்ந்தெழுந்
[திருந்தான். (12)

அருந்தனயன் உயிர்பெற்ற அதுகண்டும் அமுது
[செயா(து)
இருந்ததற்குத் தளர்வெய்தி இடர்உழந்தார் துயர்
[நீங்க,
வருந்துமவர் மனைபுகுந்து, வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி விருப்பினுடன் மேவும்
[நாள். (13)

திங்களூர் தனில்நின்றும் திருமறையோர் பின்செல்
[லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதி
[புகுந்து,
தங்கு பெரும் காதலொடு தம்பெருமான்கழல்சார்ந்து
பொங்கியஅன் பொடுவணங்கி முன்னின்றுபோற்றி
[சைப்பார். (14)

புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொன்
[கழற்கீழ்
அடைமாலை சீலமுடை அப்பூதி அடிகள்தமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி தீந்தமிழின்
தொடைமாலை திருப்பதிகச் சொல்மாலை பாடி
[னார். (15)

—சேக்கிழார்

பயிற்சி

பொருளறிக :—நம்பர், மேவுற, பா, தேவுற்ற, கண்ணுதலோன், இறைஞ்சி, ஆர்வம், ஆளுடையநாயகன், பழனம், காளவிடம், பணி, கூவல், தண்டலை, கதலி, குருநாளக்குருத்து, பேணன், தூயவர், உம்பர்பிரான், நவை, வாகீசத்திருமுனிவர், விடை, புரிசடையார்.

1. நாவுக்கரசர் சென்றிறைஞ்சிய தலங்கள் எவை ?
2. அப்பூதியடிகள் திருத்தொண்டின் சிறப்பை வரைக.

3 'நாவுக்கரசு' என்னும் பெயரையுடைய மகனுக்கு என்னுற்றது?
4. புதல்வன் இறந்ததைக்கண்ட பெற்றோர் என்னசெய்தார்கள்?
5. நாவுக்கரசர் இறந்த பிள்ளையை எவ்வாறு பிழைப்பித்தார்?
6. நாவுக்கரசர் அப்பூதியடிகளுக்கு எவ்வாறு சிறப்பளித்தார்?

## இலக்கணம்

1, அணைந்தவாகீசகர்: என்னதொடர்?
2. காண்டகைமை, பைங்கண்: பிரித்துக் காட்டுக.
3. அப்பிள்ளை: இஃது என்ன சுட்டு? ஏன்?
4. முற்றெச்சத்திற்கு ஓர் உதாரணம் எழுதுக.
5. கொணர்வித்து: இஃது என்ன வினை?
6. தீந்தமிழ்: இஃது என்ன தொகை?

# 5. அரிச்சந்திர புராணம்

## சூழ்வினைக் காண்டம்

அரிச்சந்திரனை எவ்வண்ணமேனும் ஓர் பொய் சொல்லுமாறு செய்வதாக விசுவாமித்திரர் தேவர்கட்கெதிரில் சபதம் செய்திருந்தார். அச்சபதத்தை நிறைவேற்ற முனிவர் அரசனுக்குப் பல இடையூறுகளைச் செய்தார். முனிவர் முதலில் மாயப் பன்றியை ஏவினார். அரசன் அம்பால் அப்பன்றி அடிபட்டு மீண்டு வந்து முனிவரிடம் முறையிட்டது. அதன் பின்னர் முனிவர் பெண்களை ஏவியதையும், பெண்களுக்கு நிகழ்ந்ததையும், முனிவர் சினத்தையும், சாபத்தையும் பின்வரும் செய்யுட்கள் கூறுகின்றன.

### மாயப்பன்றி முறையிடுதல்

வென்றிவேல் மன்னன் விட்ட
வெங்கணை தைத்து வாயால்
துன்றிய குருதி சோரச்
சுழன்றுடல் துடிது டித்துக்

குன்றினைக் கடந்து சென்று
  கோசிகன் தன்பாற் போந்து
பன்றியாய் வந்த மாயை
  பட்டபா டனைத்தும் சொல்லும். (1)

"என்னையா ளுடையாய்! உன்றன்
  ஏவலின் படியா னேகி
மன்னரும் கரியும் மாவும்
  சேனையும் மாளக் கொன்றேன்
பின்னவன் விட்ட அம்பால்
  சுழன்றியான் பிழைத்துப் போந்தேன்
உன்னருள் உடையேற் கல்லால்
  உய்வுண்டோ" என்ற தன்றே. (2)

கோலத்தின் உரையைக் கேளாக்
  கோசிகன் வடவைச் செந்தீச்
சீலத்திற் சிவந்த கண்ணன்
  சிந்தையும் அனைய னூழிக்
காலத்திற் கடுங்கால் அன்ன
  மூச்சினன் கடலில் தோன்றும்
ஆலத்தின் கிளர்ச்சி யன்ன
  கோபத்தி னழன்றெ ழுந்தான். (3)

பேச்சினில் கிளிபோல் செங்கால்
  பெயர்ச்சியில் பெடைபோல் செங்கை
வீச்சினின் மின்போற் சீற்ற
  மிகுதியால் முனிவன் விட்ட

மூச்சினிற் பிறந்தி ரண்டு
மோகினி மாத ராழி
நீச்சினில் நிலைத்து நிற்கும்
நீலமென் கொடிபோல் நின்றார். (4)

அப்பெண்கள் அரிச்சந்திரனை அடைதல்

கனைகழற் கடுங்காற் சேனைக்
கடலினிற் சென்று புக்க
வினைகெடு வேற்க ணாரை
அருள்பொழி விழியால் நோக்கி
இனையர்என் றவரைத் தேரு(து)
ஐயுற வெய்து மெல்லை
புனையிழை மாதர் வந்து
புரவலற் போற்றி நின்றார். (5)

பெண்கள் அரிச்சந்திரனைப் புகழ்ந்து பாடுதல்

"வையநின் னகரி செம்பொன்
வடகிரி நினது பீடம்
வெய்யவன் நினது தீபம்
வேலைமஞ் சனநீர்ச் சாலை
செய்யவள் நினது பாரி
திங்கள்நின் கவிகை செவ்வேல்
ஐயநின் பெருமை எம்மால்
அளவிடற் கரிதோ" என்றார். (6)

"வேதமா முனிவன் வைகும்
மேதகு சாரல் நின்றுன்
பாதமே பணிந்து நோக்கும்
அருத்தியிற் பதறி வந்தோம்

போதமும் நெறியும் இல்லாப்
புல்லியேம் நல்வி யாழும்
கீதமும் சிறிது வல்லேம்
கேள்" எனக் கிளத்திப் பின்னர். (7)

**பெண்கள் பாடியபின் அரிச்சந்திரனை வேண்டுதல்**

"ஏத்திய பரிசி லாளர்க்
கெண்ணிய வனைத்தும் நல்கும்
பார்த்திப! இவையெ லாம்நின்
திருவுளப் படியால் உள்ளேம்
மூர்த்திகள் மூவர்க் காகும்
முடிபுனை யந்நா ளேநீ
சாத்திய தவளக் கொற்றக்
கவிகையைத் தருதி" என்றார். (8)

அரிச்சந்திரன் மறுமொழி

"பழிவழி ஒழுகா நீதிப்
பானுவின் குலத்து வேந்தர்
வழிவழி வந்த கொற்றக்
கவிகையை வழங்க மாட்டேன்
விழிவழி கண்ட வேறு
கவிகையை விளம்பில் உங்கள்
மொழிவழி தருவே" னென்று
மொழிந்தனன் மன்னர் கோமான். (9)

**அரிச்சந்திரன் பெண்களின் சொற்களைக் கேட்டுச் சினந்துகூறுதல்**

"வள்ளலென் றடைந்தோ முன்பால்
வந்திரந் தோர்க்கொன் றீயாக்
கள்ளலென் றறிந்தால் இங்கு
வருகலங் கண்டாய்" என்றார்

உள்ளமும் கண்ணும் செந்தீ
உருத்தெழச் சினந்து வேந்தன்
தள்ளுமென் றருளிச் செய்தான்
விளைவது தன்னை யோரான். (10)

பார்த்திபன் உரைப்பக் கேட்டுப்
பப்பரர் நெருங்கிச் சீறித்
தீத்திரள் செங்கட் சிந்த
நூக்குவான் செல்ல ஏங்கிக்
காத்திரம் நடுங்கக் கையும்
கால்களும் நடுங்க மார்பில்
சேர்த்திய யாழும் போகட்(டு)
இரிந்தனர் திசைம யங்கி. (11)

பெண்கள் முனிவரிடம் முறையிடல்

ஆறுகொண் டோடார் செல்லா
அடவியில் சென்று மேனி
மாறுகொண்டு உதிரம் சிந்த
மஞ்சினைப் பழித்த கூந்தல்
தூறுகொண்(டு) ஈர்க்கச் சேர்ந்த
துகில்கிழிந் தகலச் சாப
வீறுகொண் டேவி விட்ட
முனிவன் முன் வீழ்ந்தார் வந்து. (12)

வேறு

மண்டலந் தனில்விழுப் புண்டசெந் துகில்களும்
மாறடித்த
புண்தனிற் பொழிபசுங் குருதியும் துவரிதழ்ப்
பொருமலுந்தான்

கண்டனன் கௌசிகன் கடையுகக் கனலெனக்
கடியகோபம் [மார்
கொண்டனன் "வந்தவா(று)ஏ(து)" எனக்கோதை
கூறலுற்றார். (13)

"ஐயகேள் நின்னருட் படியினல் அரசன்மாட்(டு)
அணுகிநின்றே
பையவேழ் இசைகளும் பாடிநீ சொன்னவப்
பரிசுரைத்தோம்
கையனெங் களையடித் துமரெனச் செய்தவக்
கண்டனத்தால்
உய்யவும் போகுமோ உரையுமுண் டோவெமக்
குயிருமுண்டோ" (14)

முனிவர் சினந்து அரிச்சந்திரனிடம் செல்லுதல்

எனவுரைத் திடவெயர்த் திடியிடித் தெனநகைத்
திருகணுலும்
கனறெரித் திருபுடைக் கடமனைத் தும்புகை
கடிதுமூடச்
சினமிகுத் திறைவனுக் கிடர்விளைத் திடுவதே
செயலெனத்தன்
மனநினைத் தருமறைத் தவமுனித் திரளுடன்
வரநடந்தான். (15)

முனிவர் சினந்து கூறுதல்

"மாவினைத் துணிசெய்தாய் கேழலுக்கிடர்செய்தாய்
வானளாவுங்
காவினைப் பொடிசெய்தாய் நீதியால் ஈன்றவென்
காதன்மக்கள்

பாவினைப் பழிசெய்தாய் தீவினைக் குரியதோர்
பாவிநீதான்
ஆவினற் றேல்பொதிந் தடுபுலித் தொழில்செய்தாய்
அழகி(து)'' என்றான். (16)

அரிச்சந்திரன் பொறுத்தருள வேண்டுதல்

" சிறியரா னவர்தமக் குரியவே யல்லவோ
தீமைநன் னூல்
அறிஞரா னவர்தமக் கல்லவோ பொறைபிறர்க்
காகுமோதான்
நெறியிலா வினையினேன் ஒருவனைப் பொருளதா
நீமுனிந்தால்
பொறையும்நின் அருளும்என் அளவிலோ விலவெ
னப் போன(து)'' என்றான். (17)

முனிவர் வினவுதல்

மடித்தவா யினன்மிகக் கொதித்தநெஞ் சினனெதிர்
மறுத்து " நீதான்
படித்தவா சகமெலாம் எனக்குநீ பிதற்றிடற்
பாலவோதான்
வடித்தவே ழிசைநினக் கிசைக்கவே வந்தவென்
மக்கள்தம்மை
அடித்தகா ரணமெலாம் எனக்குநீ தக்கவா(று)
அறைதி'' என்றான். (18)

வேறு

அரிச்சந்திரன் மறுமொழி

"இக்க ருங்குழல் ஏழையர் தம்மைநின்
மக்க ளென்ப(து) உணர்ந்தில மாதவ

தக்க வாறுரை யாமையிற் றள்ளினேம்
புக்க தீதுபொ றுத்தரு ணீ" என்றான். (19)

முனிவர் கூறுதல்

'கொய்து மாக்களைக் கொன்றதும் பன்றியை
எய்த தும்மிசை கேட்டிடத் தீனமாய்
வைத தும்மென்றன் மக்களை நீ மணம்
செய்தி டிற்பொறுப் பேன்" என்று செப்பினான். ()

அரசன் பதிலுரை

" அடினும் நின்விழி ஆரழ லால்எனைச்
சுடினும் என்னுடல் தன்னைத் துறந்துயிர்
விடினும் மேனியை வெட்டி அரிந்துகூ(று)
இடினும் இச்சொற்(கு) இசைகிலன் யான்" என்
[றான். (21)

முனிவர் சாபம்

" துடிம ருங்குலத் தோகையர் தங்களைக்
கடிம ணஞ்செயல் தீதென்ற கள்வனே
குடிமை செய்யும் கொடும்புலை யற்குநீ
அடிமை யாவை அறிதிஎன் றோதினான். (22)

—ஆசு வீரகவிராயர்

பயிற்சி

பொருளறிக :—குருதி, கரி, மா, கோலம், ஆலம், கிளர்ச்சி, அழன்று, கனை, இழை, புரவலன், மஞ்சனம், செய்யவள், கவிகை, அருத்தி, போதம், புல்லியேம், களத்தி, தவளம், பானு, வள்ளல், உருத்து, ஓரான், பார்த்திபன், பப்பரர், காத்திரம், போகட்டு, இரிந்தனர், ஆறு, அடவி, உதிரம்,

மஞ்சு, துவர், பரிசு, கடம், கா, பொதிந்து, அடு, அறைதி, துடி, மருங்குல், குடிமை.

1. விசுவாமித்திரரிடம் பன்றி கூறியன எவை?
2. கேழலின் உரையைக் கேட்ட கோசிகன் நிலைமையை எழுதுக.
3. பெண்கள் அரிச்சந்திரனை எவ்வாறு புகழ்ந்தனர்?
4. பெண்கள் அரிச்சந்திரனிடம் எதனை இரந்தனர்?
5. தாம் கேட்டதைத்தர மறுத்த அரிச்சந்திரனை நோக்கிப் பெண்கள் கூறியன எவை?
6. பெண்கள் ஓடியது எவ்வாறு கூறப்பட்டுளது?
7. விசுவாமித்திரர், அரிச்சந்திரன் செயலுக்கு எவ்வுவமை கூறுகின்றார்?
8. இகழ்ச்சிக் குறிப்புள்ள இடமொன்றினை வரைந்து விளக்குக.
9. முனிவர் நிபந்தனையை அரிச்சந்திரன் எவற்றைக் கூறிமறுத்தான்?
10. விசுவாமித்திரர் இட்ட சாபம் என்ன?

## இலக்கணம்

1. பண்புத் தொகைக்கு மூன்று உதாரணங்கள் எழுதுக.
2. வினைத்தொகையை ஓர் உதாரணங்கொண்டு விளக்குக.
3. எண்ணும்மைக்கு ஒருதாரணம் எழுதுக.
4. கேளா: இலக்கணக் குறிப்பு வரைக.
5. ஏவல் ஒருமை வினைமுற்றிற்கு ஓர் உதாரணம் வரைக.
6. உவம உருபுகளில் இரண்டு வரைக.
7. பின்வருவனவற்றைப் பிரித்துக் காட்டுக:—
வெங்கணை, உய்வுண்டோ, பையவேழிசை, கனறெரித்து, ஆவினற்றேல், ஆரழல்.

# IV. பல்சுவை

## 1. திருவரங்கக் கலம்பகம்

அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும்
அடவி கடந்தானும் புடவி யிடந்தானும்
குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசலை யுற்றானும்
முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும்
முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும்
பரம பதத்தானும் சரம விதத்தானும்
பாயல் வடத்தானும் கோயி லிடத்தானே.

## 2. திருவேங்கடத்தந்தாதி

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்
[ணும் விண்ணுந்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்
[கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்திரு வேங்கடத்
[துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூர
[மன்றே.

—ஸ்ரீ பிள்ளைப்பெருமாளையங்கார்

## 3. மதுரைக்கலம்பகம்

அம்மானை

இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனார்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை

விருதுகட்டி யங்கம் வெட்டி வென்றனரே யாமாகில்
அருமையுடம் பொன்றிருகூ றுவதே னம்மானை
ஆனாலுங் காயமிலை ஐயரவர்க் கம்மானை.

## 4. சிதம்பர செய்யுட் கோவை

போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்று
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்காள் [மின்
ஏற்றுவந்தான் பொற்று ளிணை.

—ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள்

## 5. பணவிடுதூது

பணமே எனைப்படைத்த பாக்கியவா னே, வங்
கணமே என் ஆருயிரே கண்ணே—குணநிதியே, (1)

ஈசன்உனக் கொப்பென்பார் ஈசனை உண்டாக்கி
[அவன்
பூசனைநீ செய்விப்பாய் புண்ணியா—பேசுங்கால், (2)

சின்மயமாம் உன்னுடனே செம்புவெள்ளி சேர்ந்
[தாலும்
உன்மயமே எங்கும் உயர்ச்சிகாண்—பொன்மகளை,

மார்புதனில் மாயோன் வரிசையா வைத்ததுநின்
பேர்மகிமை கண்டாய் பெரியோனே—பாருலகில்

ஆன்ற பலகோடி ஆன்மவர்க்கம் அத்தனையும்
ஈன்ற பிரமனும்நீ—ஈன்ற மகன். (5)

# 6. குற்றாலக் குறவஞ்சி

## திருக்குற்றால மலையின் வளம்

### குறத்தி கூறுதல்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவி திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும்தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

—திரிகூட ராசப்ப கவிராயர்

# 7. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே!
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே!
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே!
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே!
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே!
ஊருக் குறந்தை நிகர் கொற்கையோ அம்மானே!
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே!

—ஒட்டக்கூத்தர்

ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்த தம்மானே!
ஒப்பரிய திருவிளையாட்டுறந்தையிலோ அம்மானே!
திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானே!
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்[மானே!
கரையெதிரே டேறியது காவிரியோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்[மானே!
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ அம்[மானே!
பாண்டியனூர் பராக்கிரமம் பகர்வெளிதோ அம்[மானே! (2)

—புகழேந்திப்புலவர்

## 8. தனிப்பாடல்கள்

### சமையற்காரருக்கு இட்ட கட்டளை

சற்றே துவையலரை; தம்பியொரு பச்சடிவை;
வற்றலே தேனும் வறுத்துவை;—குற்றமில்லை;
காயமிட்டுக் கீரைகடை; கம்மென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி. (1)

—சிவஞான முனிவர்

### மேன்மேல் வந்த துன்பம்

ஆவீன, மழைபொழிய, இல்லம்வீழ,
அகத்தடியாள் மெய்ந்நோவ, அடிமைசாவ,
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட,
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள,

சாவோலை கொண்டொருவன் எதிரேசெல்ல,
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந்தீண்ட,
கோவேந்தர் உழுதுண்ட கடமைகேட்க,
குருக்களோ தக்கணைகள் கொடுவென்ருரே. (2)

—இராமச்சந்திரக் கவிராயர்.

## பயிற்சி

பொருளறிக:—அரவு, உரவில், புடவி, குரவை, பரவை, அத்தி, விருது, காயம், போற்றுமின், குமைக்க, நமரங்காள், ஏற்று வந்தான், பொன்மகள், ஆன்ற, மணிவண்ணன், வன்கண்ணன், ஆதித்தன் அம்புலி, மீனவன், தாதகி, காயம், ஈன, கோ.

1. கலம்பகம், அம்மானை, குறவஞ்சி, அந்தாதி: இவற்றின் இலக்கணங்களை வரைக.
2. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருமாலின் எவ்வெச் செயல்களைக் கூறுகின்ருர்?
3. எத்தகையார்க்கு வைகுந்தம் தூரமன்று?
4. ஆனாலும் காயமிலை ஐயரவர்க்கு : இருபொருள்கள் கூறுக.
5. பணத்தின் தன்மை எவ்வாறு விளக்கப்பட்டுளது?
6. குற்ருலத்திரிகூட மலையின் சிறப்பினை வரைக.
7. சோழன், பாண்டியன் ஆகிய இருவர்க்கும் உரிய குதிரை, ஊர், ஆறு, மலை, குலம், மாலை, கொடி, ஆவன எவை? தனித்தனி எழுதுக.
8. புகழேந்தியார், பாண்டியனின் பராக்கிரமத்தை எவ்வாறு எடுத்துரைத்தார்?
9. சிவஞானமுனிவர் சமையற்காரருக்கு இட்ட கட்டளையைச் சுருக்கி எழுதுக.
10. 'ஆவீன' என்ற செய்யுளில் ஒருவருக்கு வந்ததாகக் கூறப்பட்ட துன்பங்கள் எவை?

## இலக்கணம்

1. மந்தியொடு: இங்கு எவ்வேற்றுமை யுள்ளது?
2. மரூஉமொழி என்றால் என்ன? ஒருதாரணம் எழுதி விளக்குக.
3. ஆகு பெயர்க்கு ஒருதாரணம் எழுதுக.
4. பின் வருவனவற்றைப் பிரித்துக் காட்டுக:—
வீசலை, காண்பரிய, ஏற்றுவந்தான், பொற்றுள், சோணுடு, ஏடேறியது, பகர்வெளிதோ, ஆவீன, மாவீரம், சாவோலை, உழுதுண்ட.

# உரைநடைப் பகுதி

# 1. மானங் காத்த மைந்தர்

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

[தமிழ்ப் பெருங் கிழவராகிய இக்கட்டுரையாசிரியர், தம்முடைய வழக்கமான எளிய தமிழ்நடையில் இக்கட்டுரையை எழுதியுள்ளார். இக்கட்டுரை யாசிரியரைப் பற்றியும், கட்டுரையைப் பற்றியும் தமிழுலகம் நன்கு அறியுமாதலின் ஈண்டு எழுதுவது மிகையே யாகும்.]

சில சில ஊர்களில் பரம்பரையாகவே கவிஞர்கள் இந்நாட்டில் இருந்துவருகிறார்கள். அவ்வூர்களுள் வேம்பத்தூரென்பது ஒன்று. அது மதுரைக்குக் கிழக்கே உள்ளது. சங்ககாலமுதல் இன்றளவும் அவ்வூரில் கவிஞர்கள் இருந்து வருகின்றனர். அங்கே உள்ள சோழியப் பிராமணர்களுக்குள் இளைஞர்களும் எளிதிற் செய்யுட்கள் இயற்றும் ஆற்றலுடையவர்கள். வேம்பற்றூர்க் குமரனார் என்னும் சங்கப்புலவர் அவ்வூரினரென்றே கருதப் படுகின்றார்.

அவ்வூர் சோழியர்களிற்பலர்பண்டைக்காலத்தில் வேறு வேறிடஞ்சென்று, தங்கள் தங்கள் கல்வி மிகுதியையும், வருத்தமில்லாமல் செய்யுட்கள் இயற்றும் வன்மையையும் புலப்படுத்தி அங்கங்கேயுள்ள அரசர், பிரபுக்கள் முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்று விளைநிலம் முதலியவற்றை அடைந்து

வாழ்ந்து வந்தனர். அங்ஙனம் அவர்கள் இருந்த ஊர்கள் வீரசோழன் அல்லது வீரை, தென்காசி, கீழைப்பாவூர், வல்லநாடு, இருப்பை யூரணி, திருநெல்வேலி, கரிவலம்வந்தநல்லூர், கற்குளம், பனையூர், குறுங்காவனம் அல்லது குறுங்களாவனம் முதலியனவாம்.

வேம்பத்தூராருள் ஒருவராகிய **பெருமாளைய**ரென்னும் ஒரு வித்துவான் திருநெல்வேலியிலிருந்த சைவவேளாளப் பிரபுக்களின் பேராதரவால் அந்நகரத்தில் வசித்துவரலானார். வரன் முறையாக இலக்கிய இலக்கணங்களைப் பயின்ற அவர் நெல்லையப்பர் விஷயமாக ஏதேனும் நூல் இயற்றவேண்டுமென்று எண்ணினார். அவருடைய அன்பர்களும் அவருக்கு ஆதரவளித்த பிரபுக்களும் பிரபந்தமொன்று செய்தால் நலமாயிருக்கும் என்று விரும்பினர். அங்ஙனமே சில தினங்களில் அவர் **நெல்லை வருக்கக்கோவை** என்னும் பிரபந்தத்தை இயற்றி முடித்தார். மொழிக்கு முதலாகும் உயிரெழுத்துக்களிலும்உயிர்மெய்யெழுத்துக்களிலும் ஒவ்வொன்று ஒவ்வொருபாட்டின் முதலில் முறையே வரும்படி அகப்பொருட்டுறைகளை அமைத்துப் பாடுவது வருக்கக்கோவையாகும். பாம்பலங்காரர் வருக்கக் கோவை, மாறன் வருக்கக்கோவை முதலியன அவ்வகையைச் சார்ந்தவை.

நெல்லைவருக்கக்கோவை இயற்றிநிறைவேறியவுடன் பெருமாளையர் அதனை அரங்கேற்ற எண்ணினார். பலரால் நன்குமதிக்கப்பட்ட பண்டிதராதலின்

அரங்கேற்றம் சிறப்பாக நடைபெறவேண்டுமென் றெண்ணிய அன்பர்கள் அதற்கு வேண்டுவன செய் தமைத்தார்கள். பெருமாளையரும் தாம் இயற்றிய அந்நூல் சிறப்பாக அரங்கேற்றி முடியுமென்ற உவகையில் ஆழ்ந்திருந்தார்.

திருநெல்வேலியில் உள்ள **ஸ்ரீ சாலிவாடீசுவரப் பெருமான்** சந்நதியில் அரங்கேற்றுதற்குரிய ஏற்பாடு கள் செய்யப்பட்டன. அரங்கேற்றும் நாள் வந்தது. உள்ளூராரை அன்றி அயலூர்களிலிருந்தும் பிரபுக் களும் வித்துவான்களும் வந்திருந்தார்கள். பெருங் கூட்டத்தினிடையே பெருமாளையர் இருந்து அரங் கேற்றத்தொடங்கினர். அவருடைய மனம் மிக்க ஊக்கத்தோடு இருந்தது. அவருடைய மாணக்கருள் ஒருவர்,

"தேரோடும் வீதியெலாஞ் செங்கயலுஞ் சங்கினமும்
நீரோ டுலாவிவரும் நெல்லையே—காரோடும்
கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்த ரந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு"

என்னும் காப்புச் செய்யுளை வாசித்தனர்.

இதை வாசித்தவுடன் கூட்டத்தில் இருந்த ஒரு வர் எழுந்து நின்று, "இக்கவியில் ஓர் ஆட்சேபம் இருக்கிறது" என்று சொன்னர். பெருமாளை யருக்கு, "எடுத்த உடனே அபசகுனம்போல இந்த மனிதன் ஏதோ சொல்லுகிறுனே?" என்ற எண் ணம் வரவே அவருடைய ஊக்கம் தளர்ந்துவிட்டது. ஆட்சேபம் செய்தவர், "வீதியெலாம் செங்கயலும்

சங்கினமும் நீரோடுலாவிவரும் என்று பாடியிருக்கிறீரே; வீதியில் கயலும் சங்கினமும் நீரோடு ஓடுகின்றனவா?'' என்றார்.

பலகாலமாக ஜமீன்தார்கள், பிரபுக்கள், தமிழ்க்கவிஞர்கள் முதலியவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்துவந்த பெருமாளையர், ஆட்சேபஞ் செய்வதற்கு விடை கூறுவதைப் பற்றி யோசிக்கவில்லை. அப்பொழுது, 'முதன் முதலாக அரங்கேற்றத்தொடங்கின நூலுக்கு இறங்குதுறையில் நீத்து ஆனதுபோல ஆட்சேபம் உண்டாயிற்றே! நம்முடைய நன்மதிப்புக்கு இழுக்கு வந்துவிட்டதே!' என்ற எண்ணம் அவர் நெஞ்சில் தோன்றி வருத்தத்தொடங்கியது. அதனால் எல்லாவற்றையும் சிறிது மறந்து திசைமயக்கம் அடைந்தவர்போல் அவர் சிறிது நேரம் இருந்தார். ஆட்சேபத்துக்குரிய சமாதானம் சொல்ல இயலாமல் அவர் விழிப்பதாகவே அங்கிருந்தவர்கள் யாவரும் எண்ணினார்கள்.

பெருமாளையருக்குச் சிறிது நேரங்கழிந்தபிறகு தான் நாம் இன்ன நிலையில் இருக்கிறோம் என்ற நினைவு வந்தது. தம்மேல் அவமதிப்பு அதிகமாகும்படி அவ்வளவு நேரம் மௌனமாக இருந்துவிட்டதற்கு வருந்தினார். அவருக்கு அந்நூலை அரங்கேற்ற மனம் இடந்தரவில்லை. ஆகையால் அவர் "கடவுளுடைய கிருபை இப்பொழுது பூரணமாக என்னிடம் இல்லையென்று தோற்றுகிறது. அதனால், அரங்கேற்றத்தை இப்பொழுது வைத்துக்

கொள்ளாமல் பின்பு வைத்துக்கொள்ளலாம்" என்று சபையில் சொல்லிவிட்டு மனவருத்தத்தோடு வீடு சென்றனர்.

வந்திருந்த யாவரும் தத்தமக்குத் தோற்றிய வாறு பலவிதமாக எண்ணிக்கொண்டு சென்றனர். தமக்கிருந்த நன்மதிப்புக்கு ஒரு பெருங்குறைவு வந்துவிட்டதென்று பெருமாளையர் எண்ணி எண்ணி வருந்தினர்; அவருடைய மனப் புண் ஆரவேயில்லை. சில காலத்துக்குப் பின்னர் அவருக்கு ஒரு குமாரர் பிறந்தார். குமாரர் பிறந்த சில வருஷங்களுக்கப் பால் பெருமாளையர் இறந்தனர்.

பெருமாளையருடைய குமாரர் உரிய பருவத்தில் அவ்வூரிலுள்ள வித்துவான்களிடத்தில் தமிழ்க் கல்வி கற்றுவந்தார். "குலவிச்சை கல்லாமற் பாகம் படும்" என்பதற்கேற்ப அவருக்குத் தமி ழறிவு விரைவாகப் பெருகலாயிற்று. தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் நல்ல பயிற்சி யைப்பெற்று விளங்கினர்; கவி இயற்றுவதிலும், பிரசங்கம் செய்வதிலும் மிக்க ஆற்றலை அடைந்தார். ஒருநாள் தம் வீட்டிலுள்ள சுவடிகளை எடுத்து அவர் பரிசோதித்து வருகையில் நெல்லைவருக்கக்கோவை கிடைத்தது. அது தம் தந்தையாரால் இயற்றப் பெற்றதென்று அறிந்து, அவர் அதைப் படித்துப் பார்த்து இன்புற்ருர். அந்நூல் இருப்பதாகவே அதுகாறும் அவர் அறியவில்லை. அக்காலத்தில் அவருடைய தாயார் இருந்தனர். அவரிடம் அதைப் பற்றி விசாரிக்கலானுர்.

**குமாரர் :** அம்மா! அப்பா இயற்றிய நூல் ஏதாவது உண்டா?

**தாயார் :** ஒரு புஸ்தகம் எழுதினர்; அதை எழுதியது முதல்தான் அவருக்குச் சந்தோஷமே இல்லாமற் போயிற்று.

**குமாரர் :** அந்தப் புஸ்தகந்தானு இது?

(குமாரர் தாயாருக்குக் கையிலிருந்த சுவடியைக் காட்டினர்.)

**தாயார் :** ஐயோ அந்தச் சுவடியை நீ ஏனப்பா எடுத்தாய்? உன்னுடைய தகப்பனர் அதனல்அடைந்த வருத்தம் போதாதா? அதை ஆற்றிலாவது கிணற்றிலாவது போட்டுவிடு; அதுதான் உன் தகப்பனரைக் கெடுக்க வந்த சனியன்.

**குமாரர் :** என்ன அம்மா! அப்படிச் சொல்லுகிருயே? அப்பா எவ்வளவு அழகாக இதை இயற்றியிருக்கிருர்! இந்த அருமையான நூலே இவ்வளவு கேவலப்படுத்திப் பேசலாமா? தோஷமல்லவா?

**தாயார் :** தோஷமா? எங்களுடைய சந்தோஷமெல்லாம் போனதற்கு இதுதானே காரணம்?

**குமாரர் :** எனக்கு ஒன்றும் விளங்கவில்லே. இந்தப் புஸ்தகம் உங்களே என்ன பண்ணியது?

**தாயார் :** அது பழையகதை; அதைப்பற்றி அந்தக் காலத்தில் துக்கப்பட்டது போதாதென்று இப்பொழுது வேறு சொல்லி வருத்தப்படவேண்டுமா?

**குமாரர் :** எதுவாயிருந்தாலும் சொல்லி விடு. எனக்கு இந்தப் புஸ்தகத்தைப் படித்து எல்லோ

ருக்கும் பாடஞ் சொல்லிப் பரவச்செய்யவேண்டு மென்ற ஆசை தோன்றி இருக்கிறது. இதை எப் போது அப்பா இயற்றினர்? எங்கே அரங்கேற்றி னர்.

**தாயார் :** அரங்கேற்றமா! அதைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள்: நீ பிறப்பதற்கு முன்பே இதை அவர் பாடினர். அரங்கேற்றத்துக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள். அரங்கேற்றம் ஆரம்பிக்கும்போது எவனோ ஒருவன் முதற்பாட்டே தப்பு என்றானம். அவ்வளவுதான். உடனே அவ ருக்கு மானத்தால் மனம் ஒடிந்து போய்விட்டது. அதன் பிறகு அவருக்குப் பழைய சந்தோஷம் வரவேயில்லை. அரங்கேற்றமே நடக்கவில்லை. அந் தச் சுவடியையும் அவர் மூலையிலே போட்டுவிட்டார்.

**குமாரர் :** முதற்பாட்டிலே என்ன தப்பு? ஏதா வது ஞாபகம் இருக்கிறதா?

**தாயார்:** அவர் ஒன்றும் பேசவேயில்லை. யாரோ சொல்லிக்கொண்டிருந்தார்கள்; அது தான் என் காதில் விழுந்தது: வீதியெல்லாம் மீனும் சங்கும் நீரோடு ஓடுமா என்று அவன் கேட்டானும்; இது தான் ஞாபகம் இருக்கிறது.

குமாரர் ஒருவகையாக ஆட்சேபம் இன்ன தென்பதை ஊகித்து அறிந்தனர்; பிறகு முதியவர் களிடம் விசாரித்தும் தெரிந்துகொண்டார். அவர் மீண்டும் மீண்டும் அந்த நூலைப் படித்துப் படித்து இன்புற்றார். எவ்வாறேனும் தம் தந்தையாருக்கு இருந்த இகழ்ச்சியை நீக்கிவிடவேண்டுமென்ற

உறுதியை மேற்கொண்டார். அந்த நூலைத் தாமே அரங்கேற்றி, அதில் யாதொரு பிழையும் இல்லை யென்பதை எடுத்துக் காட்டவேண்டுமென்று எண்ணினர்.

அவர் விரும்பியபடி நெல்லையிலுள்ள அன்பர்கள் முயற்சியினல் ஸ்ரீ அனவரததான நாயகர் சந்நதியில் அரங்கேற்றுவதற்காக ஒரு பெரிய சபை கூட்டப்பட்டது. * முதற்பாட்டுக்கு அவர் அர்த்தம் சொல்லத் தொடங்கினர்; "இது பிழையுள்ளதென்று முன்பு ஒருவர் ஆட்சேபிக்க, என் தந்தையார் மனவருத்தத்தால் அரங்கேற்றவில்லையென்று கேள்வியுற்றேன். இதில் ஒருவிதமான பிழையும் இல்லை. வீதியெல்லாம் தேரோடும்; செங்கயலும் சங்கினமும் நீரோடு உலாவிவரும்; இத்தகைய நெல்லையெனப் பொருள் கொள்ளவேண்டும். இவ்

---

* இச் செய்யுளின் பிற்பகுதியின் பொருள் வருமாறு :—கார் ஓடும்-கருநிறம் பரவிய, கந்தரத்தர்-திருக்கழுத்தை உடையவரும், அந்தரத்தர்-ஞானகாயத்தையே திருமேனியாகக் கொண்டவரும், கந்து அரத்தர்-பற்றுக் கோடாகிய செம்மைநிற முடையவரும், அம் தரத்தர்-திருமுடியில் நீரைத் தாங்கியவரும், கந்தர் அத்தர்-முருகக்கடவுளின் தந்தையாரும், அம் தரத்தர்-அழகிய தகுதியையுடையவருமாகிய சிவபெருமான், காப்பு-காவல் புரிந்து வீற்றிருக்கும் இடம், நெல்லை-காப்பென்று முடிக்க.

அத்தலத்துக்கு உரியதாக அடியேன் இயற்றும் நூல் இனிது முடியும் வண்ணம் பாதுகாத்தருள்வரென்பது கருத்து.

அந்தரம்-ஆகாயம்; கந்து-பற்றுக்கோடு; அரத்தம்-சிவப்பு; அம்-நீர், அழகு; தரம்-தகுதி.

இந்தப் பொருள் என்னுடைய ஆசிரியர் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் முன்பு தெரியவந்தது.

வளவு அருமையான நூலை இயற்றிய என் தந்தை யாருக்கு இந்த ஆட்சேபத்துக்கு விடை தெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை. ‘மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்’ என்பதற்கேற்ப மிக்க மானம் உடையவராதலின் எல்லாவற்றையும் மறந்து துன் பக்கடலில் ஆழ்ந்தார். ஆட்சேபித்த பொறாமைக் காரர் யாரோ தெரியவில்லை; அந்த ஒருவருடைய செயலால் அக்காலத்தில் இருந்த பலரும் இந்நூலின் அருமை பெருமைகளை அறிந்து இன்புறக் கூட வில்லை. என்செய்வது !” என்று சொல்லிவிட்டு மேலே நூல் முழுவதற்கும் விரிவாகப் பொருள்கூறி நன்றாக அரங்கேற்றி முடித்தார். அந்நூலின் சுவையில் ஈடுபட்டவர்கள், “இதுகாறும் இந்த நூலை அறியாமல்இருந்தோமே” என்றெண்ணி இரங்கினர் கள். மிக்க முதுமையை யுடையவர்கள் “இவ்வளவு அரியநூலைச் செய்தும் அதை நாங்களெல்லாம் தெரிந்து இன்புறவும், அதனால் உண்டாகும் பயனைப் பெருமாளையர் அடையவும் இயலாமற் போயிற்றே!” என்று வருந்தினர். “புலிக்குப் பிறந்தது பூனை யாகுமா ? முன்னே முளைத்த காதினிலும் பின்னே முளைத்த கொம்பு வலிதென்பதற்கு இலக்கியம் போன்றவர் இந்த இளைய வித்துவான்” என்று அவரை வித்துவான்கள் பலர் கொண்டாடினர். யாவரும் மகிழ்ந்து பல பெருஞ் சிறப்புக்களை அவ ருக்குச் செய்தனர்.

அவர் தம் வீட்டிற்கு வந்தார். அவருடைய தாயார், அரங்கேற்றம் நன்றாக நிறைவேறியதை

யும், தம் குமாரர் சிறப்படைந்ததையும் முன்பே அறிந்தவராய், எல்லை இல்லாத உவகையுடன் அவர் வரவை எதிர்நோக்கி இருந்தார். வரும்போதே குமாரர், " அம்மா ! அப்பாவுக்கு இருந்த குறையை நீக்கிவிட்டேன் " என்று சொல்லிக்கொண்டு வந்தார்.

" என் சிங்கமே ! இப்பொழுது அவர் இருந்து சந்தோஷமடையக் கொடுத்துவைக்க வில்லையே !" என்னும்பொழுதே தாயாரின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பமும் துக்கக் கண்ணீரும் கலந்து சிந்தின.

[இந்த அரிய செய்தியை எனக்குச் சொல்லியவர், சேலத்தைச் சார்ந்த சாருவாயென்னும் ஊரிலிருந்தகதிர் வேற்கவிராய ரென்பவர்.]

## பயிற்சி

1. சோழியர்கள் தங்கியிருந்த ஊர்கள் எவை ?
2. பெருமாளையர் இயற்றி முடித்த நூல் யாது ?
3. வருக்கக் கோவை என்றால் என்ன ? விளக்குக
4. நூலரங்கேற்றத்தின் பொழுது நிகழ்ந்தனவற்றைச் சுருக்கி வரைக.
5. " குலவிச்சை கல்லாமற் பாகம்படும் " : விளக்குக.
6. முதற்பாட்டில் உள்ளதென்று கூறப்பட்ட தவறுயாது ?
7. முதற் செய்யுளின் கருத்தைச் சுருக்கிவரைக.
8. பெருமாளையரின் மைந்தர் முதற் செய்யுளில் தவறில்லை என்று எவ்வாறு விளக்கினர் ?
9. பெருமாளையரின் மைந்தரை அனைவரும் எவ்வாறு கொண்டாடினர் ?
10. மைந்தர் தன் தந்தையின் மானத்தை எவ்வாறு காப்பாற்றினர் ?

# 2. நூல் நிலையம்

(தொகுத்தோன்)

மக்கள் தமக்கு உற்றதுணையாகிய கல்வியைப் பல்லாற்ருனும் பெறவேண்டும். அஃது ஒருவனை மனிதனுகச் செய்யும். கல்வி யுடையோரே கண்ணுடையர் எனப்படுவர். ஏனைக்கல்லார் முகத்திரண்டு புண்ணுடையர் எனவே கருதப்படுவர். அக்கல்வி கரையற்றது. கல்வி கற்போர் நாட்களோ குறைவு பெற்றது. மக்கள் கல்வி கற்கத் தொடங்குதற்குரிய காலம் இளமைப் பருவமேயாம். இளமையிற் கல்வியே சிலையில் எழுத்தைப் போன்று, எந்நாளும் நிலைத்து நிற்கும். ஆதலானன்றே மக்கள் இளம் பருவத்திலேயே பள்ளியிற் சேர்க்கப்படுகின்றனர்!

பள்ளியிற் பயிலும் மாணவர்கள் தம் பாட புத்தகங்களைக் கற்றல் ஒன்றே பயனளியாது. அவர்கள் பல புத்தகங்களைக் கற்றுத் தேர்ச்சியுறவேண்டும். புத்தகங்கள் பலவற்றை மாணவர்கள் ஓர் குறித்த காலவரையறைக்குட் பயில இயலாதாதலால்தான், பள்ளியிற் சில புத்தகங்களையே பாட புத்தகமாக வைத்திருக்கின்றனர். பள்ளிப் பாட புத்தகங்கள் ஏனைய புத்தகங்களைப் பயில ஓர் வழி காட்டியாகும். அவ்வழி காட்டியின் துணைகொண்டு மாணவர்கள் தம்மறிவு வன்மையைச் செலுத்திப் பல புத்தகங்களைக் கற்றல் வேண்டும். அவ்வாறு பல புத்தகங்களைக் கற்பதனுல் உண்டாகும் அறிவே அறிவெனப்படும்.

மாணவர்கள் பல புத்தகங்களைக் கற்றல் இன்றியமையாததாயினும், அவர்கள் அப்புத்தகங்கள் பலவற்றைத் தாமே விலைகொடுத்து வாங்குதல் இயலாததாகும். மாணவர்க்கேயன்றி ஏனையோர்க்கும் அஃதியலாததே. இக்குறையை ஒழிக்கக் கருதியே நூல் நிலயங்கள் எழுந்தனவென்று கொள்ளுதல் பொருந்தும்.

அச்சு, காகிதம் முதலிய சாதனங்கள் இல்லாத முற்காலத்தில் அறிஞர் கூடிக் கழகம் நடத்திவந்தனர். ஆனால் இக்காலத்தில் மனிதன் தன் அறிவுப் பெருக்கினால் அச்சு, காகிதம் முதலியவற்றை உண்டாக்கியுள்ளானாதலால் மக்கள் கல்வியை எளிதிற் கற்க இயல்கின்றது. அவ்வெளிமையை நூல் நிலயங்கள் மிக எளியதாகச் செய்கின்றன.

நூல் நிலயங்கள், மாணவர்க்கென்று பள்ளிகளில் அமைத்திருக்கும் நூல் நிலயங்கள், பொது மக்கட்கென்று அரசாங்கத்தாராலோ அன்றி நகர பரிபாலன சபையார், வள்ளன்மையுடையார் முதலியோராலோ ஏற்படுத்தப்பட்டிருக்கும் நூல் நிலயங்கள் எனச் சிலதிறப்படுவனவாம். பள்ளியிலுள்ள நூல் நிலயங்களில் மாணவர் அறிவுக் கேற்றனவும், நீதி பயப்பனவுமாகிய நூல்கள் மலிந்திருக்கும். பொதுமக்களின் நிலயங்களில் பல திறப்பட்ட நூல்கள் இடம் பெற்றிருக்கும். அன்றியும் பத்திரிகைகள் படிக்கவும் தனியிடங்கள் அந்நூல் நிலயங்களோடு இயைக்கப் படுதலும் உண்டு.

மாணவர்கள் தமக்கென்று நிறுவப் பெற்றிருக்கும் நூல் நிலையங்களிற் சென்று நூல்கள் பயில்வதைத் தம் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். மாணவர் நூல் நிலையங்களில் பல நூல்களைக் கற்க வேண்டும் என்பதற்கு, அவர்கள் தம் பாட புத்தகங்கள் கற்பதைப் புறக்கணித்து வேறு நூல்களைப் பயிலுதல் வேண்டும் என்று தவறான பொருள் கொள்ளுதல் தகாது. பாடபுத்தகங்களைப் படித்து எஞ்சிய காலத்திலேயே மாணவர்கள் ஏனைய நூல்களைக் கற்கவேண்டும். ஆசிரியரிடமிருந்து பெற்ற கல்வியறிவை, புத்தகநிலையக் கல்வி விரிவுறச் செய்கின்றது. புத்தக நிலையத்திற்குச் செல்லும் வழக்கம் மாணவரைப் பல இடையூறுகளினின்றும் நீக்குகின்றது. பாட புத்தகங்களைக் கற்று எஞ்சிய பொழுதை மாணவர்கள் பெரும்பாலும் பயனில் சொல் பாராட்டிக் கழிப்பர். அன்றியும் செய்யத் தகாதன சிலவற்றைச் செய்யவும் எண்ணுவர். ஆதலின் மாணவர்கள் நூல் நிலையங்களில் ஓய்வு நேரங்களைக் கழித்தல் அவர்களுக்குத் தீமைகள் வாராமல் தடுத்து நன்மைகளை உண்டாக்கும் என்பது வெள்ளிடைமலையேயாம்.

மாணவ நிலையைக் கடந்தோர்க்குப் பொது நூல் நிலையங்கள் பலவிதங்களில் உதவியாகவிருக்கும். நாள்முழுவதும் உழைப்போர்க்கு நூல் நிலையங்கள் ஓர் மாற்று ஆகும். மக்கள் மனவருத்தத்தை, நூல் நிலையங்களிற் சென்று நூல்களைப் படிக்கும் வழக்கம் ஓர் விதத்தில் மாற்றும். அன்றி

யும் நூல் நிலையங்கள், அவர்கள் தம் மாணவநிலை யிற்கற்ற கல்வியை மறவாமல் இருக்கச் செய்து, அவர்தம் கல்வியறிவைப் பரக்கச் செய்கின்றன.

நம் முன்னோருடையனவும், ஏனை நாட்டின ருடையனவும் ஆகிய சரித்திரங்களைக் கற்றல் நமக் குப் பெரும் பயனை அளிக்கும். ஏனைய நாட்டு மக்க ளின் நடையுடை பாவனைகளையறிந்து, நம்மவற்றை அவற்றுடன் ஒப்பிட்டுப்பார்த்து, நல்லனவற்றைக் கைக்கொண்டு, தீயனவற்றை விட்டொழிக்கலாம். பல நாட்டினரின் கைத்தொழில்களைக் கூறும் நூல் களைக் கற்குமுகத்தான் நம் கைத்தொழிலையொழுங்கு படுத்தலாம். அன்றியும் நாம் அறியாத கைத் தொழில்களையும் அறியவியலும். பயிர்த் தொழி லைச் செவ்விய முறையில் நடத்த அவற்றைப்பற்றிக் கூறும் நூல்களைக் கற்றறியலாம். பலவித நாடக நூல்களையும், சிறுகதைகளையும் படிப்பது வாழ்க்கை யில் மகிழ்ச்சி அற்றோர்க்குச் சின்னேரமாயினும் சுவையையளிக்கும். ஆதலின் மக்கள் நூல்நிலையங் கட்குச் சென்று அவரவர் மனதிற்கியைந்த நூல் களைக் கற்றல் பலதிறத்தில் பலனளிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நூல் நிலையங்களுக்குச் செல்ல இயலாதோர் தம்மிருக் கையிலிருந்தே பல நூல்களைப்பெற்றுப் பயிலுதல் வேண்டும். அதற்கேற்ற வசதிகள் பல நூல் நிலையங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை இல்லாவிடினும் மக்கள் சிலர் ஒற்றுமையுடன்

உழைத்தால் அவ்வசதிகளை எளிதில் எல்லா நூல் நிலையங்களிலும் ஏற்படுத்திவிடலாம்.

நகர மக்களேயன்றி நாட்டு மக்களும், தம் பொழுதை வீணே கழியாமல் நூல்களைக் கற்றல் வேண்டும். அவற்றிற்கென்று 'இயங்கும் நூல் நிலையங்கள்' கிராமங்கள் தோறும் சென்று, கற்கமனமில்லாதோரையும் கற்கச் செய்தல் வேண்டும். இத்தகைய இயங்கும் நூல் நிலையங்கள் நம் நாட்டில் பெருகித் தழைக்கும் நன்னாள் சேய்மைத் தன்று. சில்லாண்டுகளில் அம்முறை நடைபெற்று வருமென்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. எனினும், அரசாங்கத்தாரும், நகரசபையாரும், ஜில்லா போர்டாரும் அம்முறை விரைவில் தோன்றி நன்கு தன் வேலையைச் செய்யுமாறு செய்ய இறைவன் அருள் கூட்டுவார் என்பது திண்ணம்.

## பயிற்சி

1. மாணவர்களை இளம்பருவத்திலேயே பள்ளியிற் சேர்ப்பது ஏன்?
2. பள்ளியிற் சில புத்தகங்களையே பாடமாக வைத்திருப்பது ஏன்?
3. நூல் நிலயங்கள் தோன்றியதற்குக் காரணங்கள் யாவை?
4. பள்ளி நூல்நிலையத்தால் மாணவர்கள் பெறும்நன்மைகளைச் சுருக்கிவரைக.
5. மாணவ நிலையைக் கடந்தோர்க்கு நூல் நிலையங்கள் எத்தகைய நன்மைகளைச் செய்கின்றன?
6. எவ்வெந்நூல்களைக் கற்றல் மக்களுக்கு மிகுதியான பயனை அளிக்கும்?

7. நூல் நிலையங்கட்குச் செல்ல இயலாதோர் எவ்விதத்தில் நூல் நிலையங்களால் பயனடையச் செய்யலாம்?
8. 'இயங்கும் நூல் நிலையங்கள்' என்றால் என்ன? அவற்றால் விளையும் நன்மைகள் எவை?
9. நூல் நிலையத்தால் நாம் அடையும் நன்மைகளைச் சுருக்கி ஓர் கட்டுரை வரைக.

---

# 3. புகழேந்திப் புலவர்

திரு. வித்துவான் வே. வேங்கடராசலு ரெட்டியார்
தமிழ்ச் சொற்பொழிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை

(நளவெண்பாவை நன்கு இயற்றி அழியாப்புகழைக் கொண்ட புகழேந்தியாரைப்பற்றி நாம் அறிதல் இன்றியமையாததாகும். அவரைப்பற்றிய வரலாற்றில் கட்டுக்கதைகள் போல் நம்பத்தகாதனவாய்ச் சில செய்திகள் காணப்படினும் புகழேந்தியார் சிறந்த புலவரென்பது வெள்ளிடை மலையே. கட்டுரையாசிரியரின் சீரிய நடை போற்றத் தகுந்ததாகும்.)

நமது தமிழ்மொழியிற் சிறந்த காப்பியங்களை இயற்றி, மக்கட்கு அறிவைப் பெருக்கி, புகழ்பெற்று விளங்கிய பெரும் புலவர் பலருட் புகழேந்திப் புலவர் ஒருவர். அவரது வாழ்க்கை வரலாறு உண்மையாக எழுதப்படவில்லை; எழுதப்பட்டிருப்பனவற்றிலும் பெரும்பாலானவை புனைந்துரைகளேயாகும். ஆயினும், அக்கதைகளினால், சில உண்மைச் செய்திகளும் நாம் அறியக்கூடும். ஆதலின், அவரைக் குறித்து வழங்கும் கதைகளுட் சிலவற்றை இங்குக் கூறுவோம்:

'தெண்ணீர் வயற்றெண்டை, நன்னாடு சான்றோர் உடைத்து' என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற தொண்டை மண்டலத்தில், பொன்விளைந்த களத்தூரில் நந்தம் புகழேந்திப் புலவர் தோன்றினார். அவர், இளமைப்பருவத்திலேயே தமிழ்மொழியை நன்கு பயின்று, பெரும் புலமை அடைந்தார். பின்னர், அவர் பாண்டிநாட்டில் மதுரையை யடைந்து, அங்கு அரசு புரிந்திருந்த பாண்டியனைச் சார்ந்து அவனால் நன்கு மதிக்கப்பெற்று, அவன் அவைக் களத்திற் பெரும் புலவராய் விளங்கியிருந்தார். 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பது உண்மையுரையே அன்றே!

அக்காலத்தில், சோழநாட்டை யாண்டுவந்த குலோத்துங்கசோழன் அவையில், ஒட்டக்கூத்தர் என்பவர் பெரும் புலவராக விளங்கினார். அவர் அவ்வரசனுக்கு ஆசிரியராயும், அமர்ந்திருந்தாராதலின், அவரை அரசன் பெரிதும் போற்றிவந்தான்.

அந்நாளில், அவ்வரசனுக்கு மணம் பேசும் பொருட்டு ஒட்டக்கூத்தர் மதுரையை அடைந்தார். அவர், பாண்டியன் அவையில் புலவராய் விளங்கிய புகழேந்தியாருடன் அளவளாவிக்கொண் டிருக்கையில், பொன்னியாறு பாய்தலால் செந்நெல் விளைந்து செழிப்புறும் தமது சோணாட்டினையும், சோழனையும் புகழ்ந்து,

'கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை'
'ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை'

'வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை'
'ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானை'

என்று கூறினர். அவற்றைக் கேட்ட புகழேந்தியார்,

'கரையெதிர்ந் தேறியது காவிரியோ அம்மானை'
'சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை'
'திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானை'
'ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானை'

என்று பாண்டிநாட்டின் மேம்பாடும், வழுதியர் மரபின் மாண்பும், செந்தமிழின் சீர்மையும் வெளிப்படக் கூறினர். அவர் கூறிய சொற்களால், ஒட்டக்கூத்தர் உள்ளம் கொதிப்புற்றாராயினும், அப்பொழுது ஒன்றும் கூறாராய் அமைதியுற்றிருந்தார்.

பின்னர், கூத்தர் வேண்டியவாறே பாண்டியன் தன் புதல்வியைச் சோழனுக்கு ஈய உடம்பட்டதனல், திருமணம் செவ்விதின் நிகழ்ந்தது. பாண்டியன், தன் புதல்விக்குப் பலவகை வரிசைகளை நல்கி தோழியரையும், தாதியரையும் உடன்விடுத்தான்; அன்றியும், அக்கோமகளுக்குத் தமிழாசிரியராய் விளங்கிய புகழேந்தியாரையும் துணைபுரியுமாறு அனுப்பினன். அவரும் காவலன் கருத்திற் கிசைந்து, ஆண்டு நின்றும் அகன்று, சோணாட்டை அடைந்தார்.

இவ்வாறு புகழேந்திப் புலவர் சோழனவையை அடைந்ததை அறிந்த ஒட்டக்கூத்தர் உள்ளம் களித்தார்; தமது நாட்டையும், தம் அரசர் குடியை

யும் இழித்துக் கூறிய புலவரை இழிவுபடுத்தச் சமயம் வாய்த்தது என்று கருதி இன்புற்றார்; பின்பு சோழன்முன் சென்று, 'அரசே, யான் தமக்கு மணம்பேசப் பாண்டியன் அவைக்குச் சென்றிருந்த ஞான்று, சிறிதும் அஞ்சாது, நம்குடியையும் நமது நாட்டையும் என்முன் இகழ்ந்து கூறிய புன்புலவன் இங்கு எய்தியுள்ளான்; அவனை யொறுத்தல் முறையாகும்' என்று அவன் மனங்கொள்ளுமாறு புகன்றார். புலவர் கூறியதை அறிந்த புரவலன், பாவலரைக் காவலிலிடுதற்கு மனம் இயைந்திலனாயினும் அவர் மாற்றத்தை மறுக்கவொண்ணாமல், அவ்வாறு செய்ய உடன்பட்டு, புகழேந்திப் புலவரைச் சிறையிலிடுமாறு காவலர்க்கு ஆணையிட்டான். அதனையறிந்த புகழேந்தியார் மாறு கூறாது, சிறைச்சாலையை அடைந்திருந்தார்.

புகழேந்திப்புலவர் சிறைச்சாலையில் இருக்குங் காலத்தில் ஒரு நாள், சோழன் ஒட்டக்கூத்தர் முதலானவருடன் உலாவச் செல்கையில், அச் சிறைச்சாலையை யணுகினான். அப்பொழுது புகழேந்தியார் சிறைச்சாலையின் மேலிடத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அவரைக் கண்ட வேந்தன் ஒட்டக்கூத்தரை நோக்கி, 'இவர், பாண்டிநாட்டுப் பெரும் புலவரல்லரோ?' என்று வினவ, கூத்தர், 'ஆம், ஆயினும், ஞாயிற்றின்முன் மின்மினி ஒளி செய்வதுண்டோ?' என்று செருக்குடன்,

"மான்நிற்கு மோஅந்த வாளரிவேங்கைமுன், வற்றிச்சேத்த
கான்நிற்கு மோஅவ் வெரியும் தழல்முன்; கனைகடலின்

மீன்நிற்கு மோஅந்த வேங்கட் சுறவமுன்; வீசுபனி
தான்நிற்கு மோஅக் கதிரோன் உதயத்தில்தார்மன்னனே"
என ஒரு பாட்டுப் பாடினர்.

அதனைக்கேட்ட புகழேந்தியார் அரசனை நோக்கி, 'கூத்தர் பாடிய பாட்டை ஒட்டிப் பாடவோ, அன்றி வெட்டிப் பாடவோ?' என்று வினவினர். அரசன் ஒட்டிப் பாடுமாறு வேண்டலும், உடனே அவர்,

"மான்அவன் நானந்தவாளரி வேங்கையும்: வற்றிச்சேத்த
கான்அவன் நானவ் வெரியும் தழலும்; கனைகடலின்
மீன்அவன் நானந்த வேங்கட் சுறவமும்; வீசுபனி
தான்அவன் நானக் கதிரோன் உதயமும்தார்மன்னனே!"

என்று, அவர் பாடிய பாட்டை ஒட்டிப் பாடினர். அப்பாட்டு கூத்தர் உள்ளத்தில், 'வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போல்' வருத்துவதாயிற்று. அரசன் புகழேந்தியாரது கவித்திறமையை வியந்தானாயினும், கூத்தர் குறிப்பிற்கு இணங்கி வாளா சென்றான்.

அக்காலத்தில் ஒட்டக்கூத்தர், தம்பால் வரும் புலவர்களைச் சிறையிலிட்டு வைத்து, நவராத்திரி பூசனை நாட்களில் அவரை வருவித்துப் பரீக்ஷை செய்து, பரீக்ஷையில் தோல்வியுற்றோர்களுள் ஒருவர் சிகையை மற்றொருவர் சிகையோடு முடிந்து, ஒருங்கே தேவிமுன் நிறுத்தி, பலியிடுதல் வழக்காறயிருந்தது. அவ்வண்ணம், கூத்தர் சிறையில் இடுவித்த புலவர்களுட் கூரறிவுடையசிலரைத் தேர்ந்து,

அவர்களுக்குப் புகழேந்திப் புலவர் செந்தமிழின் இயல்களை நன்கு கற்பித்தார். அவர்களுள் குயவர், கொல்லர், தச்சர் முதலான பல குலத்தினர் இருந்தனர். அவர்களனைவரும் புகழேந்திப் புலவரால் ஆழ்ந்த அறிவும் தேர்ந்த புலமையும் அடைந்தனர்.

வழக்கம்போல் நவராத்திரி நாட்களில் ஒட்டக்கூத்தர் சிறையிலடைத்திருந்த புலவரைத் தருவித்து, ஒவ்வொருவரையும் பரீக்ஷை செய்யலாயினர். அவர்கள், கூத்தர் வினவிற்கு ஏற்ற மறுமொழியாகத் தனித்தனியே பாட்டுப் பாடி விடையிறுத்தனர். புலவர்கள் பாடிய பாட்டுக்கள் ஒட்டக்கூத்தரின் செருக்கை யடக்கின. செருக் கடங்கிய கூத்தர், அவரனைவருக்கும் பரிசில் வழங்கி விடைகொடுத்தார்.

புலவர்கள், ஒட்டக்கூத்தர்பால் பரிசில் பெற்ற செய்தி நகர் முழுவதும் பரவியது; கேட்டோரனைவரும் வியந்தனர்; புகழேந்தியாரின் புலமையைப் புகழ்ந்தனர். அதனை யறிந்த பாங்கி யொருத்தி விரைந்து அரசியை யணுகி, 'தாயே, இன்று நிகழ்ந்த புதுமையை அறிந்தீரோ! மதுரையிலிருந்து வந்த புலவரால், இன்று புலவர் பலர் பரிசில் பெற்றனர்' என்று வியப்புடன் தெரிவித்தாள். அதனைக் கேட்ட தேவி, தம் ஆசிரியரின் நினைவு வர, அவ்வரலாறு முழுதும் அறிவிக்குமாறு வினவினள். அவள், பாண்டிநாட்டுப் புலவரொருவர் ஒட்டக்கூத்தரால் சிறையிடப் பட்டிருக்கின்றார் என்றும், அவர், புலவர் பலருக்கு நன்கு கற்பித்ததனால் அவர்

கள் ஒட்டக்கூத்தர் வெள்குமாறு பாடிப் பரிசில் பெற்றனர் என்றும் நிகழ்ந்தவற்றைப் பகர்ந்தாள்.

அச்செய்தியைச் செவியேற்ற அரசியார், சிறையிலிருக்கும் புலவர், தம் ஆசிரியரே என உறுதி கொண்டு, மனம் நொந்து, அரசன்மேற் சினங் கொண்டு, கோயிலினுள் ஓரறைக்குட் போந்து, கதவினைத் தாழிட்டுக்கொண் டிருந்தார். கோயிலை யடைந்த கொற்றவன், தேவியின் சினத்தை அறிந்து, அதனைத் தீர்க்குமாறு ஒட்டக்கூத்தரை வேண்டினன். கூத்தர், கோத்தேவி யிருக்கும் அறையைக் குறுகி,

"நானே இனிஉனை வேண்டுவ தில்லை; நளினமலர்த்
தேனே கபாடம் திறந்திடு வாய்; திற வாவிடிலோ
வானே அனைய இரவி குலாதிபன் வாயில்வந்தால்
தானே திறக்கும்நின் கையித ழாகிய தாமரையே"

என்று ஒரு பாட்டுப் பாடி, கதவம் திறக்குமாறு வேண்டினர். அச் செய்யுளைக் கேட்ட தேவி, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' எனச் சொல்லிக்கொண்டு, பின்னும் ஒரு தாழிட்டு, அகத்தே யிருந்தார்.

தேவி சினம் தணியா திருத்தலைக் குறித்து வருந்திய அரசன், புகழேந்திப்புலவர் சிறையிலிருப்பது நினைவிற்கு வரவே, அவரைச் சிறையினின்று விடுவித்து, அழைத்து வருமாறு பணியாளரை ஏவினன். பணியாளர் சென்று புகழேந்தியாரை அழைத்து வந்தனர். புரவலன் புலவருக்கு, தேவி

சினங்கொண்டிருத்தலைத் தெரிவித்து, சீற்றத்தை மாற்றுமாறு வேண்டிக்கொண்டான். அவரும் அர சியை யணுகி,

“இழையோன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை ஏந்து [வள்ளைக்
குழையோன் றிரண்டு விழியணங் கேகோண்டகோபந்தணி
மழையோன் றிரண்டுகை மானு பரணன்றின் வாயில்வந் [தாற்
பிழையோன் றிரண்டு பொருரோ குடியிற் பிறந்தவரே”

என்று இனிது வேண்டினர். ஆசிரியரின் குரலை அறிந்த அரசியார், உடனே தாழ் நீக்கிக் கதவம் திறந்து வெளிவந்து வணங்கினர்; வணங்கி, தம் அறியாமையினுல் நேர்ந்த பெரும் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். புலவர், அரசியின் அன்புரைகளைக் கேட்டு அகம் மகிழ்ந்தார். அப்பொழுது, காவலனும் நாவலரை வணங்கித்தான் இழைத்த குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டான். அதன்பின்னர், அவனது அரண் மனையிலேயே புகழேந்தியார் சிறிது காலம் தங்கியிருந்தார்.

சோழன், ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும் பகைமை விடுத்து, அன்புகொண்டு நண்புடனிருக்கும்படி அவ்விருவரையும் வேண்டிக்கொண்டான். ஆயினும், ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவரிடத்து உள்ளன்பு செலுத்தினரல்லர். இங்ஙனம் சிறிது காலம் கழிதலும், புகழேந்தியார் உள்ளன்பில்லாதவருடன் கூடியிருத்தலினும் அவரைப் பிரிந்துறை

தலே சிறந்தது எனக் கருதி, சோழனவையை நீங்கிச் செல்வாராயினர்.

சென்றவர், மள்ளுவநாட்டை யடைந்து, அங்கு முரணை நகரில் வாழ்ந்து அரசு செலுத்திய சந்திரசுவர்க்கி என்னும் வேந்தனைச் சார்ந்து, அவனது அவைக்களத்திற்கு ஓர் அணிகலமாகத் திகழ்ந்து, அங்கே வாழ்ந்திருந்தார். அவ்வரசன் தமிழ்ச்சுவை யின்பும், புலவரின் பண்பும் நன்கு அறிந்தவனாதலின், புகழேந்திப் புலவரின் பெரும்புலமையைப் பாராட்டி, அவரைப் போற்றிவந்தான்.

அக்காலத்தில் புகழேந்தியார், நளன் கதையை வெண்பாவில் அமைத்து, நளவெண்பா என்னும் சிறந்ததொரு காப்பியம் இயற்றி, சந்திரசுவர்க்கியின் அவைக்களத்தில் அரங்கேற்றினர். அந்நூலின் சொல்நயம், பொருள்நயம், நடைநயம், அணிநயம் முதலானவற்றை யறிந்து, அரசனும் புலவரும் புகழேந்தியாரைப் பாராட்டினர். அதனைக் கேள்வியுற்ற சோழன், அக்காப்பியத்தைத் தானும் கேட்க விரும்பி, புகழேந்தியாரை அழைப்பித்து, தன் அவைக்களத்தில் அரங்கேற்றுமாறு வேண்டிக் கொண்டான். அவரும் அதற்கு இயைந்து, தமது காப்பியத்தைச் சோழனவையிலும் அரங்கேற்றினர்.

புகழேந்தியார் நளவெண்பாவை அரங்கேற்றி வருகையில், ஒட்டக்கூத்தர் பலவிடங்களில் குற்றம் கூறினர். அவற்றிற்குத் தக்க சமாதானம் கூறி, புகழேந்தியார் தம் காப்பியம் முழுதும் அரங்கேற்றி

ஞர். அக்காப்பியத்தின் மேன்மையை யறிந்த ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவரின் பெரும்புலமையை நன்கு அறிந்து வியந்து, தம் உள்ளத்தில் அவரைக் கள்ளமின்றி மதித்துவந்தார்.

புகழேந்திப் புலவர், வெண்பாப் பாடுதலில் வல்லவர். இதனை, ‘வெண்பாவிற் புகழேந்தி’ என்பதனுல் அறியலாகும். அவர், தமக்குப் பிறர்செய்த நன்றியை மறத்தலில்லாத நற்குணம் வாய்ந்தவர். தம்மைப் புரந்து வந்த சந்திர சுவர்க்கியைக் குறித்து அவர், தமது காப்பியத்தில் பல இடங்களிற் புகழ்ந்து கூறியிருப்பதனுல், இஃது அறியப்படும். நளனைப் பற்றியிருந்த கலி, அவனை விட்டு நீங்கியதைக் கூறுமிடத்து,

“வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரசுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி”

என்று பாடியிருத்தலின், சந்திரசுவர்க்கி என்னும் அரசன் புலவரைப் புரந்து, அவரது வறுமைப் பிணியை யொழித்தவன் என்பது நன்கு விளங்கும்.

புகழேந்திப் புலவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். நளனைக் கலி பற்றியதைக் கூறுமிடத்து, “நாராயணுய நம ! என்று, திருமால் திருவடிகளைச் சரணம் அடையாதவர்களைக் கடுந்துன்பங்கள் பற்றுதல் போல, நளனைக் கலிபற்றினுன்” என்றும், நளனது விகாரமான வடிவம் நீங்கியதைக் கூறு

மிடத்து, "திருமால் திருவடிகளை அடைந்தவர்களின் அருவினை தீர்தல்போல, நளனது வேற்றுருவம் நீங்கிற்று" என்றும் பாடியிருப்பதனுல், அவரது கொள்கை புலனுகும். அவர் வைணவ சமயத்தவராயினும் பிறமதங்களை இகழ்பவரல்லர்.

நம் நாட்டில், சாதாரண மாந்தரிடையே வழங்கி வருகின்ற அல்லியரசானிமாலை, பவளக்கொடிமாலை முதலான புத்தகங்கள் பலவற்றையும் பாடியவர் புகழேந்திப்புலவரே எனக் கூறுகின்றனர். அவற்றின் நடையும் அமைதியும் நோக்குவோர்க்கு, அவை அவர் செய்தவை அல்ல என்பது தெற்றென விளங்கும். ஆனல், அவை புகழேந்திப்புலவர் சிறையிலிருந்தபோது பாடியவை எனக் கதை கூறுகின்றனர். அஃதாவது, புகழேந்திப்புலவர் சிறையிலிருந்த காலத்தில், அரசன் அவருக்கு ஏற்ற உணவு அளிக்கவில்லை. அதனுல் அவர், அச்சிறைச்சாலையின் அருகிலிருந்த கேணியில் தண்ணீர் எடுக்கச் செல்லும் பெண்டிருக்குப் பொருள் விளங்கும்படி எளியநடையில், பெண்களின் வரலாறுகளைச் சிறு நூல்களாகப் பாடலாயினர்; மகளிர், அப்பாட்டுகளைக் கேட்டு உவப்புற்று, புலவருக்குச் சிறந்த உணவுப் பொருள்களைக் கொண்டுபோய்க் கொடுத்துப் பாராட்டி வந்தனர். புலவர் அப்பொருள்களைப் பெற்றுத் தாமும் உண்டு, எஞ்சியவற்றைக் காவலருக்கும் ஈந்து வாழ்ந்து வந்தார். ஆதலின், மேற்குறித்த நூல்களெல்லாம் புகழேந்திப்புலவர் மகளிர் பொருட்டு இயற்றியவை என்கின்

றனர். ஆயினும், இக்கதைகளெல்லாம் உண்மை யெனத் துணிதற்கு இடமில்லை. இவ்வாறே, பெரும் புலவர் செய்யாத நூல்களை, அவர் செய்தனர் என்று அவர்மேல் ஏற்றிக்கூறும் வழக்கம் எல்லா நாடுகளிலும் உளது. ஆதலின், அல்லியரசானிமாலை முதலானவை புகழேந்திப் புலவர் செய்தன அல்ல என்று கோடலே முறையாகும்.

பயிற்சி

1. தொண்டைமண்டலம் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது?

2. ஒட்டக்கூத்தரும், புகழேந்தியாரும் தத்தம் நாட்டையும், அரசனையும் எவ்வெவ்வாறு புகழ்ந்துள்ளனர்?

3. சோழன் புகழேந்தியாரைச் சிறையிலிட்டது ஏன்?

4. புகழேந்தியார் எதனை ஒட்டிப் பாடினர்? பாடிய பாட்டின் கருத்தினை வரைக.

5. நவராத்திரி பூசனை நாட்களில் ஒட்டக்கூத்தரின் செருக்கு எவ்வாறு அடங்கியது?

6. இருபுலவர்களும் அரசியின் அந்தப்புரக் கதவைத் திறக்குமாறு எவ்வெவ்வாறு பாடினர்? (உரை நடையில் விடை தருக)

7. புகழேந்தியார் சோழன் அவையை நீங்கிச்சென்றதுஏன்?

8. சந்திரசுவர்க்கி புகழேந்தியாரைப் போற்றியது ஏன்?

9. புகழேந்திப் புலவரின் நற்குணங்களைச் சுருக்கி வரைக.

10. புகழேந்திப்புலவர் எச்சமயத்தினர்? நாம் அதனை எவ்வாறு அறியலாம்?

11. புகழேந்திப்புலவர் செய்தனவாகக் கூறப்படும் நூல்கள் யாவை? அவ்வாறு செய்ததற்குக் கூறப்படும் காரணங்கள் எவை? புகழேந்தியார் அவற்றைப் பாடினர் என்று ஏன் கொள்ளுதல் கூடாது?

# 4. தமிழ்ப் பைத்தியம்

திரு. M. S. செல்லம், B.O L., L.T.,

தலைமையாசிரியர், இராமகிருஷ்ணமிஷன் தென் பிரிவுப் பாடசாலை, தியாகராய நகர், சென்னை.

(உயர்ந்த கருத்துக்கள் மாணவர் மனத்திற் பதியுமாறு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது இக்கட்டுரை. தமிழ்ப் பித்தைப் பெற வேண்டுமென்று தவங்கிடந்தோரும், கிடக்கின்றோரும் பலர் என்பது உண்மையே, தமிழர் எனப் பெயர்கொண்டோர் தமிழின்கண் மிகப்பற்று வைத்திருத்தல் சிறந்ததன்றோ !)

எந்த உணர்ச்சியும் ஓர் அளவுக்கு மீறினல் அதைப் பைத்தியம் என்பர். கோபம், சோகம், சாந்தம் முதலிய உணர்ச்சிகளுள் எதுமிகைப்படினும் அது பைத்தியமே. மத உணர்ச்சி அளவுக்கு மீறி நிற்குமானல் அதை மதப்பித்து என்பர். மதப் பித்தினல் நம் நாட்டிலும் பிற நாட்டிலும் ஏற்பட்ட, ஏற்படுகிற பிரமாதங்கள் பல. அவைகளே ஒரு பெருங் கதையாம். பக்தியின் மிகுதியையும் ஒருவகைப் பித்தமென்றே சொல்வர். ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸரைப் பக்திப் பித்தர் என்றே சொல்லுவர்.

பைத்தியம் பொதுவாகத் தீதேயாயினும் சில பைத்தியங்கள் நன்மையே தரும். இத்தகைய பித்தைக் கொள்ள வேண்டுமென்றே பலர் தவம் செய்வர். பக்திப் பித்து, ஞானப் பித்து முதலியன இத்தன்மையனவாம். 'பற்றற்ருன் தாளிணைப் பற்றுக' என்று ஞானேபதேசம் செய்யும் திருவள்ளுவரே

ஒரு பற்று அல்லது பித்தை மக்களுக்குச் சிபார்சு செய்கிறார். சிவபெருமானே தம்மைப் பித்தன் என்று கூறிக்கொள்ளுகிறார். பித்தா என்று அவரைப் பிறர் சொல்வதையும் அவர் துதியாகவே கொள்ளுகிறார். நந்தனாரின் பித்தத்தைப் பற்றிக் கேட்டதில்லையா ?

நல்லனவாகிய பைத்தியங்களுள் தமிழ்ப் பைத்தியமும் ஒன்று, இத்தகைய தமிழ்ப் பித்தர் சிலர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னும் இருந்திருக்கின்றனர்.

நக்கீரர் என்ற சங்கப் புலவர் இத்தகைய பித்தருள் ஒருவர். இவர் காலம் சுமார் 2000 வருஷங்களுக்கு முற்பட்டது. தமிழின்மேல் இவருக்கிருந்த பெரும் பைத்தியமே இவர் சிவபெருமானோடு சண்டையிட்டதற்குக் காரணம்.

இவருக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின் சுமார் 1800 வருஷங்களுக்குமுன் சாத்தனார் என்ற ஒரு தமிழ்ப் புலவர் இருந்தார். இவரே ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய **மணிமேகலையின்** ஆசிரியர். பிற ஜீவன்களைக் கனவிலும் இம்சை செய்யாதவர். ஆனால் இவர் தமிழ்ப்பித்துக் காரணமாகத் தம்மையே இம்சித்துக்கொள்வாராம்.

இவர் சேரன்-செங்குட்டுவன் சபைப் புலவர்களுள் சிறந்தவர். பாண்டியன் சபைப் புலவருமாவர். இச்சேரனது தம்பியும் **சிலப்பதிகார** ஆசிரியருமாகிய இளங்கோவடிகளும் இவர் காலத்தவரே. இந்த இரு புலவர்களும் சிறந்த நண்பர்கள்.

தமிழில் கவி பாடிக்கொண்டு புலவர் பலர் சேர மானிடமும் பாண்டியனிடமும் பரிசு பெறவேண்டிச் சபைக்கு வரவர். தாம் பாடிய பாட்டுக்களை அவர்கள் சபையில் படித்துக் காட்டுவர். பல பாக்களில் குற்றம் இருக்கும். இத்தகைய குற்றம் மிக்க பாடல்களைக் கேட்டவுடன் சாத்தனரின் உள்ளம் பதறும். அவர்கள் தமிழ் என்ற தம் அன்னையைச் சித்திர வதை செய்வதுபோன்ற ஓர் உணர்ச்சி அவரை மீறும். இந்தப் பைத்தியத்தால் அவர் தம் தலையிலேயே தம் எழுத்தாணியால் பன்முறை குத்திக் கொள்வாராம். என்ன பைத்தியம் பாருங்கள்! அவருக்கிருந்த தமிழன்பில் ஆயிரத்தில் ஒரு பங்காவது தமிழர் என்று வாய் கூசாமல் சொல்லிக்கொள்ளும் நம்மவர் யாருக்காவது இருக்கிறதா? நெஞ்சைத் தொட்டுப் பார்த்துச் சொல்லுங்கள். இப்படிச் செய்து செய்து இவர் தலையே சீப்பிடித்து விட்டது. இதனல் இவருக்குச் சீத்தலைச் சாத்தனர் என்ற பெயரே வந்துவிட்டது. திருவள்ளுவப் பெருமான் பாடிய திருக்குறளைக் கேட்டு அநுபவித்த பிறகுதான் சாத்தருக்குத் தலைக்குத்து நீங்கிற்றென்பர் அக்காலத்திய புலவர் ஒருவர்.

வில்லி, என்ற புலவர் ஒருவர் இருந்தார். இவர் சுமார் 600 வருஷங்களுக்கு முன் இருந்தவர். இவருக்கும் தமிழ்ப்பித்து உண்டு. ஆனல் இவர் பித்து வெளிப்பட்ட வகை வேறு. இவர் தம் கையில் தோட்டி என்ற அங்குசம் போன்ற ஓர் ஆயுதம் வைத்திருப்பராம். யாராவது போலிப் புலவர்கள்

பிழைகள் மலிந்த கவிகளைப் பாடிக்கொண்டு இவர் இருக்கும் சபைக்கு வந்தால் இவருக்கு மகாகோபம் வந்துவிடும். இவர் வரபதி ஆட்கொண்டான் என்ற வள்ளலின் சபையில் புலவராய் இருந்தார். உடனே இவர் அவர்களோடு தர்க்கம் செய்து அவர்கள் பிழைகளை எடுத்துக் காட்டுவராம். அதோடு நில்லாமல் தமது தோட்டியால் அவர்கள் காதுகளை வேரோடு பிடுங்கி விடுவாராம். பாவம்! அவ்வளவு தமிழ்ப் பித்து இவருக்கு. இவரே **வில்லிபுத்தூரார் பாரதம்** என்ற சிறந்த தமிழ் நூலின் ஆசிரியர்.

சுமார் 300 வருஷங்களுக்கு முன் அதிவீர ராமன் என்றோர் சிற்றரசர் இருந்தார். இவர் அரசர் மட்டுமன்றிச் சிறந்த தமிழ்ப் புலவரும் ஆவர். புலவர்க்கு ஔடதம் என்று அறிஞர் புகழும் தமிழ் **நைடத** ஆசிரியர் இவர்.

தமிழில் போலிக் கவி பாடிவரும் பொய்ப் புலவர்களின் தலையில் உழக்கு ரத்தம் வரும்படி குட்டி இவர் அவர்களைச் சபையில் அவமானப் படுத்துவாராம். இதுவும் தமிழ்ப் பைத்தியம் அல்லாமல் வேறென்ன?

இவர்களைப்பற்றி யெல்லாம் நினைக்கும் பொழுது உங்களுக்குச் சிரிப்பு வரவில்லையா? என்ன பைத்தியங்கள், அசடுகள் என்று தோன்றவில்லையா? அதனால்தான் நாமெல்லாம் சமர்த்தாக இந்தத் தமிழின் வழிக்கே போகாமல் இருக்க நன்கு பழகியிருக்கிறோம். அப்படிப்பட்ட தமிழ்ப் பைத்தியங்கள் தாம் திருமுருகாற்றுப்படை, மணிமேகலை

வில்லி பாரதம், நைடதம் போன்ற சிறந்த தமிழ் நூல்களுக்கு ஆசிரியர்கள். இவர்கள் காலத்தில் தான் தமிழ் நல்ல நிலையில் இருந்தது. சாத்தனரைப் போன்ற வாணிகர் முதல் அதிவீர ராமனைப் போன்ற அரசர் வரை எல்லோருமே தமிழைப் பெருமையோடு கற்ற காலம் அது. நம் காலத்தில் இந்தத் தொல்லை யெல்லாம் இல்லையல்லவா ?

“குட்டுதற் கோபிள்ளைப் பாண்டியனிங் கில்லை
குறும்பியள வாய்க்காதைத் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றுய்த் தலைமுடியை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடி
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே”!

## பயிற்சி

1. நன்மையைத் தரும் பித்தங்கள் எவை ?
2. நக்கீரர் தமிழ்ப்பற்று மிகுந்தவர் என்பதை எவ்வாறு அறியலாம் ?
3. சாத்தனுரைப்பற்றி வழங்கும் வரலாற்றினைச் சுருக்கிவரைக.
4. வில்லியின் பித்து எத்தகையது ?
5. அரசர்களும் தமிழ்ப் பற்று மிகுந்திருந்தனர் என்பதை உதாரணம் காட்டி விளக்குக.
6. ஆசிரியரால் தமிழ்ப்பித்துக் கொண்டவர்களாகக் கூறப்படும் புலவர்கள் இயற்றிய நூல்கள் யாவை?

# 6. பாரதவீரன்

வித்துவான் கோ. அரங்கசாமி ஐயங்கார்.
தமிழ்ப் பண்டிதர், இந்து உயர்தரப் பாடசாலை, திருவல்லிக்கேணி

(இக்கட்டுரையில் ஆசிரியர் பாரதப்போரில் சிறப்புறப் போர் செய்த அபிமன்னுவின் சரித்திரத்தை நன்கு விளக்கியுள்ளார். இடையிடையே ஆசிரியர் அபிமன்னுவின் வீரச் செயல்களைக் கூறு முகத்தான் மாணவர்க்கு வீர உணர்ச்சியை உண்டாக்குதல் போற்றத்தக்கது.)

பண்டைக்காலத்தில் வேந்தர்கள் மூவகைப் பட்ட மரபினர் என்று வகுக்கப்பட்டிருந்தனர். அவர்கள், சூரியகுலத்தில் உதித்தவர், சந்திர குலத்தில் பிறந்தவர், அக்கினி குலத்தில் அவதரித்தவர் என்பவராவர். பாரத வீரர்கள் எனப்படுவர் பாண்டவ கௌரவர்களே. இவர்கள் பதினெட்டு அக்குரோணி சேனைகளுடன் குரு நிலத்தில் பதினெட்டு நாட்கள் கடும்போர் செய்தனர். முடிவில் பாண்டவர் வெற்றி பெற்றனர் என்பது யாவரும் அறிந்த தொன்றாகும்.

பாண்டவரில் நடுநாயகமாய் விளங்கிய வில்வீரனை அருச்சுனன் கண்ணனுக்கு நெருங்கிய அன்பினனாவான். கண்ணன் தன் தங்கை சுபத்திரையைத் தன்மீது பிரியா நட்புடைய அருச்சுனனுக்கே மணஞ்செய்து கொடுத்தான். அருச்சுனன் சுபத்திரையுடன் இல்வாழ்க்கையை மிக்க இனிமையாக நடத்திவந்தான்.

அக்காலத்தில் சுபத்திரை கருவுற்றனள். மாதம் பத்தும் நிரம்பிய பின் சுபத்திரையிருந்த தனி அறையில் கண்ணன் திருவாழி மந்திரத்தைச் செம்மைப்பட அவளது திருச்செவியில் செப்பினர். மந்திரம் முற்றும் உபதேசமாவதற்குள் கண்ணனைத் தேடிக்கொண்டு கார்முக வீரனுன அருச்சுனன் கடுகிவந்தனன். அவ்வளவில் மந்திரத்தை நிறுத்தி விட்டு அருச்சுனனுடன் கண்ணன் வெளியிற் புறப் பட்டனன். அத்திருவாழி மந்திரம் முற்றும் ஓதப் படாது ஒழியவே சுபத்திரை வயிற்றில் உதித்த புத் திரன் சிலவாகிய வாழ்நாள் உடையவனுய் உயிர் துறக்க நேர்ந்தது.

சுபத்திரைக்குப் பத்துத் திங்களும் கடந்த பின் னர், நல்லதோர் சுபதினத்தில் பாரத வீரன் பார கம் மகிழ, பாண்டவர் மெய்ப்புளகரும்ப உற்பவித் தனன். உற்பவித்த மகனுக்குச் செய்யும் சடங்கு கள் ஒன்றும் தவருதபடி செய்து வளர்த்து வந்த னர். அவனும் உதய பானுவைப்போல் நாளொரு மேனியாய் நன்னலம் பலவும் வாய்க்க வளர்ந்து வந் தான். இவனுக்கு அபிமன்னு என்ற பெயருமிட்ட னர். இம்மகனுக்குக் கல்வி, வில்வித்தை முதலியன பயிற்றுவித்தவர் கண்ணனேயாவர்.

“ அம்மா துலனும் பயந்தோரும் அழகின் மிக்க
இம்மா மகாருக் கியற்றும்விதி யெய்ந்த பின்னர்த்
தேம்மாறு வின்மை முதலான செயல்கள் யாவுங்
கைம்மாறு கொண்டு நனிகைவரு மாறு கண்டார்.”

என்னும் செய்யுளால் துரௌபதியின் புத்திரர்களுக்கும், சுபத்திரையின் புத்திரனுன அபிமன்னுவுக்கும் வில்வித்தையும் கல்வியும்பயிற்றுவித்தவர் கண்ணன் என்பது புலப்படும். கண்ணனிடம் கல்விகற்றவர் கருத்திற்கெட்டா மேன்மை உறுவர் என்பதைக் கட்டுரைக்கவும் வேண்டுமோ? இக்கட்டழகுடைய காளை கல்வித் துறையிலும் ஆயுதப்பயிற்சியிலும் தலை சிறந்து விளங்கினுன்.

பின்பு இராசசூய வேள்வி முற்றிய தருமன் சகுனியோடு சூது போர் புரிந்து வனம் புகுந்தான். அப்பொழுது ஏனைய பாண்டவரும் துரௌபதியும் உடன் ஏகினர். அபிமன்னு தன் மாமனுன கண்ணன் வாழ்ந்து வரும் துவாரகையில் இருந்து வந்தான். துரௌபதியின் புத்திரர் துரௌபதியின் பிதாவான துருபதேயனிட மிருந்து வந்தனர். பாண்டவர் பன்னிரண்டாண்டு வனத்திலும் ஓராண்டு ஒருவரும் அறியாவண்ணம் விராடன் நகரிலுமிருந்து காலத்தைக் கழித்தனர். பின்பு, துரியோதனன் நாடு தருவதற்கு உடன்படவில்லை. கண்ணனே தூதாகச் சென்று இனிய மொழிகளால் எடுத்துக்கூறியும் அவன் இசையவில்லை. துரியோதனன் பாண்டவர்களோடு போர் செய்வதாகக் கையறைந்து கொடுத்தான். அவ்வாறே போர் தொடங்கிற்று.

முதல் நாள் தொடங்கிப் பத்து நாட்கள் பீஷ்மர் சேனைக்கதிபதியாயிருந்து போரை நடத்தினர். பதினோராம் நாள் துரோணர் சேனுபதியாயிருந்து

போர் நடத்தினர். ஒருவாறு பதினேராம் நாட் போரும், பன்னிரண்டாம் நாட்போரும் நடந்தேறிய பின்னர், பதின்மூன்ரு நாள் சூரிய உதயத்தில் இரு தரப் படைகளும் போர்க்களத்தை அடைந்தன. அன்று துரோணர் தன் படையைச் சக்கரவியூக மாக வகுத்தனர். பாண்டவர் சேனுபதியான துருபதன் மைந்தன் துட்டத்துய்மன் தன் சேனையை மகரவியூகமாக வகுத்து எதிர் நின்றனன். இரு தரத்துச் சேனைகளும் கைகலந்து போர் தொடங் கின. அன்று கடும்போர் நிகழ்ந்தது. துரோணர் விட்ட அம்புகளால் நொந்து புறமுதுகிட்டுத் துட்டத் துய்மன் ஓடிவந்தனன். தருமன் இவ்வாறு தன் சேனுபதி ஓடிவருவதைப் பார்த்து அவனைத் தன் மார்புறத்தழீஇக்கொண்டு அவனை நோக்கி "நீயே தோல்வியுற்று வந்தால் இனி யார் துரோணர் முன் நிற்பவர்? ஆயினும் சற்று இளைப்பாறுக" என் றுரைத்தனர்.

இவ்வாறு தன்மைத்துனனை இளைப்பாறுக என்று கூறிய பின், தன்னெதிர் மயில்வாகனன் போல் வீரமுடன்நிற்கும் பாரதவீரனை அபிமன்னு வைப் பார்த்து "என்னருமருந்தன்ன மைந்தனே! அருகில்வா" என்றழைத்து அணைத்து உச்சிமோந்து அவனை நோக்கி, 'இன்று துரோணர் வகுத்துள்ள சக்கர வியூகத்தை யழிக்க உன் தந்தையான அருச்சுனனையும் உன்னையும் அன்றிப் பிறர் எவரா லியலும்? உன் தந்தை இப்பொழுது என்னருகி லில்லை. ஆதலின் நீயே சென்று துரோணர் வகுத்

துள்ள சக்கர வியூகத்தைப் பிளந்து பகைவர் பலரையும் வெல்லுக' என்று மொழிந்து அனுப்பினன்.

அபிமன்னு, பெரிய தந்தையின் ஏவல்பெற்று அவர்பாதத்தை வணங்கிப் புறப்பட்டனன். ஒப்பற்ற நாணுடைய சிறந்த வில்லேயும், பெரியதொரு வாளேயு முடையவனுய், வீரக்கழலேக் காலிற் புனேந்துகொண்டு, தோளினில் வாகுவலய மணிந்து, சிறந்த குண்டலங்கள் காதில் விளங்க, ஒளிவீசும் மகுடம் சூடி, இரதத்தில் ஏறித் துரோணர் சக்கர வியூகத்தை நோக்கி விரைந்து சென்றனன்.

சென்ற வீரன் சக்கர வியூகத்தின் கண்ணுள்ள வீரர்கள்மார்பில் தனித்தனிப் பல பாணங்கள் குளிக்கச் செய்தனன். நால்வகைப்படைகளின் மீதும் பல்லாயிரங் கணேகளே மழைபோல் சொரிந்தனன். அப்பொழுது உயிர்தப்பினல் போதுமென்று படைகள் முரிந்தோடின. அதைக் கண்ட துரோணர் தன் இரதத்துடன் எதிர் வந்து தாக்கினர். வந்த துரோணர் இமை கொட்டுமுன் முரிந்தோடும்படிப் பலபாணங்களே அபிமன்னு விடுத்தனன். உடனே துரோணர் வில்லழிந்தது; அவர் ஏறிவந்த தேரழிந்தது; அவருக்கமைந்துள்ள குரு என்னும் பெயரழிந்தது; அக்கணமே எதிர் நிற்க மாட்டாதவராய்த் தோற்ருேடினர். இந் நிகழ்ச்சியைக் கண்ணெதிர் கண்ட துரோணர் மகனை அசுவத்தாமா பெருஞ்சின முற்று வந்து தாக்கினன்.

அப்பொழுது அசுவத்தாமன் உடல்முழுதும் மறையும்படி அபிமன்னு அநேக அம்புகளே விடுத்

தனன். அதைக்கண்ட கன்னன் வந்து எதிர்த்துப் பல பாணங்கள் விடுத்தான். அவன் அம்புகளைத்தடுத்து அவன் ஏறிவந்ததேரை ஒரு கணத்தில் அபிமன்னு அழித்தனன். அவன் வேறு தேரேறி அப்புறம் சென்றான். கிருபாசாரியரும், கிருதவன்மனும் அபிமன்னுவுடன் வந்து போர் செய்து இருவரும் வில்லும் முறிய வெருவி ஓடினர். இச்செய்கைகளை நேரில்கண்ட துரியோதனன் தம்பியர்களாகிய விகன்னனும், துன்முகனும், மற்றுஞ்சிலரும் ஒரே முகமாக வந்து எதிர் ஏற்றனர். அவரனைவரும் ஒரு நொடியில் தோற்றோடினர்.

இங்கு இவ்வாறு போர் நடக்கும்பொழுது வீமன் தருமனிடம் வந்து அபிமன்னு போருக்குச் சென்றிருப்பதைத் தருமனால் அறிந்தான். சிறு பாலகனான அபிமன்னுவைத் தனியே பகைவர் அணியுள் அனுப்பியது தவறாயிற்றே என்று கூறி, அபிமன்னுவுக்கு உதவிபுரிய அவனை நோக்கிச் சென்றான். இவன் அபிமன்னுவிடம் வருவதற்குள் துரியோதனின் தூண்டுதலால் ஈசன் கொடுத்திருந்த கொன்றைமாலையைச் சயத்திரதன் என்பவன் இடையிலிட்டனன். அம்மாலை இறைவன் மாலையாதலால் அதைக்கடந்து செல்லுதல் தகாதுஎன்று வீமன் திரும்பினான்.

அபிமன்னு மிக்கவீரத்துடன் பொருத பொழுது துரியோதனன் தன் மகன் இலக்கண குமாரனையும், வேறு மன்னர்கள் குமாரர்களையும் அபிமன்னுவிடம் போர் செய்ய அனுப்பினான்.

அவர்கள் வந்து அமர் செய்து அபிமன்னு அம்பினால் மாண்டனர். அபிமன்னுவுடன் போர் செய்யத் துரோணர் முதலான சிறந்த வீரர்களாலும் முடியாமல் பல முறை வந்து தோற்றோடினர். கன்னன் மீண்டும் வந்து போர்தொடங்கினான். தொடங்குமுன்னர் ஏறுதேர் முறிந்து, வில் முறிந்து தோற்றோடினான் அவ்வாறு ஓடும் கன்னன் துச்சாதனனால் கொடுக்கப்பட்ட தேரில் ஏறி மறுபடியும் வில் முதலியன தாங்கி அபிமன்னுவோடு கடும்போர் விளைத்தனன். இப்பொழுது கன்னன் விடுங்கணைகளால் அபிமன்னுவின் தேரும், வில்லும் அடியோடு அழிந்தன. அப்பொழுதும் வீரங்குன்ற நம் பாரதவீரன் வாளோடு மண்ணில் பாய்ந்து மாற்றார் படைகளை மாய்த்தனன். துச்சாதனன் மகன் துச்சனி என்பவன் வந்து போர் செய்யத் தொடங்கினான். அவன் முடியை அபிமன்னு தன் வாளால் அறுத்தெறிந்தனன்.

பின்னர் துரோணர் தேரேறி வந்து கடும் போர் செய்ய அவர் தேரை அழித்தனன். அவர் பின்னர் வேறு இரதம் ஏறிவந்தனர். அப்பொழுது அபிமன்னு அவர் தேரை அழித்தான். இவ்வாறு மூன்று முறை துரோணர் தேரை அழித்து, செருக்கொடு அவரை நோக்கி நகைசெய்தனன். துரோணர், தன் வில்லில் ஒரு பிறைமுகவாளியை வைத்துவிடுத்து அபிமன்னுவின் ஒரு கையை அறுத்தனர். கையறுப்புண்ட அபிமன்னு ஒரே கையுடன் ஒரு தேர்ச்சக்கரத்தை எடுத்துத் தன்

மாதுலன் உரைத்த திருவாழிமந்திரத்தை உச்ச ரித்து அதைக்கொண்டு பகைவரையும் அவர் படை யையும் அழித்தனன். இவ்வாறு இவன் செய்த கொடிய யுத்தத்தைக்கண்டோர் அனைவரும் நடுநடுங் கினர். அரவக்கொடியோன் பெரிதும் அச்சமுற்று சயத்திரதனை அடைந்து "நீதான் இப்பொழுது அபிமன்னுவோடு போர்செய்யவேண்டும்" என, அவன் உடனே கைலாயபதி கொடுத்த தண்டு என் னும் ஆயுதத்தைக் கையிற்கொண்டு அபிமன்னு வோடு போர்தொடங்கினன்.

இருவரும் அரும்பெரும் போரியற்றினர். அன்று பகல் முழுதும் போர்செய்தனர். அபி மன்னுவுக்கு உதவி ஒருவருமின்றி ஒருவனாய் நெடு நேரமாகப் போரியற்றி வருகின்றவன் ஆதலாலும் உதவி வில்லும் தேருமில்லையாதலாலும், சிறிதும் இளைப்பாறுமல் போர் செய்கின்றான் ஆதலாலும், சிறிது தளர்ந்தவன்போல் காணப்பட்டான். இறை வனருளும் அவனுக்குத் துணைசெய்யாது போகவே சயத்திரதன் தண்டால்புடைக்க அபிமன்னு போர்க் களத்தில் வீழ்ந்தான். அவனுயிர் வீரசுவர்க்கம் புகுந்தது.

என்னே இவனது வீரம்! மிகச்சிறிய பாலக னன இவன் செய்த போரைப்பற்றி வியவாதவர் எவருமில்லை. அருச்சுனன் தன் மகனைக்கொன்ற சயத்திரதனை மறுநாள் பகலோன் படுவதற்குள் கொன்று வீழ்த்தினன். இத்தகைய பாரதவீரனைப்

பெற்றெடுத்த தாயும் தந்தையும் எத்துணை மகிழ்ச்சி யடைந்திருப்பர்!

பயிற்சி

1. பண்டைக் காலத்திருந்த மூவகை மரபுகள் யாவை?
2. அபிமன்னு சில வாழ்நாள் உடையவனுயிருக்குமாறு நேரிட்ட காரணம் யாது?
3. பதின்மூன்ருவது நாட்போரில் அபிமன்னு போரிடச்சென்றது ஏன்?
4. வீமன், அபிமன்னுவிடம் ஏன் சென்று சேர இயலவில்லை?
5. அபிமன்னுவின் போர்ச்செயல்களைச் சுருக்கி எழுதுக.
6. அபிமன்னுவுக்குத் தோற்றோடியோரும், அவனல் இறப்புண்டோரும் யாவர்?
7. அபிமன்னு போரில் இறக்கநேர்ந்த காரணங்கள் யாவை?

---

# 6. நபிஜயந்தி கொண்டாடப் படுவதன் நோக்கம்

(இது திருச்சி அகில இந்திய ஒலிபரப்புச் சாலையில் 21—4—1940 அன்று நடந்த சொற்பொழிவாகும். முகம்மது நபியவர்களின் சரித்திரத்தையும், அவர் செய்ததொண்டுகளையும் ஆசிரியர் இப்பாடத்தில் நன்கு விளக்கியுள்ளார்.)

முகம்மது நபியவர்கள் கி. பி. 571-ல் மக்காவில் அவதரித்து 632-ல் மதீனவில் விண்ணுலகு எய்தினர். அப்பெருமானுக்கு நாற்பதாவது பிராயம் நடந்து கொண்டிருந்த பொழுது, ரம்ஸான் மாத இறுதியில் இறைவன் அருளால் ஞானேதயம் உண்டாயிற்று. கி. பி. ஆருவது நூற்ருண்டில் அரபி தேசமும், ஏனைய பல நாடுகளும் விக்கிரக ஆராதனையில் ஆழ்ந்து கிடந்தமையால், நம்பெருமானர் அதுகாலை

அவதரித்து, ஞான ஒளிபெற்று, அந்நாட்டு மக்களுக்கும், ஏனையோர்க்கும் ஏகதெய்வக் கொள்கையைப் பற்றி எடுத்து ஓதத் தலைப்பட்டார்.

அக்கால அரபிகள் பல தெய்வ வணக்கத்திலும் வேறு சில விக்கிரக வணக்கத்திலும் முற்றிலும் ஈடுபட்டிருந்ததோடு மதுவருந்தல், கொள்ளையடித்தல், அயலார் பொருளை அபகரித்தல், வீண் சண்டையிடுதல், பெண்களை விலங்கினும் கீழாய் நடத்துதல், குழவிகளை உயிருடன் புதைத்தல் ஆகிய பல இழிய செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள். எனவே, நபிகள் பிரான் அம்மக்களை நல்வழியில் திருத்த முயன்றபொழுது மக்காவிலிருந்த குறைஷிகளும் மற்றும் பலரும் நபிப் பெருமானை மிகக் கடுமையாய் எதிர்க்கத் துணிந்தார்கள். இஸ்லாத்தில் சேர்ந்து வந்த மக்களை அவ்வெதிரிகள் எண்ணத் தொலையாத துன்பங்கட்கெல்லாம் ஆளாக்கினர்கள். சிலரைத் தடிகொண்டு அடித்தார்கள். வேறு சிலரை வெய்யிலில் அவ்வூர் மணலில் போட்டு வெதுப்பினர்கள்; மற்றுஞ் சிலரை மிகக் கொடிய முறையிற் கொலை புரிந்தார்கள். இத்தகைய இன்னல்களைச் சகிக்கமுடியாமல் நம் பெருமானர் நபிப் பட்ட மெய்திய 5-வது ஆண்டில் சுமார் 80-க்கு மேற்பட்ட முகமதிய மக்கள் செங்கடல் கடந்து, மேல் கரையிலுள்ள எதியோப்பியாவுக்குச் சென்று நஜ்ஜாஷாயிடம் புகலிடம் தேடிக்கொண்டார்கள். நபிகள் நாயகம் தாயிபு போன்ற வேற்றூர்களுக்குச் சென்று முகமதிய மதத்தின் தத்துவத்தைப்

போதிக்க முடியாதவாறும் பகைவர் தடை செய்து துன்புறுத்தினர்கள்.

இவ்வாறெல்லாம் 13 ஆண்டுகள் நபிகள் நாயகத்திற்கு இடையூறுகள் எதிரிகளால் பல இழைக்கப்பட்டு வந்தன. பின்பு மதீனவிலிருந்து மக்காவிற்கு யாத்திரை வந்த ஒரு சிலர் முகமதிய மதத்தில் சேர்ந்து கொண்டு, மறு ஆண்டில் மற்றும் சில மதீனவாசிகளையும் அழைத்து வந்து இம்மார்க்கத்தில் சேர்த்து வைத்தனர். அம் மதீன வாசிகளெல்லாம் நபிகள் பிரானைத் தங்கள் நகரத்திற்கு வருமாறு பிறகு வேண்டினர்கள். அன்றியும் தாம் அவருக்கு உதவி புரிவதாகவும் உறுதி கூறினர்கள். அப்பால் ஆண்டவனது ஆணையை மேற்கொண்டவராய் நபிப்பெருமான் மதீனவிற்குக் குடிபோய்விட்டார். இதுதான் 'ஹிஜ்ரத்' என்று அழைக்கப்படுகிறது. அன்று முதற்கொண்டுதான் முகமதிய ஹிஜ்ரியாண்டின் கணக்கும் துவக்கமாயிற்று.

மக்காவை விட்டுச் சற்றேறக்குறைய 105 முகமதியர்களே மதீனவிற்குச் சென்று புகலிடம்தேடிக் கொண்டனர். எனினும், மக்காவிற் சிலர் அவர்களை வாளா விடாது 1000 பேருடன் சென்று எதிர்த்துச் சண்டை செய்து பத்ரில் என்னும் இடத்தில் தோல்வியுற்றுர்கள். பிறகு மதீனவின் மீது அப்பகைவர்கள் 3000 பேர்களாய்ப் படைஎடுத்துச் சென்று மறுபடியும் உஹுதில் என்னும் மலைச்சரிவில் அடியுண்டு வெற்றி பெறுது வீடு திரும்பினர். மும்முறை அந்தக் குறைஷிகள் அரபி நாட்டிலிருந்த

மற்றெல்லாக் கோத்திரத்தார்களையும் கூட்டிக் கொண்டுபோய் மதீனவைச் சூழ்ந்து முற்றுகை யிட்டு விட்டார்கள். நபிகள் நாயகம் மூவாயிரம் முகமதி யர்களை வைத்துக்கொண்டு மதீனவைச் சூழ அக ழொன்று தோண்டி, அந்நகரை மூன்று வாரகாலம் மட்டும் பாதுகாத்து வந்தார். பகைவர் 24000 வீரர் களாயிருந்தும் நபிகளின் சிறுபடையை ஒன்றுஞ் செய்ய இயலாது மூன்ருவது வாரத்திற்குப் பிறகு பெரும் புயலாலும் கடு மழையாலும் தாக்குண்டு குளிர் தாங்காது, தளர்ந்து திரும்பிச் சென்று விட் டார்கள்.

இம்மூன்று முக்கியப் போர்களன்றி வேறு பல சிறிய கலகங்களும் அம்முகமதியர்களுக்கு விரோத மாக எழுந்தன. ஆனல் எப்போரும் நபிகள் பிரா ஞலோ அன்றி அவரைச் சேர்ந்தவர்களாலோ வலு வில் தொடங்கப் படவில்லை. முகமதிய மதத்தின் இனிய போதனைகளை எடுத்து உபதேசித்ததற்காகப் பகைவர்களே ஆதியில் இன்னல்களைச் செய்யத் தொடங்கினர்கள். மக்காவை விட்டு 300 மைல் வடக்கிலுள்ள மதீனவிற்கு அடியுடன் குடிபோன பிறகும், அப்பகைவர்கள் சும்மா விடாது வாளேந் திக்கொண்டு சென்று முகமதிய மதமும், முகமதியர் களும் இவ்வுலகில் இல்லாமல் ஒழித்துவிட அல்லும் பகலும் பெருமுயற்சி எடுத்துவந்தார்கள். இறுதி யில் நபிகள்பிரான் தற்காப்பி னிமித்தமாகவே வாளையுருவ வேண்டி ஏற்பட்டுவிட்டது. நபிகளும் அவரைச் சேர்ந்தவர்களும் முகமதிய மதத்தை ஏற்

றுக்கொள்ளாததற்காக எவருடனும் சண்டைசெய்ய வில்லை. எவரையும் கொல்லவுமில்லை.

நபிப்பட்டம் வந்து 13 ஆண்டுகள் வரை மக்காவில் சுமார் நூற்றுவரே முகமதிய மதத்தைத்தழுவியிருந்தார்கள். ஆனால், ஹிஜ்ரத்துக்குப் பிறகு தான் முகமதிய மதம் அதிகமாகப் பரவத் தொடங்கியது. நபிகள் பிரான் மதீனாவில் வாழ்ந்துவந்த 10 ஆண்டுகளுக்குள்ளே அரபி தேசத்திலிருந்த அனைவரும் இம்மதத்தைத் தழுவினர். நபிப் பெருமான் செய்து முடித்த இறுதி ஹஜ்ஜில் ஒன்றரை லக்ஷம் முகமதியர்கள் கலந்திருந்தார்கள் என்று சரித்திரம் கூறுகிறது.

அரபி நாட்டில் அதற்குமுன் வேரூன்றிஇருந்த விக்கிரக வணக்கமும் வேறு பல தெய்வ வணக்கங்களும் அடியுடனே மறைந்துபோய், ஏக தெய்வக் கொள்கையே எங்கும் தலை தூக்கி நின்றது.

அரபிகள் பருகி வந்த ஐந்து வேளை மதுபானங்களுக்கு மாறாய் ஐந்து நேரத் தொழுகைகள் முகமதியர்களால் மேற்கொள்ளப்பட்டன. கொலை, கொள்ளை, களவு, காமம், சூதாட்டம், சிசு ஹத்தி, அனாதைகள் சொத்தை அபகரித்தல் ஆகிய கொடிய பழக்கங்களெல்லாம் மாற்றப்பட்டுப் போய், நல்லொழுக்கமும், சத்திய சீலமும், சகோதர வாஞ்சையுமே எங்கும் பரவியிருந்தன. பெண்களின் மதிப்பு உயர்த்தப்பட்டு அவர்களுக்குச் சுதந்திரமும், சொத்துரிமையும் நல்கப்பட்டன. பன்னூற்றுக் கணக்கான மனைவியரை மணந்துகொள்ளும் கொடியவழக்

கம் நான்கிற்குக் கொண்டுவந்து குறைக்கப்பட்டது. இந்த நான்கு மணமும் அவசியத்திற்காகச் சமூக நலன் கருதி அனுமதி அளிக்கப்பட்டதே யல்லாது, ஒவ்வொருவரும் நான்கு தாரங்களை மணந்து கொள்ளத்தான் வேண்டுமென்னும் கட்டாய விதியல்ல. சிற்சில இடங்களில் ஒரே மனைவி பல புருஷர்களை ஏக காலத்தில் மணந்து கொண்டுவந்த வழக்கமும் ஒழிக்கப்பட்டு, விதவா விவாகம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

காட்டு மக்களாய்த் திரிந்து வந்த அக்கால அரபிகள் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டத்திலுள்ள சிற்சில நாடுகள் முதலான இடங்களில்கல்வியையும் நாகரிகத்தையும்,நல்லொழுக்கத்தையும் புகட்டக்கூடிய பெருமை வாய்ந்த பெருந்தகையோராயும், நாடாளும் நலம் பெற்றோராயும் உயர்ந்துவிட்டார்கள். நபிகள் நாயகத்திற்கு எழுதப் படிக்கத் தெரியாதிருந்தும், இம்மைக்கேற்ற இணையிலா அரசராகவும், மறுமைக்கேற்ற பரம ஞான குருவாகவும் ஆண்டவனருளால் உயர்ந்துவிட்டார். அப்பெருமானார் தங்களைப் பின்பற்றிய மக்களை இத்தரணியில் ஏக தெய்வ வணக்கத்திற்கும், சகோதர வாஞ்சைக்கும் எடுத்துக்காட்டாய் இருக்குமாறு எழுப்பிவிட்டார். அம்முகமதியர்கள் ஐரோப்பாவில் சற்றேறக்குறைய 900 ஆண்டுகளுக்கு மேலாகவே அரசு செலுத்தி வந்தார்கள். இந்தியாவிலும்சுமார் 800 ஆண்டுகளுக்கு மேலாக அரசு செலுத்தினார்கள். முகமதியர்களின் கலையறிவு, அரசியலறிவு

முதலியவற்றை விளக்கும் அறிகுறிகள் ஸ்பெயினி லும் இந்தியாவிலும் இன்றும் இலங்கிக்கொண்டிருக் கின்றன. இன்று இப்பூவுலகில் 45 கோடி முகமதி யர்கள் இருந்து வருகின்றனர்.

பயிற்சி

1. நபிகள் நாயகம் இவ்வுலகில் எத்தகைய காலத்தில் எங் குத் தோன்றினர்?
2. நபிகள் செய்த போர்களை விரித்தெழுதுக.
3. முகமதிய மதத்தின் கொள்கைகள் யாவை?
4. நபிகளின் நற்குணங்களைத் தொகுத் தெழுதுக.
5. அரபிகளிடம் இருந்த தீயதன்மைகள் யாவை?
6. ஹிஜ்ரத், குறைஷி: சிறு குறிப்புக்கள் வரைக.
7. நபிகள் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
8. நபிகளின் சரித்திரத்தைச் சுருக்கி வரைக.

---

# 7. கையினுல் காகித உற்பத்தி செய்தல்

திரு V. S. கிருஷ்ணசாமி, எம்.எ.,ஐ எப் எஸ்.,
காட்டிலாகா அதிகாரி

[கையினுல் காகிதம் உற்பத்தி செய்யும் விதத்தை இப்பாடத்தில் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். தொழில் இல்லையென்று சோம்பித் திரிவோர்க்கு இக்கட்டுரை நல்ல பாடம் கற்பிக்கும்]

மக்கள் எழுத்தறிவு பெறுதற்கு இன்றியமை யாத கருவியா யமைந்துள்ளது காகிதமே. முன் காலத்தில் இக்காகிதம் செய்யப்படவில்லை. பனை யோலைகளிலேயே எழுத்துக்களை எழுதி வந்தனர்.

அவற்றில் எழுதுதல் கடினமானதாகும். மிருதி யாக அவற்றில் எழுதவும் இயலாது. ஆனால் காகி தம் உற்பத்தி செய்யத்தொடங்கிய பிறகு அக்குறை கள் ஒழிந்தன ; பல நூல்களை அச்சிடவும் பயன் படு கின்றது ; கல்வியை எளிதில் அனைவருங் கற்க இயல் கிறது.

இத்தகைய காகிதம் இயந்திரங்களின் உதவி யால் பெரும்பாலும் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஆயினும், அதன் விலை அதிகமாக இருக்கும். இந் திய ஏழை மக்கள் தொழில் செய்து பிழைப்பதற்கு இக்காகித உற்பத்தி ஓர் விதத்தில் உதவி செய் கிறது. மக்களும் குறைந்த விலையில் காகிதத்தைப் பெறலாம். ஆதலின் அக்காகிதத்தைக் கையினால் செய்யும் முறையை நன்றாயறிதல் இன்றியமையாத தாகும்.

காகிதம் செய்ய முதலில் காகிதக்கூழ் தயாரிக்க வேண்டும். அதற்கு மஞ்சட்புல் (Cymbopogon coloratus) ஊசிப்புல் (Hoteropogon contortus), அரிப்பு (Lantana) குறிஞ்சி (Strobilanthes,) மருள் (Sanseviera Zeylanica) ஆகிய தாவரங்கள் சாதார ணமாக உபயோகப் படுத்தப் படுகின்றன. அவற்றை முதலில் காயவைத்து அரைக்க வேண் டும். அவற்றின் நிறையைக்குறித்துக் கொண்ட பின் தண்ணீரில் இருபத்து நான்கு மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்னர் அவற்றிலுள்ள அழுக்குக்களை நீக்கிச் சாரமான உப்புக்குழம்புடன் (Caustic soda solution) கலந்து கொதிக்க வைக்க

வேண்டும். அவ்வுப்புக் குழம்பு முன் குறித்த நிறையைக் குறித்த நிறையில் எட்டில் ஒருபங்கு இருத்தல் வேண்டும். அவற்றை ஆறுமணி நேரம் கொதிக்க வைத்தல் நலம். உப்புக்குழம்பு தாவர மாவிலுள்ள கரையாப் பொருள்களையும் கரைத்து விடும். கொதிக்க வையாமல் இருந்தால் அப் பொருள்கள் கரையப் பத்து நாட்கள் ஆகும். அரிப்பு, குறிஞ்சி ஆகியவற்றால் காகிதக்கூழ் செய்பவர்கள், அவற்றின் ஏனைய பாகங்களையே விறகாக எரிக்கலாம். ஏனெனில் அவை மிகக்குறைவான விலையில் கிடைக்கின்றன. கூழைக் கொதிக்க வைக்கும் பாண்டம் இரும்பு அல்லது செம்பினல் செய்யப்பட்டதா யிருத்தல் வேண்டும்.

கொதிக்க வைத்த கூழைத் தண்ணீரில் பல முறை கழுவிப் பின் அதனைக் கல்லுருளைகளால் நன்கு அரைக்க வேண்டும். பின்னர் அஃது ஓர் மெதுவான நல்ல கூழாகமாறும். இதனை மறு முறை நன்றாய்க் கழுவவேண்டும். அதனுள் கரையாப் பொருள்கள் இருப்பின் மேலும் சிறு நிறையுள்ள சாரமான உப்புக் குழம்பின் உதவியால் அவற்றைக் கரைக்கலாம். பிறகு மறுபடியும் கல்லுருளையால் அதனை அரைக்கவேண்டும். இவ்வாறு அரைக்க அதிகக் கஷ்டமிராது. பின்னர் அக் கூழினல் பழுப்பு நிறமுள்ள காகிதம் செய்யலாம்.

வெண்ணிறமுள்ள காகிதங்கள் செய்ய அக் கூழை நன்றாய் வெண்மையாக்க வேண்டும். அதனை வெண்மையாக்க வண்ணூர்கள் கையாளும்

முறையைப் பின்பற்றலாம். வெண்மையாக்குங் கால் அக்கூழை மரத்தினல் செய்யப்பட்ட பாண்டத்திலோ அல்லது இனமல் (enam(l) பூசப்பட்ட பாண்டத்திலோ வைத்திருக்கலாம். இவ்வாறு வெண்மையாக்கப் பன்னிரண்டு முதல் இருபத்து நான்கு மணிநேரங்கள் வரையில் ஆகும்.

கூழ் வெண்மையாக்கப்பட்டபின் தண்ணீரில் நன்ருய்க் கழுவவேண்டும். இத்தகைய பல முறைகளால் அக்கூழ் தூயவெண்ணிறமடையும். இத்தூய கூழினல் செய்யப்படும் காகிதம் மையூறும் காகிதமாக இருக்கும். அதன் பின்னர் ஊருத தன்மையை அதற்கு உண்டாக்கவேண்டும். ஒரு வகை உப்பின் உதவியால் கூழாயிருக்கும் நிலையிலேயே அதற்கு ஊருத தன்மையை உண்டாக்கிவிடலாம். இல்லாவிடில் காகித உருவம் உண்டான பிறகு, கஞ்சிப்பசை அல்லது வச்சிரப் பசையின் உதவியால் அதற்கு ஊருத தன்மையை ஊட்டலாம்.

**கூழிலிருந்து காகிதம் செய்தல் :**—நீர் அதிகம் ஊற்றப் பெருத மோர்போன்ற நிலையில்கூழ் இருக்க வேண்டும். அக்கூழ் ஒரு தொட்டியில் வைக்கப்படுதல் நலம். காகிதம் செய்ய ஒருவகைச் சட்டமும் (Deckle,) ஒருவகைச் சல்லடையும் (Fine mask wire gauze) வேண்டும். காகித அளவைவிட அக்கருவிகளின் அளவு ஒரு அங்குலம் அதிகமாக இருத்தல் வேண்டும். காகித அளவுள்ள துணியைத் தொட்டிக் கூழில் நனைத்து சட்டத்தில் அழுத்த

வேண்டும். ஒரு மெல்லிய ஈரமான காகிதம் சட்டத்தில் படிந்திருக்கும். அதில் உள்ள நீர் சல்லடைக் கண்கள் வழியாகக் கசிந்து நீங்கும். பின்னர் அச் சட்டத்தின்மேல் ஈரத்துணி யொன்றை அழுத்தினல், கூழினலான காகித வுருவம் அத்துணியில் படிந்துவிடும். பிறகு அத்துணியைக் காய வைத்தால் காகிதத்தைத் தனியாக எடுக்கலாம்.

இத்தகைய காகிதத்திற்குப் பிறகு பளபளப்பு அளிக்கப்படும். பின்னர் அதனை நமக்கு வேண்டிய அளவிற்குத் துண்டுகளாக்கிக் கொள்ளலாம். காகிதத்திற்குப் பலவகை நிறங்கள அளிக்கவேண்டுமென்ருல் கூழ்நிலையிலேயே அந்நிறத்தை ஊட்டிவிடலாம். இவ்வாருகக் காகிதம் உற்பத்தி செய்தல் மனிதனுடைய செலவைக் குறைப்பதுடன், பல மக்களுக்கு வாழ்க்கை நடத்தவும் உதவுகிறது. இந்திய மக்களில் ஏழைகளாயுள்ளோர் ஒரே தொழிலிற் சென்று இன்னல்களை அடையாமல், காகிதம் செய்தல் போன்ற பலதொழில்களைச் செய்வாரேயெனில் நம் இந்தியா செல்வத்திற் சிறந்து உயர் நிலையெய்தும்.

## பயிற்சி

1. காகிதம் எவ்வாறு கல்வியைப் பரப்ப உபயோகப் படுகிறது?
2. பெரும்பாலும் காகிதத்தை எவ்வாறு செய்து வருகின்றனர்?
3. காகிதக் கூழை எவ்வாறு தயாரிக்க வேண்டும்?
4. கூழைச் சுத்தமாக்கும் முறையை எழுதுக.
5. வெண்ணிறக் காகிதங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன?
6. காகிதங்கட்கு ஊருததன்மையை யெவ்வாறு ஊட்டுகின்றனர்?

7. கூழிலிருந்து காகிதம் செய்யும் விதத்தைச் சுருக்கி வரைக.
8. 'காகிதம் செய்தல்' என்னும் பொருள் பற்றி ஓர்கட்டுரை எழுதுக.

— —

# 8. பண்டைத் தமிழரின் வீர வாழ்க்கை

(தொகுத்தோன்)

நமது தமிழ்நாட்டில் வாழ்ந்துவந்த பண்டைத் தமிழ் மக்கள் வீரத்திற் சிறந்து விளங்கினர்கள். முடியரசர்களும், சிற்றரசர்களும், ஏனைய வீரர்களும் வீரமே தமக்கு உயர்ந்த அணியெனக் கருதினர்கள். "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா" அன்னாராய்விளங்கியவர்கள் தொகை எண்ணிலடங்காது. அரசர்கள் ஒவ்வொருவரும் இவ்வுலகம் யாவர்க்கும் பொது என்பதைக் கேட்க விரும்பார். இடஞ் சிறிதென்னும் ஊக்கம் தூண்ட பகைவர்மேற் சென்று கொண்டிருப்பர்.

அரசர்களிற் பலர் தங்கள் இயற்பெயர் மாத்திரம் கொள்ளுதலை விரும்பாமல், ஏதேனும் வீரச் செயல்கள் செய்து, அச்செய்கைகளை அடையாகக் கொண்ட பெயர்களையே கொள்வாராயினர். உதாரணங்களாக, சேரன்—செங்குட்டுவன், 'கடல்பிறக்கோட்டிய' என்ற அடையையும், பெருஞ் சேரலிரும்பொறை, 'தகடூரெறிந்த' என்ற அடையையும், நெடுஞ்செழியன், 'தலையாலங் கானத்துச் செருவென்ற' என்ற அடையையும், அவ்வவ் வீரச் செய்கைகளைச் செய்த பின்

கொண்டிருந்தனர். அவ்வரசர்களுள் போரென்ற வுடன் வீங்கும் தோளையுடையவராய் இருந்தவர் பலர். ஊர்மன்றினிடத்துக் கட்டப்பட்டிருக்கும் முழவில் காற்றடிப்பதனால் உண்டாகிய ஒலியைக் கேட்டு. போரென்று கருதி மகிழ்வெய்தும் மைந் துடைமைந்தர் பலரிருந்தனர். இவற்றை ஆராய்வோ மாயின் அவர்கள் வீரம் நமக்கு நன்கு விளங்கும்.

போர் தொடங்குவதற்கு முன்பு அவர்களிற் சிலர் கூறிய வஞ்சினங்கள் உலகில் உள்ள யாவரா லும் போற்றத்தக்கனவே. அஃது "இன்னதுபிழைப் பின் இதுவாகியர்" எனக் கூறுதலாகும். **ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்** என்பான் 'பலவேந்தர் ஒருங்கு கூடி என்னுடன் பொருவேம் என்று கூறுகின்ற னர். அவர்களை ஆரமரில் அலறத் தாக்கி அவர்ப் புறங்காணேனாயின் என் மனைவியை விட்டுப் பிரிவே னாக; கொடுங்கோல் செய்தேனாகுக; இவ்வுயர்ந்த அரசகுலத்திற் பிறவாமல், என்னுடைய குடிப்பிறப் பினின்றும் நீங்கப் பெற்றவனாய் மாறித் தாழ்ந்த குலத்திற் பிறப்பேனாக' என்று **வஞ்சினம்** செய் தான்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனின் வஞ்சினம் ஏனையோர் வஞ்சினத்தி னும் தனிப்பெருஞ் சிறப்புவாய்ந்த தாகும். அவன் கூறியன, "தம் நாவினைக் காவாதவராய்ச் சிறு சொற் சொல்லிய எனது பகையரசர்களை அவர்தம் முரசத்தோடு போரின்கண் அகப்படுத்தேனாயின், என்னுடைய குடைநிழற்கண் வாழும் குடிகள்வேறு

செல்லுமிடங்காணுதவர்களாய், 'எம்மிறை கொடியன்' என்று கண்ணீர் பரப்பிப் பழி தூற்றும்படியான கொடுங்கோலனுகக் கடவேன்; ஓங்கிய சிறப்பினையும் உயர்ந்த கேள்வியினையும், உலகமொடு நிலைபெற்ற பலர் புகழ் சிறப்பினையுமுடைய **மாங்குடி மருதனார்** முதலான புலவர்களால் பாடப்பெருமல் என்மலை நீங்குவதாக, இரப்போர்க்கு ஈய முடியாத இன்மையை யானடைக" என்பனவே.

இவற்றை நாம் தெளிவுற நோக்கின் பண்டைத் தமிழ் அரசர்களின் மனப்பான்மை நமக்குத் தெற்றென விளங்கும். அவர்கள் தம் உயிரைச் சிறிதும் மதித்தாரில்லை. இங்ஙனம் வஞ்சினங் கூறிய அரசரிற் பெரும்பாலோர் தாம் சொல்லிய விதம் செய்தே முடிப்பர். ஏனெனில் அங்ஙனம் கூறுவதற்கேற்ற உண்மையாற்றல் பெற்றோரே அவ்வாறு வஞ்சினங்கூறுவர். அவர்கள் சொல்லிய விதம் பகைவர்களைக் கொல்ல இயலாதவர்களாய்ப் போரில் இறந்தால் இறந்துபட்ட அவ்வஞ்சினம் கூறியோர், அவ்வஞ்சினத்தை முடித்தோராகவே உலகினரால் கருதப்படுவர். வஞ்சினம் கூறி அதனை முடியாமல் இறந்தாரை இகழ்வார் இப்புவியில் ஒருவரும் இல்லை.

இனி, போர் செய்யுங்கால் பகைவரை வெகுண்டு நோக்கியகண், பகைவர்தம் கைவேல் தன்மேல் வருவதைக் கண்டு இமைக்குமாயின், அத்தகைய கண்களை உடையவன் வீரனுகக் கருதப்படான். அங்ஙனம் இமைப்பது வீரர் வீரத்திற்கு

இழுக்கென்று கருதினர். அன்றியும், தம்முடைய வாழ்நாட்களில் விழுப்புண்படாது கழிந்த நாட்களைப் பயனில்லாமற் கழிந்த நாட்களாகக் கருதினர். விழுப்புண் என்பது முகத்தினும் மார்பினும்பட்ட புண்களாகும்.

போரில் பகைவர் வேலால் எறியப்பட்ட வீரன், தன்னிடம் அதற்குமாருக அவன்மேல் எறிய வேல் இல்லையென்று மயங்கான். தன் மார்பில் தைத்த வேலையே பறித்து எறிவான். இச்செய்கையே,

"கைவேல் களிற்ரெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்று திருக்குறளில் கூறப்பட்டது.

அக்காலத்திய ஆடவரேயன்றிப் பெண்டிரும் கற்பும், வீரமும் ஒருங்கமையப் பெற்றிருந்தனர் என்பதைப் பல உதாரணங்களால் அறியலாம். அவர்களை வீரத்தாயர் என்றழைத்தல் தகும்.

ஓர் வீரத்தாய், தன் மகனைப் போர்க்கனுப்பி இருந்தாள். போர்க்குச் சென்ற மைந்தன், தன் கை வேலால் யானையை எறிந்தான். அவ்வேல் அதன் முகத்தின் கண்ணே தங்கியது. அதனல் அவன் மேற்கொண்டு போரைச்செய்யாமல் வெறுங் கையுடன் வீடு திரும்பினன். தன் மைந்தன்போரில் இறந்துபடாமல் வெறுங்கையுடன் வீடு திரும்பியதை அவன் தாய் வெறுத்து, "எம்மில் செய்யாப் பெரும் பழி

செய்த கல்லாக் காளையை ஈன்ற வயிற்றை நோவேன்'' என்றாள்.

நரம்பு வெளிப்பட்டு உலறியிருந்த மெல்லிய தோளுடன் ஒரு முதுமகள் இருந்தாள். அவட்கு இவ்வுலகத்தில் இருந்த செல்வமெல்லாம் ஒரு சிறுவனே. அவன் பால்மணமாறாப் பாலகன். போர்க் களத்திற்குச் சென்றான். ஆயின், அவனைப் போர்க் குச் செல்ல ஏவியது அக்கிழத்தாயே. போர்க்களத் திற் சென்று பொருத அவன், பகைவர் வேலை மார் பில் ஏற்றுச் சுவர்க்கம் புகுந்தான். அதனையறிந்த பலர், அம்முதியவளின் மனப்பான்மையை அறிவ தற்கோ அன்றி வேறு எக்காரணத்தாலோ அம் முதியோளிடஞ் சென்று, அவள் மகன் அமரில் தோற்றனன் என்று பொய் கூறினர். அதனைச் செவியேற்ற அக் கிழத்தாய், தன் செவியையே நம்பவில்லை. ஆண்டு நின்றும் பொருக்கென எழுந் தாள்; 'உண்மை அங்ஙனம் இருப்பின் அப்பால கன் பாலுண்ட மார்பினை அறுத்திடுவேன்' என்று பலருமறியக் கூறியவளாய், அவள், தன் மார்பை அரிவதற்கு வாளைக் கையிற்கொண்டு விரைவிற் சென்று போர்க்களம் புகுந்தாள்; தன் மகனைப் போர்க்களத்தில் தேடினாள்; மகன் மார்பிற்பட்ட புண்ணுடன் ஆண்டு இறந்து கிடப்பதைக் கண் ணுற்றாள். கண்ணுற்ற அவள் மனமடைந்த மகிழ்ச் சியை யாவரே அறியவல்லார்! தான் அம்மைந்த னைப் பெற்ற நாளினும் பெரிது மகிழ்ந்தாள்.

வேறொரு மறத்தாயின் தகப்பன் மேனாள் நடந்த போரில் யானையை வெட்டிப் போர்க்களத்தில் இறந்தான். அவள் கணவன் முதல்நாட்போரில் பசுக்களை எதிர் நின்று தடுத்து மாண்டான். இங்ஙனம் யாவரும் இறந்த பிறகும் பகைவர், போர் நீங்காதவர்களாய்ப் போர்ப்பறை முழங்கச் செய்தனர். இறந்து பட்டவர்களொழிய அத்தாய்க்கு எஞ்சி நின்ற சுற்றம் அவளுடைய ஒரே சிறுவனாகும். பகைவரது போர்ப்பறை கேட்டு அதனைப் பொறாதவளாய் எஞ்சி நின்ற தன் ஒரே மகனைப் போர்க்கனுப்பத் துணிந்தாள். உடனே அவன் கையில் வேலைக்கொடுத்தாள்; வெள்ளை ஆடையை அவனுக்கு உடுத்தினாள்; அவனுடைய விரிந்த மயிரினையுடைய குடுமிக்கு எண்ணெய் பூசி, அழகு செய்தாள்; போர்க்களத்திற்குச் செல்லும் வழியைக் காட்டி, அவனைச் செல்கென விடுத்தாள். தன்னுடைய சுற்றத்தாரும், கணவனும் பட்ட பிறகு, தனக்கு உறுதுணையாகத் தன்மகனேனும் உயிருடன் இருத்தலை விரும்பாமல், அவனைப் போர்க்களத்திற்குத் துணிந்து செல்ல விடுத்த அவள் வீரம் சொல்லுந் தரத்ததொன்றோ!

தன் புதல்வர்க்குப் பாலூட்டிக் கொண்டிருந்த வேறொரு மறத்தாய், பகைவர் பலர் எதிர்த்தனர் என்பதைக் கேள்வியுற்றவுடன், அதனைப் பொறாளாய், தன் புதல்வனைப் பாலுண்ணுதலினின்றும் நீக்கி, முன்பு பகைவரைக் குத்தி வளைந்த வேலை வளைவு தவிர்த்து அவன் கையிற் கொடுத்து, பழைய

மறக்குடியிற் பிறந்த தன்மையினுல், அச்சிறுவனைப் போர்க்கு அனுப்புகின்ருள். அவ்வாறு அனுப்புகின்றவள் தன் குடியின் முன்னேர்கள் நடுகற்களை அவனுக்குக் காட்டிய பிறகே அனுப்புகின்ருள். போர்க்குச் செல்லும் சிறுவற்கு நடுகல்லைக் காட்டி அனுப்புமவள் எண்ணம் என்னவென்பதை ஒரு வாறு ஊகித்தறியலாம். நடுகல் என்பது, போரில் வீரத்துடன் பொருதபின் பகைவர் படைகள் மார்பில் தாக்க, அதனுல் உயிர்துறந்த ஒரு வீரனின் பெயரும்புகழும் என்றும் நின்று நிலவுதல்வேண்டி, அவனுடைய பெயரும், அவனது வீரச்செயல்களும் செதுக்கி நடப்பெற்ற ஓர் கல்லாகும். இத்தன்மை யான நடுகல்லை அத்தாய் சிறுவனுக்குக் காட்டியது, 'மைந்த! போரிற் சென்று பகைவர் முதுகிடும்படி யாகப் பொருது வெற்றியுடன் திரும்புவாயாக: இன் றேல் போரில் இறந்து உனக்கும் ஒரு நடுகல் அமைக் கும்படிச் செய்வாயாக. தோல்வியுற்றுத் திரும்பி வாராதே' என்று வெளிப்படையாகக் கூருமல், அவற்றை அவனுக்குக் குறிப்பினுல் உணர்த்தற் பொருட்டேயாகும்.

மேற்காட்டிய செய்திகளால் பண்டைப்பெண்டி ரின் வீரத்தையும் ஒருவாறு அறியலாம். அக்காலத் தில், 'போரிற் புண்பட்டு இறந்தோரே துறக்கமடை வர்; நோய்வாய்ப்பட்டேனும், அன்றி முதுமைமிக் கேனும் இறப்பின் அவர்க்குத் துறக்கமின்று' என்று யாவரும் கருதினர். ஆதலின் ஒரு அரசன் நோயுற்று இறப்பின், இறந்த அவ்வரசனின்

உடலை, அந்தணர் ஒருங்குகூடி, தருப்பையிற் கிடத்துவர். கிடத்திய அவ்வுடம்பை வாளாற் பிளப்பர். அவ்வாறு பிளக்குங்கால் 'தமது மறமே பற்றுக்கோடாக, நல்லமரில் வீழ்ந்த மறவர் செல்லும் உலகத்திற்கு இவரும் செல்வாராக' என்று கூறுவர். ஆயின் இவ்வாறு ஒரு அரசன் மூப்பால் இறத்தல் அக்குடிக்கே குற்றமென்று கருதினர்.

அன்றியும், இரண்டு அரசர்கள் போர் செய்யுங்காலத்தில் ஒரு அரசனுடைய அம்பு, மற்றோர் அரசனுடைய மார்பில் தைத்து ஊடுருவிச் சென்று அவனது புறத்தே புண்ணுண்டுபண்ணின், அப்புண்பட்ட அரசன் அதனைத் தனது வீரத்திற்கு இழுக்காகக் கருதி நாணுவான். **சோழன் கரிகாற் பெருவளத்தானுடன்** வெண்ணிப் பறந் தலையிற் பொருது, அவ்வரசனால் அடைந்த புறப்புண்ணிற்கு நாணிய **பெருஞ் சேரலாதன்** அதன் பிறகு உயிருடன் வாழவிரும்பாமல், உயிர் துறக்கக் கருதியவனாய்த் தன் வாளுடன் **வடக்கிருந்தான்.** வடக்கிருத்தல் என்பது, இவ்வுலக இன்பத்தைத் துறந்து, மேலுலகு அடைய விரும்பியோர், உண்ணா நோன்பிருந்து உடல் மெலிவித்து, உயிர் நீக்கிக்கொள்ளக் கருதிப் புண்ணியத் திசையாகிய வடதிசையிற் சென்றிருத்தலாகும்.

போர் புரிவதும், பற்பல வீரச்செய்கைகளைச் செய்வதும் அக்காலத்து மைந்தர்களின் கடமையென்றே யாவருங்கருதினர். பலர் கடமைகளைக்

கூறுமுகத்தான், தன்னுடைய வீர உணர்ச்சியையும் வெளிப்படுத்தவேண்டி ஓர் மறத்தாய், "புதல்வனைப் பெற்றுப் போற்றிவிடுத்தல் தன் கடமை என்றும், அப்புதல்வனைச் சான்றோனுக்குதல் அவன் தந்தையின் கடமை என்றும், அவனுக்கு வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமையென்றும், அம்மகனுக்கு நன்னடை நல்கல்வேந்தனின் கடமை என்றும், போரில் சென்று உழக்கி ஆண்யானையைக் கொன்று திரும்புதல் அத்தகைய மகனின் கடமையென்றும்" கூறுகின்றாள். இத்தகைய வீரமக்களைப் பெற்றிருந்த நம் தமிழ்நாடு எந்நாட்டினும் சிறந்த நன்னாடு என்பதிற்குற்றமுண்டோ?

## பயிற்சி

1. பழந் தமிழரசர்களின் அடைமொழிகள் சேர்ந்த பெயர்களில் இரண்டு கூறி, அவற்றால் பெறப்படும் அவர்கள் வீரத்தன்மைகளை விளக்குக.
2. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் கூறிய வஞ்சினம் யாது.
3. நெடுஞ்செழியன் வஞ்சினம் ஏன் சிறந்தது? விளக்குக-
4. விழுப்புண், வஞ்சினம், நடுகல், வடக்கிருத்தல்: இவற்றை விளக்குக.
5. பண்டைக்கால வீரத்தாய்மார்களின் வீரத்தை இரண்டு உதாரணங்கள் வரைந்து விளக்குக.
6. ஓர் மறத்தாய் எவ்வெவருடைய கடமைகளைக் கூறுகின்றாள்? அக்கடமைகள் யாவை?
7. 'பண்டை வீரத்தாயர்' என்னும் பொருள்பற்றி ஓர் கட்டுரை வரைக.

# 9. பாற்பண்ணை

திரு எஸ். கே. மூர்த்தி

[இவர் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த இளைஞர். இவர் சிறுசிறு பயன்தரும் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

இச்சிறு கட்டுரையை ஆசிரியர் தமது பாற்பண்ணை அனுபவத்தைக் கொண்டு எழுதியுள்ளார். மக்கள் பாற்பண்ணையிலிருந்து பால் வாங்கி உபயோகித்தல் நலம் என்பதை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளனர்.]

நமது தேசத்தில் அநேகமாக நாம் எல்லோரும் பாலையே முக்கிய ஆகாரமாகக் கருதுகிறோம். ஆயினும் நம்மவரிற் சிலரே பசுவையோ, எருமையையோ வீடுகளில் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். பலர் வெளியில் வாங்கியே உபயோகிக்கின்றனர். பாலோ, தயிரோ, வெண்ணெயோ, நெய்யோ பசுவினுடையதா எருமையினுடையதா என்று கூடச் சரிவரக் கவனியாமல், கொடுப்பவர்கள் எவ்விதம் சொல்லிக் கொடுக்கிறார்களோ அதையே நம்பி வாங்குகின்றார்கள்.

முக்கியமாக ஆகார சம்பந்தமாகவுள்ள சாமான்களை, தேகாரோக்கியத்திற்காக நன்கு கவனிக்கவேண்டியது அவசியம். கிராமங்களிலாவது, ஆறு, குளம், ஏரி முதலியவற்றில் தண்ணீர் இருப்பதால் மாடு கன்றுகளைத் தினந்தோறும் நீராட்டிச் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பார்கள். நகரங்களில் நாம் குடிப்பதற்கே குழாயில் தண்ணீர் போதுமானவரை வருவதில்லையாதலால் மாடு கன்றுகளை நீராட்ட நாம் அவ்வளவாகக் கவலை எடுத்துக்

கொள்வதில்லை. பால் சாப்பிடும் ஒவ்வொருவரும் கீழ்க்கண்டவற்றைச் சரிவரக் கவனிக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கப் பாற்பண்ணையிற் பால்வாங்குவது மிக நலம்.

ஆங்கு மாடுகள் கட்டப்படும் தொழுவங்களை ஒவ்வொரு நாளும் சுத்தம் செய்து ஈ, கொசுகு முதலியன மொய்க்காமலிருக்க 'பினைல்' போன்ற மருந்துகள் தெளிக்கப்படும். மாடுகளுக்குச் சுத்தமான புல், வைக்கோல்களைப் போடுவார்கள். சுத்தமான தண்ணீரையே யன்றித் தொட்டிகளில் மாதக் கணக்காக ஊற்றிவைத்து நாற்றமெடுத்த தண்ணீரை அவைகுடிக்கச் செய்யமாட்டார்கள். மாடு கறக்கும் இடம் மிகவும் சுத்தமாக இருக்கும்.

அநேகமாகத் தெருக்களிலோ அல்லது பால் கொடுப்போர் வீடுகளிலோ கறக்கும்போது தூசு, தும்பு முதலியவைகளும், சாணமும் பக்கத்தில் இருக்கும். அசுத்தங்களில் ஈ, கொசுகு முதலியன உட்கார்ந்து அவற்றைத் தூக்கிக் கொண்டு வந்து பாலிலும் உட்கார்ந்து அசுத்தம் செய்யும். அப்பாலையே தான் நாம் உட்கொள்ளுகிறோம்.

மேனாடுகளில் பாலைக் கையால் தொடாமலேயே இயந்திரத்தினால் பால் கறக்கிறார்கள். இங்கு அது அசாத்தியமாக இருந்த போதிலும், கூட்டுறவுப் பாற் பண்ணைகளில் நன்றாகச் சுத்தம் செய்யக் கூடிய பாத்திரங்களில் பாலைக் கறந்து உடனே ஒரு வகைப் பஞ்சினால் (Compressed cotton wool discs) பாலை வடிகட்டிப் பால் புட்டிகளில் ஊற்றி

அவற்றை அட்டை மூடிகளால் தூசு உள்ளே போகாதபடி மூடிக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். ஆகையால் சாதாரணமாக நாம் வீட்டில் பால் கறப்பதையோ அல்லது வெளியில் பால்காரர்களிடம் வாங்குவதையோ விடப் பாற்பண்ணைகளில் வாங்கும் பால் சரீரத்திற்கு மிகுந்த ஆரோக்கியத்தைக் கொடுக்கக் கூடியது.

பெங்களூரில் இதற்காக அரசாங்கத்தாரால் ஒரு கல்லூரி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அதில் மாடு கன்றுகளைப் பராமரிக்கவும், பால் எடுக்கவும், கொடுக்கவும் வேண்டிய முறைகளைப் பயிற்றுவிக்கிறார்கள். கூட்டுறவுப் பாற் பண்ணைகளிலிருக்கும் அதிகாரிகள் இதுபோன்ற இடங்களிற் பயின்றவராவர். சாதாரணமாகப் பித்தளைப் பாத்திரங்களிலும், தகர டப்பாக்களிலும் பால் கறந்து கொண்டு வருவது சிறந்ததல்ல. ஏனெனில் அவற்றைச் சுத்தம் செய்யும்போது எங்கேனும் ஒரு சிறு சந்தில் பாலோ அல்லது வேறு ஏதேனும் அழுக்கோ இருப்பதற்கு ஏது இருக்கிறது. பாற்பண்ணைகளில் கண்ணாடிப்புட்டிகளில் பால் கொடுக்கிறார்கள். அப் புட்டிகளை ஒவ்வொரு வேளையும் சவர்க்காரம் போட்டு நன்றாகச் சுத்தம் செய்த பிறகுதான் மறுபடியும் அவற்றில் பாலை அடைக்கிறார்கள்.

இன்னும் மாட்டுக்கோ, மாடுகறப்பவர்களுக்கோ அல்லது பால் கொண்டு வருபவர்களுக்கோ ஏதேனும் தொத்து வியாதிகளிருந்தாலும் அவை சுகாதாரத்திற்கு நேர்மையானதல்ல. கல்லூரியில்

பயின்றவர்களுக்கு, மாடுகளுக்கு ஏதேனும் நோய் வந்தால் அதைக் குணப்படுத்துவதற்குத் தெரியும். பாற்பண்ணையில் பால் கறப்பவர்களையும், பால் கொடுப்பவர்களையும் குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது மருத்துவர்கள் பரீக்ஷை செய்து பார்ப்பதால் நாம் நம்பிக்கையாகப் பயமின்றி அந்தப் பாலை உபயோகிக்கலாம்.

இயந்திரத்தின் உதவியினுல் பாலைக்காய்ச்சாமலேயே வெண்ணெய் போன்ற 'கிரீம்' என்பதையும், கிரீமிலிருந்து வெண்ணெயையும் சுகாதார முறைப்படித் தயார் செய்கிருர்கள். இவையெல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து நாம் வாங்கும் பாலைக் கூட்டுறவுப் பாற்பண்ணைகளிலேயே வாங்குவது நலம்.

## பயிற்சி

1. கிராமங்களில் சுத்தமான பால் கறக்க எத்தகைய ஏது இருக்கின்றது?
2. நாம் வீடுகளில் மாடுகளிலிருந்து பால் கறப்பது எக்காரணங்களால் நல்லதல்ல?
3. கூட்டுறவுப் பாற்பண்ணையின் பால் எங்காரணங்களால் மேலானது?
4. பாற்பண்ணையிலுள்ளார் எத்தகைய பயிற்சியைப் பெறுகின்றனர்?
5. பாற்பண்ணைகளில் பாலிலிருந்து என்னென்ன செய்கிருர்கள்?
6. 'கூட்டுறவுப் பாற்பண்ணையிலிருந்து பால் வாங்குவது நல்லது' என்னும் பொருள்பற்றி ஓர் சிறு கட்டுரை வரைக.

# 10. நாடகக்கதையின் தன்மை

திரு. ராவ்பகதூர், பி. சம்பந்த முதலியார், பி.ஏ.,பி.எல்.

[இவர் தமிழ் நாட்டில் நாடகக் கலையை நன்கு பரப்பியவர். சுமார் நாற்பதியாண்டுகளாக நாடக உலகில் பயின்ற பழக்கம் இவருக்குநாடகங்களைச் சீர்திருத்தும்படியான சீரிய நோக்கங்களைக் கொடுத்துளது.

இஃது 8-5-1940 அன்று திருச்சி அகில இந்திய ஒலி பரப்புச் சாலையில் ஆற்றியசொற்பொழிவாகும். தற்காலத்திய நாடகங்களிலுள்ள குற்றங் குறைகளை ஆசிரியர் நன்கு புலப்படுத்தி, நாடகம் நடிப்போர்க்கென்று தம்சிறந்த நோக்கங்களையும் வெளிப்படுத்தி யுள்ளார்.]

மேடையின்மீது நாடகம் ஆடுவதென்றால் அதன் பொருட்டு, ஆறுவிஷயங்களைக் கவனிக்க வேண்டும். அவை, நடிகர்கள், அவர்கள் புனையும் வேடம், நடிப்பு, திரைகள், சங்கீதம், நாடகக்கதை ஆகியனவாம். அவ்வாறுள் ஒவ்வொன்றும் நன்றாய் இருந்தால் தான், நாடகமானது நன்றாய்ச் சோபிக்கும். மேற்சொன்ன ஆறு பிரிவுகளும் ஒவ்வோர் விதத்தில் இன்றியமையாதனவேயாம். ஆயினும் இவ்வாறு பிரிவுகளில், மிகவும் இன்றியமையாததும் மிகவும் பிரதானமானதும் எது என்று ஆலோசிப்போம்.

திரைகளை முதலில் எடுத்துக்கொள்வோம். இதில் காட்சிகளைக் காட்டும்படியான படல்கள் முதலியவைகளையும் அடக்கிக்கொள்ளவேண்டும். இவை எல்லாம் இன்ன இடத்தில் நாடகத்தின் காட்சிநடிக்கப்படுகிறது என்று பார்ப்போர்களுக்குத் தெரி

விப்பதற்காம். தற்காலம் இவற்றிற்கு அதிகப் பணம் செலவழித்து, நடிக்கப்படும் காட்சியானது இன்னதேசத்தில் இன்ன இடத்தில் நடிக்கப்படுகிற தெனச் சபையோருக்கு அறிவிக்கப்படுகிறது. தேசகால வர்த்தமானங்களின்படி இவற்றையெல் லாம் அலங்கரிப்பது மிகவும் பொருத்தமானதாம். ஆயினும் பூர்வகாலத்தில் ஆரிய தேசத்திலும், திரா விட தேசத்திலும், நாடகங்கள் நடிக்கப்பட்ட பொழுது இவை பெரும்பாலும் இல்லாமலிருந்தன என்றே நாம் கூறவேண்டும். அரங்கத்தில் திரை களை விடுவதும், மாற்றுவதும் பிற்காலத்தில் வந்த வழக்கம் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆரிய பூமியில் காளிதாஸன், பவபூதி முதலிய மகா நாடக கவிகள் காலத்தில் நாடகத்தின் அங்கமானது இன்ன இடத்தில் நடிக்கப்படுகிறது என்பது, சூத்தி ரதாரர் வாக்கு, பிரஸ்தாவனை முதலியவற்றைக் கொண்டு தெரிவிக்கப்பட்டது. ஏறக்குறைய, தற் காலத்திலிருக்கும் திரைகள், பக்கப்படுதாக்கள், மேல்ஜாலர்கள், படல்கள் முதலியன ஒன்றுமே அக்காலத்தில் இல்லையென்றே சொல்லவேண்டும். இங்கிலாந்து முதலிய தேசங்களில்கூட, உலகப்பிர சித்திபெற்ற ஷேக்ஸ்பியர் மஹாநாடக கவியின் காலத்தில் திரைகள் முதலியன இல்லை. இன்ன இடத்தில் இக்காட்சி நடிக்கப்படுகிறது என்று தெரி விப்பதற்காக—இது அரசனின் தோட்டம் -,- இது ஆர்டன் காடு -,- இது சமுத்திரக் கரை -, என்று பலகையிலோ அட்டையிலோ எழுதித் தொங்க விடு

வது வழக்கமாயிருந்தது. திராவிடதேசத்திலும் ஆதிகாலத்தில் திரைகள் இல்லை. ஆகவே தற்காலத்தில் ஆயிரக்கணக்காகச் செலவழித்து எழுதப்படும் திரைகள் முதலியன, நாடகத்திற்கு ஒரு சோபிதத்தைக் கொடுத்தபோதிலும், அவைகள் இன்றி ஓர் நாடகத்தை நடத்தக் கூடுமானபடியால் அவைகள் மிக அவசியம் என்று சொல்வதற்கில்லை. தற்காலத்திலும், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில், ஷேக்ஸ்பியர் மஹாகவியின் நாடகங்கள்கூட, அரங்கத்தின் பிற்பக்கம் கட்டப்பட்ட வெறும் படுதாவுடன் நடிக்கப்படுகின்றன. சில வருடங்களுக்கு முன் சென்னையில் ஒரு ஆங்கில நடிகர் ஷேக்ஸ்பியர் எழுதிய "மாக்பெத்" என்னும் அருமையான நாடகத்தை, பின்புறம் கட்டப்பட்ட ஒரு சிவப்புத்திரை ஒன்றை வைத்துக்கொண்டு எல்லாக் காட்சிகளையும் வெகு விமரிசையாய் நடத்தியதைக்கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அன்றியும் நாடகங்களுக்கு விமர்சனம் எழுதும் சில புத்திமான்கள், பெரும் பொருள் செலவழித்து ஏற்படுத்தப்படும் திரைகள் முதலியன மக்கள் கண்களைக் கவர்ந்து, அவர்கள் நாடகத்தின் அருமையை அறியாதபடி மறைக்கின்றன என்று அபிப்பிராயப்படுகின்றனர். ஆகவே, மேற்கூறிய, நாடகத்தின் ஆறு பிரிவுகளில், திரைகளுக்கு முதல் இடம் கொடுப்பது கூடாது.

இனி, நாடகத்தில் ஒரு முக்கிய பிரிவாகிய சங்கீதத்தை எடுத்துக்கொள்வோம். இது நாடகத்தில்

மிகவும் முக்கியமான பாகம் என்று சிலரால் - முக்கியமாகத் தென்னுட்டில் - கருதப்படுகிறது. ஆகவே இதைப்பற்றி நாம் சற்று ஆராயவேண்டி யிருக்கிறது. நாடகம் என்பது கதையை நடிப்பினுல் நடித்துக்காட்டுவதாம். இதற்குச் சங்கீதம் அனுகரணமாயிருந்தபோதிலும், மிகவும் முக்கிய பாகமாகாது. அன்றியும் நாடகமானது உலக நடவடிக்கையைக் கண்ணுடியைப்போல் எடுத்துக்காட்டுவதனுல், மிகவும் சில சந்தர்ப்பங்களுக்கே, சங்கீதம் உபயோகப்படுமே ஒழிய மற்றச் சந்தர்ப்பங்களில் இதற்கு இடமில்லை. இக்காரணம் பற்றியே மேல் நாடுகளில், சங்கீதமில்லாத நாடகங்களுக்கே 'நாடகம்' என்று பெயர் வழங்கி வருகின்றர். சங்கீதமுடைய கதைகளுக்கு 'ஆபரா' என்று பெயர் இட்டிருக்கின்றனர். அவர்கள் இந்திய நாடகங்களிலுள்ள பெருங்குறை சங்கீதமயமாயிருப்பதே என்கின்றனர். நாடகங்களில் மற்ற முக்கிய அம்சங்களைக் கவனிப்பதில்லை என்று ஏசுகின்றனர். நமது தென்னிந்தியாவில் நடிக்கப்படும் பல நாடகங்கள் இதற்கு இடம் கொடுக்கின்றன என்பதை, நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. இதனுல், சங்கீதத்தின் பெருமையையும் அருமையையும் குறைத்துப் பேசுவதாக எண்ணக்கூடாது. நாடகக் கலைக்குச் சங்கீதம் ஒரு அம்சமே ஒழிய, முக்கியமாகாது என்று கூறியபடியாம். சங்கீதக் கச்சேரிகளில் சங்கீதத்திற்குரிய எல்லா அம்சங்களையும் எடுத்துக் காட்டவேண்டியதுதான் ; ஆனுல் நாடகத்தில், கதை

யின் போக்கிற்கும், நடிக்கப்படும் ரசத்தில் பாவத்திற்கும் சங்கீதம்எவ்வளவு உபகரணமாயிருக்குமோ, அம்மட்டும்தான் அதை உபயோகிக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம்.

இனி, நடிகர்களும் அவர்கள் தரிக்கும் வேஷமும், அவர்களுடைய நடிப்பும் நாடகத்தின் முக்கியமான உறுப்புக்கள் தாம்; ஆயினும் நடிகர்கள், நடிக்கப்படும் நாடகத்திற்குத் தக்க உருவங்களை உடையவர்களாய் இருக்கவேண்டும். அப்பாத்திரங்களுக்குத் தக்க உடைகளைத் தரிக்கவேண்டும். நாடகக் கதையிலுள்ள அம்சங்களுக்கு ஏற்றபடி நடிக்கவேண்டும்.

மேற்கூறிய விஷயங்களை ஆராய்ந்து பார்ப்போமாகில், நாடகத்தின் கதைதான் மிகவும் முக்கியமானது என்று ஏற்படும். இதை மற்ெறாருவிதமாக ஆராய்ந்து பார்ப்போம். நாடகக் கதை ஆபாசமானதாயிருந்தால், அதை நடிக்கும் நடிகர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாயிருந்தாலும், அவர்கள் எவ்வளவு பொருத்தமான வேடம் தரித்தாலும், திரைகள் முதலியன எவ்வளவு அழகாயிருந்தாலும், சங்கீதம் மிகவும் இனிமையாயிருந்தாலும் என்ன பயன்? நாடகம் சோபியாதல்லவா? நாடகக்கதை மாத்திரம் மனத்தைக் கவரக்கூடியதாயிருந்தால், இந்த உபகரணங்களெல்லாம் அத்துணை விமரிசையாய் இல்லாவிட்டாலும், மக்களின் மனத்தைக் கவரும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. அரிச்சந்திரன் நாடகத்தை எடுத்துக் கொள்வோம். நடிகர்

கள் எவ்வளவு கல்விப் பயிற்சி இல்லாதவர்களாய் இருந்தபோதிலும், அவர்கள் பூணும் வேடம் பொருத்தமானதாய் இல்லாவிட்டாலும், அவர்கள் சங்கீதம் அதிக நயமாயில்லாதிருந்தாலும், திரைகளே இல்லாதிருப்பினும், கதையின் போக்கு எவ்வளவு முறை பார்த்ததாய் இருந்தபோதிலும், எல்லோருடைய மனத்தையும் கலக்குகிறது என்பது திண்ணம். ஆகவே நாடகத்திற்கு உயிர் நிலையான விஷயம், நாடகக் கதையாகும் என்று நாம் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே.

இனி இந்நாடகக் கதை எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும் என்று பார்ப்போம்.

முதலில், நாடகத்தை ஆதிமுதல் அந்தம் வரையில் மனத்தைக் கவர்வதாயிருக்கவேண்டும். இதற்கப்புறம் என்ன காட்சி வருகிறது, இதற்குப் பிறகு எவ்வாறு செல்கிறது என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டியதாய் இருக்கவேண்டும். ஆகவே புதிய கதையாயிருத்தல் நலம். பழைய கதைகளையும் புராணக் கதைகளையும் எடுத்துக் கொண்டால், அவற்றின் தொடர்ச்சி எப்படி யென்றும், முடிவு எப்படி யென்றும் சபையோருக்கு முன்னதாகவே தெரியுமாதலால், கதையில் சாராம்சங்களை ஆவலுடன் அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். முதலிலிருந்து இறுதி வரையில் மனக்கிளர்ச்சியைக் கொடுத்துக்கொண்டே போகவேண்டும். கதையை அனுவசியமாக வளர்த்திக்கொண்டே போனால் இது சாத்தியமாகாது. ஆகவே நாடகக்

கதை சுமார் மூன்று மணிக்குள் முடிவதாய் இருக்க வேண்டும். அனாவசியமான பாகங்களைக் கதைக்குள் புகுத்தலாகாது. சில கதைகளில் ஹாஸ்ய ரசம் இருக்கவேண்டுமெனக் கருதி, கதைக்குச் சம்பந்தமே இல்லாத சில காட்சிகளை எழுதிவைக்கின்றனர். இது பெருந்தவறாகும். ஹாஸ்யமாக வேண்டுமென்றால், அது முக்கியக் கதையினின்றும் பிரிக்கக்கூடாத ஒரு பாகமாய் இருக்கவேண்டும். அன்றியும் சம்பாஷணைகள், பொருத்தமானவையாயும், ரசம் ததும்பும்படியானவைகளாயும் இருத்தல்வேண்டும். காவியங்களுக்குரிய வர்ணனைகளெல்லாம்நாடகத்தில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு காட்சியும் நாடகத்தின் கதைப்போக்கை ஒட்டி, அதைப் படிப்படியாக நடத்திக்கொண்டு, கதையின் முடிவிற்குத் துரிதமாய்க் கொண்டுபோகவேண்டும். அன்றியும் நாடக பாத்திரங்களின் சம்பாஷணையானது அவர்களுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்திக்கொண்டே போகவேண்டும்.

மேலும் கதையின் காட்சிகளை ஒன்றின்பின் ஒன்றாக அடுக்கி எழுதுவதில் முக்கியமாக இரண்டு மூன்று விஷயங்கள் கவனிக்கத் தக்கன. எந்தக் காட்சியும், இதென்ன இவ்வளவு நீளமாயிருக்கிறதே என்று எண்ணுவதற்கு இடங்கொடுக்கக் கூடாது. தவிரவும் ஒரு சோகமான காட்சியிருந்தால், அதற்கு அப்புறம் சிறிது ஹாஸ்யமாகக் காட்சி வரும்படியாக அமைத்து, இவ்வாறே ரசங்களை மாற்றிக்கொண்டே போதல் நலமாம். இன்னும், காட்சி

களைத் தொடுப்பதில், காட்சிகளைக் கோடிப்பதற்காக இடைநேரம் அதிகமாயிராதபடி, எழுதிக்கொண்டு போவது உசிதமாம். இதற்கெல்லாம் ஒரு நாடகத்தை எழுதுபவர், நடிகராகவும், சூத்திரதாரராகவும் பழகியிருந்தால் இவற்றைச் செய்யும் மார்க்கம் அவருக்கு எளிதில் புலப்படும். இவற்றையெல்லாம் சொல்லித் தெரிந்து கொள்வதைவிட அனுபவத்தில் சுலபமாய் அறியலாம்.

இவற்றினும் முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது, நாடகக்கதையானது, நடிகர்கள் தங்கள் திறமையை நன்ருய்ப் பலவிதங்களில் காட்ட இடங்கொடுக்கவேண்டும். நாடகக்கதை ஆபாசமானதாயும் ரசமற்றதாயும் இருந்தால் எப்படிப்பட்ட சிறந்த நடிகனுயிருந்தாலும் என்ன செய்யக்கூடும்? இதற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். ஐரோப்பா கண்டத்திலும், அமெரிக்கா கண்டத்திலும், ஆங்கிலம் தெரிந்த ஒவ்வொரு நடிகனும் ஷேக்ஸ்பியர் மஹாநாடக கவி எழுதிய ஹாம்லெட் என்னும் நாடகத்தைத் தன் ஆயுட்காலத்தில், ஒரு முறையாவது நடிக்கவேண்டுமென்று பேரவாக் கொண்டிருக்கிருன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம், உலகப்பிரசித்திபெற்ற அச்சிறந்த நாடகத்தில் அனேக நாடக உறுப்புக்கள் நிரம்பி இருக்கின்றன என்பதாம். இதை ரசமான நடிப்புக் கட்டங்கள் என்று ஒருவாறு கூறலாம். அதாவது ரசம் ததும்பும்படியான, பார்ப்பவர்கள் மனத்தைக் கலக்கவல்ல, ஒரு நடிகன்

தன் நடிப்புத் திறமையை நன்ருய்க் காட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் என்று சொல்லலாம். இதற்கு ஒரு உதாரணம் கொடுக்கிறேன். மனோஹரன் என்னும் நாடகத்தில் மனோஹரன் தன் தாயை ஏசிய தகப்பனைக் கொல்ல வாளை உருவுகிருன். அச்சமயம், அத்தாயார், தன்னைப் பராமுகம்செய்த புருஷனைக் காப்பதற்காக மனோஹரனைத் தடுக்கிருள். மனோஹரன் திடீரென்று நீறு பெற்ற சர்ப்பம் போல் அடங்குகிருன். இந்தச் சந்தர்ப்பம் மனோஹரன், பத்மாவதி முதலிய நடிகர்களுக்கு நன்ருய் நடித்துத் தங்கள் நடிக்கும் திறமையைக் காட்ட இடம் தருகிறது. சபையோர் மனத்தைக் கவர்கிறது. ஒரு நாடகக் கதையில் இத்தகைய மனக் கிளர்ச்சியைக் கொடுக்கத்தக்க பல சந்தர்ப்பங்கள் நிறைந்திருந்தால் நாடகக் கதை சோபிக்கும். நாடகத்தின் பாத்திரங்கள் நன்ருய் நடிக்க இடங்கொடுக்கும். சபையோரின் மனத்தையும் திருப்திசெய்யும்.

அன்றியும் நாடகக்கதையின் பல ரசங்கள் மாறி மாறி வரவேண்டும். ஆதிமுதல் அந்தம் வரையில் ஒரே ரசமாயிருத்தலாகாது. சந்திரமதி லோகிதாஸனுக்காகப் புலம்புவதை எவ்வளவு நேரம் நாம் கேட்டுக் கொண்டிருக்க இயலும்? உலகப் பிரசித்தி பெற்ற ஹாம்லெட் என்னும் ஆங்கில நாடகத்திலும், ஜர்மனி தேசத்து மஹாநாடக கவியாகிய கட்டே என்பவர் எழுதிய **பாஸ்ட்** என்னும் நாடகத்திலும், நமது தேசத்து வடமொழி மஹா நாடக கவியாகிய **காளிதாஸர்** எழுதிய **சகுந்தலை** என்னும்

நாடகத்திலும், நவரசங்களும் நிறைந்திருப்பதைக் கவனிக்கவும்.

மேலும் நாடகக்கதையின் போக்கு, படிப்படியாகச் சபையோரின் உற்சாகத்தை அதிகரித்துக் கொண்டுபோய், முடிவானது அற்புதத்தையோ ஆச்சரியத்தையோ தரத்தக்கதாயிருக்க வேண்டும். இது ஆங்கிலத்தில் 'க்ளைமாக்ஸ்' என்று சொல்லப் படுகிறது. இது சாதாரண மக்கள் எதிர்பாராத முடிவாயிருக்கச் செய்தால், நாடக ஆசிரியனுடைய திறமையை நன்கு விளக்கும். சுருக்கிச் சொல்லுமிடத்து சாரமமைந்த கதைகளையே நாடகங்களாக அமைக்கவேண்டும். சாரமில்லாக் கதைகளை நாடகங்களாக எழுதுவதைவிட வாளா விருத்தல் நலம்.

கடைசியாக நாடகக்கதையில், கதைக்கு வேண்டிய அம்சங்களைத்தவிர சம்பந்தமில்லாத, அசந்தர்ப்பமான கிளைக்கதைகள் முதலியவற்றைக் கொண்டுவரலாகாது. நமது நாட்டில் முக்கியமாகத் தமிழ் நாடகங்களில், கதைக்குச் சிறிதேனும் சம்பந்தமில்லாத இதர விஷயங்களை, முக்கியமாக ஹாஸ்யங்களைக் கொண்டு வந்து சேர்த்தல் வழக்கமாயிருக்கிறது; இது பெருந்தவறாகும். ஆகவே அவசியமில்லாத சம்பாஷணைகள், அனாவசியமான பாட்டுக்கள், அனாவசியமான ஹாஸ்யங்கள் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும். ஆகவே ஒரு நாடகத்திற்கு அஸ்திவாரமான கதையை ஆசிரியர்கள் மிகவும் கவனிக்கவேண்டும்.

பயிற்சி

1. நாடகத்தின் ஆறுபிரிவுகள் எவை
2. திரைகளைப்பற்றி ஆசிரியர் கூறுவனவற்றைச் சுருக்கி வரைக.
3. நாடகத்தில் இசைப்பகுதி எவ்வாறு இருத்தல் வேண்டும் ?
4. நாடகத்தில் முக்கியமானது எது? ஏன் ?
5. சிறந்த நாடகக்கதைகள் என்று ஆசிரியர் உதாரணங்களாகக் காட்டும் நாடகங்கள் எவை ?
6. நாடகக் கதையில் காட்சிகளை எவ்வாறு அமைத்தல் வேண்டும்?
7. நாடகக்கதையின் போக்கு எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும் ?
8. நாடகக்கதையின் முடிவு எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்?
9. ஆசிரியர் நாடகாசிரியர்களுக்குப் புகலும் நல்லுரைகளைச் சுருக்கி வரைக.

---

# 11. "நாவலர்" பெருமை

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம்.எ.
அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்.

(இக்கட்டுரையில் ஆசிரியர் நாவலரவர்களின் தமிழ்ப் புலமையையும் சமயப் பற்றையும் தெளிவாய் நல்ல நடையில் வரைந்துள்ளார். தமிழ் உரை நடையை விறிவுறச் செய்தபெருமை நாவலர்க் குரித்து என்னலாம்.)

ஆறுமுக நாவலர் தோன்றிய காலம் பாவுருவில் நூல்களை இயற்றவேண்டுமென்ற நோக்கம் மலிந்தகாலம்; அவரவர் கற்ற கல்வி அவரவர் பொருளே என நினைத்துக்கொண்டு பிறர்க்கீந்தால் குறைந்து விடுமென்று கருதிய காலம்; நாம் அரும் பாடுபட்டு அறிந்த பலவற்றைச் சில நாட்களில்

அறிந்து செல்ல நினைக்கும் இவர்க்கு நாம் கூறு வதோவென்று கருதிய புலவரிருந்த காலம்; சுவடி யொன்றிருக்குமேயாகில் அதனைப் பிறரெவர்க்குங் காட்டாது இல்லையென்று பலர் சொல்லி வந்த காலம்; உதாரணமாக, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், சிவதருமோத்திரச் சுவடி பெற அரிதின் முயன்றும் முடியாமல் சுந்தரம் பிள்ளை என்ற ஒருவர் செய்த தந்திரத்தாலன்றோ அதனைப் பின்னர்ப் பெற்றார்! அம்பலவாண முனி வரிடம் அவர் பாடங்கேட்கச் சென்ற பொழுது விரைவில் அறிந்துகொண்டு செல்ல நினைத்து அவர் வந்திருப்பதாக வன்றோ கருதப்பட்டு முதலிற் பாடஞ் சொல்லிவைக்கப்படுதற்கு உரியரென மதிக் கப்பட்டாரல்லர். யமகத்திரிபந்தாதிகளும், சொற் சுவை மலிந்த கவிகளுமல்லவோ இப்புலவராலும் அக்காலத்தில் இயற்றப்பட்டன.

இக்காலத்தில் "யாரும் பாடுபுகழ் ஆறுமுக நாவலர்" இருள் நீக்கி ஒளியளிக்கவல்ல ஒரு கதிர வன்போல் தோன்றினர். மடற்பனைகள் நிரம்பிய வூரில் தென்னை மரமும், ஆலமரமும்போல வந்து பயனளித்த பெரியாராகிய இவர் 1823-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்து நல்லூரில் **கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார்** ஆகிய இருவரின் தவப்பயனாய்ப் புதல்வரா கத் தோன்றினர். இவர் நல்ல பரம்பரையில் வந்தவர். சிவஞானசித்தியாருக்கு ஒரு நல்லுரை இயற்றிய ஞானப்பிரகாசர் மரபில் வந்த இவர், கையில் எழுத் தாணியுஞ் சட்டமுங் கொண்டு ஒரு தமிழ்நாடகத்தை

எழுதும் பொழுதே துஞ்சிய ஒருவரது புதல்வராகப் பிறந்த இவர், புராணப் பிரசங்கங்கட்கெல்லாம் சிறுவயதில் அழைத்துச்சென்ற மயில்வாகனனுரை மைத்துனராகப்பெற்றிருந்த இவர், சேனதிராயர், சரவணமுத்துப்புலவர் ஆகிய பெரியோர்களை ஆசிரியராகப் பெற்றிருந்த இவர், பிற்காலத்திற் பெருமையும் பீடுமுற்றது வியப்பன்று.

இவர் தம் ஓய்வு நேரங்களை வீணே கழியாது குடி இல்லாத் தனியிடங்கள் கண்டு, ஆங்காங்குச் சென்று புத்தகங்களைப் படிப்பதில் பயன் படுத்தினர். உரைக்கப்படும் பொருளை உளத்தமைத்து, மாணவர் கொள்ளுமாற்றலறிந்து அதற்கேற்பப் பலருக்குக் கல்வி பயிற்றினர். தம் மாணவரில் ஒருவர் வைசூரி நோயால் வருந்தியபொழுது அவரை இவர் போய்ப் பார்க்கக் கூடாதென்று பலர் ஒருபால் வற்புறுத்திச் சொல்லவும் கேளாது அவர் இருந்த இடஞ்சென்று அவரைக்கண்டு பேசி, இருந்து ஆவனபுரிந்து வந்தமையால் மாணவர்பால் இருந்த அன்பினைப் புலப்படுத்தினர்; சிதம்பரத்திலும், யாழ்ப்பாணவண்ணர் பண்ணையிலும் பள்ளிக்கூடங்களை யமைத்துப் பலருக்கு அறிவு புகட்டி வந்தார். இத்தகைய பெரியார் பின்னளிற் பெரிய பிரசங்கியாராகவும், பதிப்பாளராகவும், உரையாசிரியராகவும் ஆனது வியப்பன்று. அன்றியும் இவர் எடுத்துக் கொண்டதொரு பொருள்பற்றித் தொடுத்துப் பலமணி நேரம் ஆடாமல் அசையாமல் இருந்து சொற்பொழிவாற்றும் ஆற்றல் படைத்தவராவர்.

"ஆயத்தமில்லை" "சைவ சமயமே சமயம்" என்ற தலைப்புக்களின் கீழ் இவர்செய்த சொற்பொழிவுகள் மிகச் சிறந்தவை எனக் கூறுவர்.

நன்னூல் விருத்தியுரை, திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக்கொத்து ஆகியவற்றைப் பிழையறப் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அளித்த வள்ளலார் இவர். நன்னூற் காண்டிகையுரை, கோயிற்புராணவுரை, சிவ தருமோத்திரவுரை ஆகியவற்றை இயற்றிப் புகழைத் தமதாக்கிக் கொண்டவர் இவர். வசனநடை கைவந்த வல்லாளர் என திரு. வீ. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்களாற் பாராட்டப்பட்ட பெருமையை யுடையவர் இவர். பாலபாடங்கள், சைவ வினு விடை, திருவிளையாடல் வசனம், பெரியபுராண வசனம் ஆகியவற்றை எழுதி, தமிழ்மக்கள் வசனநடையெழுதப் பயில்வதற்கு அடி கோலியவர் இவர். இவர் எழுதிய பால பாடங்களை, வசனநடை எழுத முற்படும் சிறுவர்கள் கைக்கொள்ளத் தக்க நடை வண்டியென்று சொல்லலாமென்றும், பெரிய புராண வசனத்தை வசனமுங் கதையுமெழுத முற்படும் பெரியார்களும் விரும்பி நோக்கத்தக்க வழிகாட்டியென்னலாம் என்றும், திருமணம் செல்வக் கேசவராய முதலியார் கூறுவர். தமிழ் வசன நடைச் சரித்திரத்தில் இவருக்கு என்றுமழியாப் பேரிடமுண்டு.

தமிழ்க் கவிகளிற் பயின்ற இவர் கவிஞராக இராது வாழ்ந்திருத்தல் இயலாததொன்று. விரும்பினரேயாயின் இவருடைய சமகாலத்தவராகிய

மீனுட்சி சுந்தரம் பிள்ளை, இராமலிங்க சுவாமிகள் முதலியோரைப் போன்ற கவிஞர்க்கொப்பக் கவியும் இயற்றியிருப்பர். இதன் உண்மை இவர் பற்பல சமயங்களிற் பாடிய தனிப் பாடல்களானும் "கதிரை யாத்திரை விளக்கம்" என்ற பகுதியானும் பெறப் படும். பலரும் அறியத்தக்க வசனமே அக்காலத் தில் வேண்டப்படுவது என்ற உணர்ச்சியினுல் கவி செய்து பெறத்தக்க புகழை இவர் தியாகஞ் செய்தா ராகல்வேண்டும்.

இத்துணைப் பெருமை வாய்ந்த இவரை அக் காலத்தில் தமிழர் போற்ருதிருந்தாரல்லர். திருவா வடுதுறை ஆதீனத் தலைவர் நாவலர் என்ற பட் டத்தை வழங்கியும், மதுரை திருஞான சம்பந்த சுவாமி மடத் தலைவர் இவருக்கு, ஆறு கட்டிச் சுந் தரவேடங்களை உரியவெனத் தர முற்பட்டும், திரு வண்ணுமலைக் குன்றக்குடி மடத்தலைவர் இவரைச் சிவிகையிலேற்றி ஊரெங்கும் உலாவரச்செய்தும், சில சைவஅன்பர் இவரை ஐந்தாம் குரவரென நினைத்துப் பேணியும் வந்ததாக அறிகின்ருேம். ஆறுகட்டிச் சுந்தர வேடங்களைத் திருஞானசம்பந்த மடத்தார் கொடுப்ப இவர் அவற்றைப் பெற்றுக் கொள்ளாதது "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந் தன்று; அதனெதிர் கொள்ளேன் என்றல் அதனி னும் உயர்ந்தன்று" என்ற பழம் பாடற் பகுதிக் குத் தக்கதொரு பிற்கால உதாரணமாதல் காண்க.

இவர் ஒழுக்கத்தில் தலைசிறந்தவர் என்றும், தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றும்

பொருட்டு, மணந்து பெறுமின்பத்தை வேண்டா மெனத் துறந்தவரென்றும், தருமசிந்தையுடையவ ரென்றும் பிறரைப் பாதுகாக்கும் பெற்றியுடைய வர் என்றும் அறிகின்றோம். "கனவிலும் நன்னடை தணவாதசீலன்" என்று சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்களாற் சிறப்பிக்கப் பட்டவர் இவர். கொடுக்கப்பட்ட பொருள்களைப் பற்பல சமயங்களிற் பெறமறுத்தார் என்பதால் இவரது தன்னலமின்மை புலப்படும். இவர் சைவர்களுக்கு விடுத்ததொரு வேண்டுகோள், திரு. த. கைலாச பிள்ளை அவர்கள் இவரைக் குறித்தெழுதிய புத்தகத்தில் வெளியிடப்பட்டிருப்பது இவரது தருமசிந்தையைத் தெற்றெனக் காட்டும். நந்தனர் சரிதம் இயற்றிய கோபால கிருஷ்ண ஐயர் என்பவரை இவர் பாலித்தது பிறரைப் பாதுகாக்கும் இவரது பெற்றியைக் காட்டும். சென்னையில் வாழ்ந்து வந்த ஒரு காலத்தில் மடைப்பையன் எவனும் இல்லாத காரணத்தினுல் பூசை நைவேத்தியங்களை மாத்திரமே உண்டு, பிறிதொன்றும் வேண்டாது இவர் இருந்து வந்தது இவருடைய தியாக புத்தியை உணர்த்துவதன்றோ?

இவரது சைவப்பற்று சொல்லுந் தரத்ததன்று. "அவநெறியாய அனைத்துங் களைந்து சிவநெறி வளர்க்கும் திவ்விய குணத்தர்" என்றும், "சைவமெனும் பயிர் வளர்க்கும் எழிலிபோல்வார்" என்றும் மீனட்சி சுந்தர நாவலர் அவர்கள் இவரைப் போற்றியுள்ளாரே யாயின் இவர் திறன் எத்

தகைத்தாயிருத்தல் வேண்டும்! திருநீறு பூசியே எக்காலும் வேலைக்கு வருவேனென்ற நிபந்தனையைப் "பர்சிவல்" துரையிடத்தில் இவர் செய்து கொண்டார் என்றால், தமையனார் திவாகரராசர் என்பார் பெரிய புராணக் கதைகள் கட்டுக்கதைகள் என்று சொல்லியதைக் கேட்டு வாளினால் அவரைக் கொல்லமுற்பட்டனரென்றால், இவருடைய அழுத்தமான சைவப்பற்று சாதாரண மக்களிடை காணப்படுவதொன்றன்று என்பது புலனாம்.

"சுண்ணவெண் சந்தனச் சாந்தும்........திண்ணென் கெடிலப் புனலும்" உடையார் ஒருவரது தமராகிய இவர் அஞ்சத்தக்கதும் உண்டோ? உண்டெனின், இவர் அஞ்சியன வெல்லாம் பழியே. அஞ்சாதிருந்தது வலியுடைய மக்களையாம். இதற்கு உதாரணமாக, செல்வாக்கு மிக்க "டைக்" துரைக்கு இவர் வாய் பேசாது கையினால் தமையனாருடைய வீட்டைக் காட்டிச் சென்றமை சொல்லப்படுவதுண்டு. அங்ஙனமே பொருள் மிகப்படைத்த சேதுநாட்டுத் தலைவர் பொன்னுச்சாமித் தேவரிடம் இவர் வருவதாயிருந்தால், தேவர் எழும்போதெல்லாந் தாமெழுமாறு வற்புறுத்தக்கூடாதென்றும், அவருக்குமுன் இவர்மேல் துணியை எடுத்துவிடவேண்டுமென்று பணிக்கக்கூடாதென்றும், இனைய பிறவாறும் நிபந்தனைகளைச் செய்துகொண்டு இவர் அங்குச் சென்றார் என்றால், இது பொருளுடையாரிடத்தில் அஞ்சாதிருந்த இவரதாற்றலை வெளிப்படுத்துகின்றதன்றோ?

இவர் பழமையைப் பெரிதும் போற்றி யொழுகி வந்தவரென்பது, ரோசாமலர் இவரது பூசையில் உபயோகப்பட்டு வந்ததேனும், வடமொழிப் புட்ப விதியில் சொல்லப்படாத காரணத்தால், தாம் இயற்றிய தமிழ்ப் புட்பவிதியில் இவர் சேர்க்காது விட்டமையால் இனிது புலப்படும். இப்பழமை விரும்பியார் "பிரிட்டோ" துரைக்கெதிராக, திரு. பொ. இராமநாதன் அவர்களுக்குதவியாய் இலங்கைச் சட்ட மன்றத் தேர்தலில் உழைத்ததை அறியும் நாம் இவர் புதுமையிலும் சிலகால் இணங்கியவர் என்பதை யறிதல் கூடும்.

எல்லாவற்றிலும் சிறப்பாக இவருடைய வாழ்க்கை வரலாற்றிலிருந்து எமக்கு உவகை யளிக்குஞ் செய்தி இவர் சைவ மக்களாவார் பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களையே செய்யவேண்டும் என்று வற்புறுத்தி யிருப்பதே. இவர் இங்ஙனம் நான்காம் பாலபாடப் புத்தக முதற் பாடத்தில் மாத்திரமன்றித் தம் தமையனுருக்கு எழுதிய கடிதமொன்றிலும் வற்புறுத்தியுள்ளார். "பாவங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலும் அல்லாத சிவ வழிபாடு, அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியம் கொள்ளாமலும் தின்கிற மருந்துக்குச் சமானமாகும்" என்னும் பகுதி அக்கடிதத்திற் காணப்படுகிறது.

இப்பெரியார் இவ்வுலகை நீத்து அறுபத்தொன்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளாகியும் (5-12-1879) இவரை இன்றுகாறும் தமிழ் நாட்டாரும், சைவரும்

போற்றி வருவதொன்றே இவரது சிறப்பை விளக்கும். இவர் பெயர் தமிழ்நாட்டில் புல்லும் பூண்டும் உள்ளவரையில் மக்களால் மறக்கப்படாது என்று கூறுவது மிகையாகாது. இவரைப்பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளத் தமிழருஞ் சைவரும் முன் வருவாராக.

பயிற்சி

1. நாவலர் எத்தகைய காலத்தில் வாழ்ந்து வந்தார்?
2. நாவலர் பெருமை பெற்றது வியப்பன்று; எக்காரணங்களால்?
3. நாவலர் இயற்றிய நூல்கள் எவை?
4. நாவலரைப் புகழ்ந்த பெரியார்கள் யாவர்?
5. நாவலரின் குணங்களைத் தொகுத் தெழுதுக.
6. நாவலரின் சைவப்பற்றை விளக்குக.
7. நாவலர் செல்வர்களிடம் அஞ்சாதிருந்தார் என்பதை எவ்வாறு அறியலாம்?
8. நாவலர் பழமையைப் பெரிதும் போற்றிவந்தார் என்பதை எவ்வாறு அறியலாம்?
9. இக்கட்டுரை யாசிரியர்க்கு நாவலர் வாழ்க்கையில் மிக உவகை யளிக்குஞ் செய்தி யாது?

---

# 12. கிழவியின் நிழல்

திரு. கி. வா. ஜகந்நாதன் B. O. L.
ஆசிரியர், கலைமகள், சென்னை

(தஞ்சை ஸ்ரீ பிருகதீச்வரர் ஆலயத்தை இராஜ ராஜ சோழன் கட்டிய காலையில் நிகழ்ந்த ஓர் அரிய செய்தியை இக்கட்டுரை விளக்குகின்றது. ஆசிரியரின் எளிய நடையும், தெளிவாகச் செய்திகளை விளக்கும் முறையும் இன்புறற்கு உரியன.)

வெயில்; படை பதைக்கும் வெயில். அந்த வெயிலில் கல் தச்சர்களும், கொத்தர்களும் வேலை

செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேலை யிலே கண். வெயிலின் வெம்மையை அவர்கள் அவ்வளவாக உணரவில்லை. ஆயிரக்கணக்கான கூலியாட்கள் அங்கே வேலை செய்து கொண்டிருந் தனர். நூற்றுக்கணக்கான சிற்பியர் தங்கள் கலைத் திறனைக் காட்டினர். சிவபாதசேகரனும், சோழ சக்கரவர்த்தியும் ஆகிய இராஜ ராஜ சோழன், நெடுநாட்களாக எண்ணி எண்ணிச் சங்கல்பம் செய்து கொண்ட காரியம்; ஒரு பிரும்மாண்டமான ஆலயத்தைத் தஞ்சைமாநகரில் நிருமிக்க வேண்டு மென்று ஆர்வத்தோடு தொடங்கிய முயற்சி அது.

சோழநாட்டிலுள்ள சிறந்த சிற்பிகளும் பிற நாட்டிலிருந்து வந்த சிற்பிகளும் அந்தப் பெரிய கோயிலின் நிருமாணத்தில் ஈடுபட்டிருந்தனர். சக்கர வர்த்தி நர்மதா நதியிலிருந்து பிரும்மாண்டமான பாண லிங்கத்தைக் கொணர்ந்து ஜலவாஸம் செய் வித்திருந்தான். தஞ்சைக்கு மூன்றுமைல் தூரத்தி லிருந்து அந்த ஆலய விமானத்திற்குச் சாரம் கட்டி யிருந்தார்கள்; அந்த இடத்திற்குச் சாரப்பள்ளமென் னும் பெயர் இப்பொழுதும் வழங்குகிறது.

நாளுக்கு நாள் ஆலயம் உருப்பெற்று வந்தது. அதைக்கண்ட இராஜ ராஜன் உள்ளம் பூரித்தான்.

ஆலய விமானத்தை இயன்றால் வானளாவ நிருமித்து விடவேண்டுமென்பது அவன் ஆவல். அவன் மனம் அப்படி ஒரு கோபுரத்தைக் கற்பனை செய்து பார்த்தது. அதன்படியே செய்வதென்பது மனிதனால் சாத்தியமா? மனம் கற்பனை செய்யும்

வண்ணமே கைசெய்து விட்டால் அப்பால் தேவ லோகம் என்று ஒன்று இருக்க நியாயமில்லை. அது பூலோகத்துக்குத் தாழ்ந்து பணிந்து வாழவேண்டியதுதான். ஆனல் கடவுள் அப்படி அமைக்க வில்லை. மனிதனை நினைக்கப் பண்ணினர். நினைக்கும்படியெல்லாம் செய்ய அவனுக்குச் சக்திகொடுக்க வில்லை.

தன்னுடைய ஆவல் முழுவதும் நிறைவேருவிடினும் அதிற் சிறிதளவாவது நிறைவேற்ற முயல வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டான் அரசன். சிற்பிகள் ஆலய விமானத்தை நிருமிக்கத் தொடங்கினர். அடிப் பீடத்திலே அவ்விமானத்தின் உயரத்திற்கு ஏற்ற பரப்பை அமைத்தார்கள். இராஜ ராஜனுடைய புகழ்போலவும் தமிழ்நாட்டுக் கலைச் செல்வத்தின் எழுச்சி போலவும் கோபுரம் வானை நோக்கி நிமிரத் தொடங்கியது.

விமானத்தின்மேல், வெயிலில், கருமமே கண்ணுக வேலை செய்துவந்த சிற்பியர்கள், சோழ சக்கரவர்த்தியின் அன்புக்குப் பாத்ரரானர்கள். உணவு முதலிய சௌகரியங்களில் சிறிதும் குறைவின்றி அவன் எற்பாடு செய்திருந்தான். கலைஞர்களின் பெருமையை அவன் நன்கு உணர்ந்தவன். அந்த வெயிலில் அவர்களுக்குத் தாகம் உண்டாகுமானல் யாரேனும் சிற்ருள் வந்து நீர் கொடுப்பான். அது மிகவும் இனிமையாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கும். குளத்திலிருந்து எடுத்து வந்த நீருக்கு அவ்வளவு தன்மை இராது. சிற்பாசாரிகள் அந்தத்

தண்ணீர் அவ்வளவு குளிர்ச்சியாகவும், விளாமிச்சை வேரின் மணமுடையதாகவும் இருப்பதை உணர்ந்து, "இது எங்கே யிருந்து வருகிறது" என்று விசாரிக்கத் தொடங்கினர்.

ஒரு கிழவியின் கைங்கரியம் அது. "மகாராஜா எவ்வளவோ அன்பாக இந்தக் கோயிலைக் கட்டுகிறார். இவர்களெல்லாம் மிகவும் சிரத்தையாக வேலை செய்கிறார்கள். நாமும் இந்தக் கைங்கரியத்தில் கலந்து கொள்ளவேண்டும்" என்று எண்ணினாள் அவள். "நம்மால் இயன்றது இது தான்" என்று நினைந்து தினந்தோறும் விடியற்காலையிலே எழுந்து, பெரிய மிடாக்கள் நிறையத் தண்ணீரை நிரப்பி, விளாமிச்சை வேர் முதலியன போட்டு வைத்திருப்பாள். வேலைக்காரர்கள் அங்கே வந்து தாகம் தீர்த்துக் கொள்ளுவார்கள். விமான வேலையில் ஈடுபட்டவர்களுக்குச் சிற்றுண்டிகள் கொண்டு போய்க் கொடுப்பார்கள்.

"இவ்வளவு சிரத்தையாக நமக்குத் தாகத்திற்குத் தண்ணீர் தரும் இந்தக் கிழவி யார்?" என்று சிற்பிகள் ஆச்சரியப்பட்டார்கள். அவளை வந்து பார்த்துச் சென்றார்கள். ஒவ்வொரு நாளும் மாலையில் வேலை முடிந்தவுடன் அந்தப் பாட்டியிடம் வந்து பேசிவிட்டுச் செல்வார்கள். அவளும் மிக்க அன்போடு அவர்களுக்கு ஏதேனும் சிற்றுண்டி தருவாள்.

இவ்வாறு பாட்டியின்பால் ஈடுபட்டவர்களுள் சிற்பியர் தலைவனும் ஒருவன். விமான வேலை நிறைவேறும் தருவாயிலிருந்தது. அப்போது அவ

னுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. இந்த ஆலய நிர்மாணத்தில் உண்டாகும் புண்ணியத்தில் ஒரு பங்கு இந்தக் கிழவிக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று அவன் எண்ணினன்.

"பாட்டி! நாளையோடு விமான வேலை முடிந்து விடும். மேலே கும்பம் வைக்க வேண்டியது தான் பாக்கி. இவ்வளவு நாட்கள் நீ சிரமப்பட்டு எங்களுடைய தாகத்தைத் தீர்த்து வைத்தாய். உனக்கு அதனால் எவ்வளவோ புண்ணியம். உன்னுடைய பொருளாக அந்த ஆலயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் ஒன்றை வைக்க வேண்டு மென்பது என் ஆசை. ஏதாவது கொடு" என்றான் சிற்பியர் தலைவன்.

"நான் என்ன பெரிய காரியம் செய்துவிட்டேன்! குளத்து ஜலத்தை குடி என்று சொன்னேன். அவ்வளவு தானே? நீங்களெல்லாம் எவ்வளவோ புண்ணியசாலிகள். இந்த உலகம் உங்களைப் பாராட்டிப் புகழும். மகாராஜாவின் கீர்த்தி உலகம் உள்ளளவும் நிற்கும்" என்றாள் பாட்டி.

சிற்பியர் தலைவன் பாட்டியை எளிதில் விடவில்லை. ஏதாவது கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று வற்புறுத்தினன். "என்னிடம் தங்கம் வெள்ளியா இருக்கின்றன? இந்த வாசலிலே படியாக இருக்கிறதே, இந்தக் கல்தான் சிறிது உபயோகமாக உள்ளது. இதை வைத்துக் கொண்டு நீ என்ன செய்வாய்" என்று அந்தக் கிழவி கூறினள்.

"இதுவே போதும். உன்னுடைய புண்ணியம் நிலைக் கொள்வதற்கு இதுவே அடையாளக் கல்லாக இருக்கும்." என்று சொல்லிவிட்டு அவன், ஓர் ஆளைக்கொண்டு அந்தக் கல்லைப் பேர்த்து எடுத்துச் சென்றான்.

* * *

வானளாவ நிமிர்ந்து நின்றது கோபுரம். இராஜராஜன் வணங்காமுடிவீரன். அவன்கூடக் கழுத்து வலிக்க நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கு உண்டான உவகைக்கு அளவேது? தன்னுடைய வாழ்விலே முக்கியமானதொரு காரியத்தைச் சாதித்துக்கொண்டவன் ஆனான். விமானத்தின் சிகரத்தில் கலசம் பதிக்கப்பெற்றது. ஆலயத்தில் மும்மூர்த்திகளின் பிரதிஷ்டை வெகு விமரிசையாக நடந்தது. சோழநாட்டின் கலைச் செல்வத்தின் கூம்பு-இராஜ ராஜ சோழனின் அன்புச்சிகரம்-இராஜராஜேசுவரம் என்னும் அத்திருக்கோயிலின் விமானம் தேவலோகத்தை எட்டிப் பிடிக்கவில்லையே யொழிய அது மனிதனுடைய செயற்கையின் உயரத்தை எட்டிப் பிடித்தது. பிருகதீசுவரருக்கு ஏற்ற பெரிய விமானமாக அது அமைந்தது.

கும்பாபிஷேகம் நடைபெற்றது. இராஜ ராஜனுடைய பட்டாபிஷேகம் கூட அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை. அவன் முடிபுனைந்தது சோழ அரசின்உரிமையைப் பெற்றதற்கு மாத்திரம் அடையாளம். அதன்பின் அவன் பெற்ற வெற்றி அவன் உள்ளத்தில் வளர்ந்து வந்த சிவபக்தி. அவ

னுக்குக் கலைகளின்பால் பேரன்பு இருந்தது. இவ்வளவுக்கும் அடையாளமாக ஓங்கிநிற்கும் அத்திருக்கோயிலின் கும்பாபிஷேகம் சோழ சக்கரவர்த்தியின் வெற்றிப் பிரதாபத்தையும், பக்தியையும், புகழையும் உலகம் அங்கீகரிக்கும் திருவிழாவாக அமைந்தது. ஜனசமுத்திரத்தின் இடையிலே அந்தக் கோபுரம் ஒரு கப்பலின் கூம்புபோல நின்றது.

இராஜராஜன் அன்று ஆனந்தக் கடலில் மூழ்கியிருந்தான். இறைவன், தான் எண்ணியதை நிறைவேற்றி அருளினுரென்ற கர்வம் அவன்நெஞ்சினுள்ளே ரீங்காரம் செய்தது. "நாம் கிருதார்த்தமடைந்தோம்" என்ற திருப்தியோடு நில்லாமல், 'நாம் நம் ஆற்றலால் இதைச் சாதித்தோம்' என்ற அகங்காரமும் அந்த அன்புள்ளத்திலே தலைகாட்டியது.

இரவிலே அவன் பள்ளிக்கட்டிலில் படுத்தான். உறக்கம் வருமா? உள்ளம் ஆனந்த அலைமோதிக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அந்தக் கொந்தளிப்பிலே சிறிது அமைதி ஏற்பட்டது. கொஞ்சம் கண் அயர்ந்தான்.

* * *

"பிரபோ, இந்த ஏழையின் சங்கல்பத்தை நிறை வேற்றிய திருவருளை நான் பன்னிப் பன்னிப் பாராட்டுவதை அன்றி வேறு என்செய்யவல்லேன்? என்று மன முருகக் கண்ணீர் வழிய இராஜ ராஜன் கூறினுன்.

அவன் எதிரிலே சைவத்திருவேடம் பூண்டு பிருகதீசுவரர் நின்றார். "நீ செய்தது எல்லாம் நல்லதே. உன்னுடைய அன்பினால் நிருமிக்கப் பட்ட ஆலயத்திலே ஒரு கிழவியின் நிழலில் நாம் சுக மாக இருக்கிறோம்." இதுதான் அவர் பேசிய திரு வார்த்தை. அப்பால் அவர் மறைந்து விட்டார்.

அரசன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். அவன் மேனி முழுவதும் மயிர்க்கூச் செறிந்தது. வியர்வை துளித்தது. "இறைவன் கனவில் எழுந்தருளினான். நம் ஆலயத்தில் குடிகொண்டான். இது நான் பெற்ற பாக்கியம்!" என்று அவன் குதூகலித்தான். ஆனால் அந்தக் குதூகலத்தில் ஒரு குறை இருந்தது. "கிழவியின் நிழலிலே இருப்பதாகப் பரமேசுவரன் வாய்மலர்ந்தானே; அது என்ன?" என்று யோசிக் கலானான். "நாம் நிருமித்த ஆலயத்தில் கிழவியின் நிழல் எங்கே இருக்கிறது? கிழவி யார்? அவள் எங்கே இருக்கிறாள்?" என்ற கேள்விகள் அவன் உள்ளத்தே எழுந்தன. "அவள் யார்?" என்று பலமுறை வினவிக்கொண்டான். யார் சொல்லு வார்கள்?

அரசன் கண்ட கனவு மந்திரிகளுக்குத் தெரிந் தது. அவர்கள் விசாரிக்கத் தொடங்கினார்கள். அரசனுக்கு இருந்த உற்சாகம் திடீரென்று தடைப் பட்டு நின்றது. 'இறைவன் திருவுள்ளத்தில் இருக் கும் அந்த முதிய புண்ணியவதி யார்? யார்? என்று அரசன் உசாவிக் கொண்டே இருந்தான்.

சிற்பியர் தலைவனுக்குத்தான் இரகசியம் தெரியும். அரசன் பெருங்கவலைக்கு உள்ளாகி யிருப்பதை உணர்ந்த அவன் அரசனை அணுகினன். விஷயத்தை வெளியிட அவன் மனம் துணியவில்லை. தான் செய்த காரியம் நன்றியறிவுக்கு அடையாளமாக இருப்பினும் அரசன் அதைப் பெருங்குற்றமாக எண்ணி விடுவானே என்று அவன் நடுங்கினன். பிறகு ஒருவாறு துணிந்து கூறத் தொடங்கினன்.

"மகாராஜா! நாங்கள் விமானவேலை செய்த காலத்தில் எங்களுக்கு மிகவும் குளிர்ந்த தண்ணீர் தந்து எங்கள் தாகத்தை ஒரு கிழவி போக்கினள். அவளுக்குக் கைம்மாருக எங்களால் ஒன்றும்செய்ய இயலவில்லை. அவளுடைய பொருள் ஒன்றை இந்த ஆலயத்திலே சேர்த்துவிட வேண்டுமென்று எண்ணி அவளைக் கேட்டேன். அவள் தன் வீட்டு வாயிலில் இருந்த படிக்கல்லைத் தந்தாள். விமானம் நிறைவேறும் தருணத்தில் இருந்தமையின் விமானத்தின் உச்சிக்கல்லாக அதை வைத்தேன். அது அங்கே நன்ருகப் பொருந்தி விட்டது" என்று அவன் கூறி முடிப்பதற்கு முன் அரசன், "ஹா! ஹா!" என்று விம்மிதனுனன். அவன் கண்ணில் நீர் துளித்தது. சிறிது நேரம் அவன் தன்னையே மறந்திருந்தான். அவனுடைய கர்வம் பங்கப்பட்டு விட்டது. அவ்வளவு முயன்று செய்தும், அவன் செய்த ஆலயத்திலே இறைவன் இருந்தும், பயனை நினையாமல் அன்புசெய்த கிழவியே இறைவனுக்கு நிழல்தரும் பாக்கியத்தைப் பெற்ருள்.

"அப்படியா! உங்களுக்கு நீரும், பகவானுக்கு நிழலும் தந்த அந்தப் புண்ணியவதியை நான் தரிசிக்க வேண்டும்" என்றான் அரசன்.

கிழவி வந்தாள். "தாயே உன் பெருமையே பெருமை. எங்கள்மனத்திலே இறைவன் இருக்கிறான். அவன் திருவுள்ளத்திலே நீ இருக்கிறாய். உன் அன்பின் நிழலிலே அவன் வசிக்கிறான். நான் நிருமித்தேன் என்று இருமாந்திருக்கும் அந்தப் பெரிய கோயிலிலே, எனது அகங்காரத்தின் வெம்மையே சூழ்ந்திருக்கிறது. அதனிடையில் உன்னுடைய தன்னலமற்ற உபகாரத்தின் அடையாளமான கல்லின் நிழலிலே, உன்னுடைய அன்புக் குடையின்கீழ்' என் குலதெய்வம், சோழ குல மூர்த்தி ஆகிய பிருகதீசுவரர் கோயில்கொண்டிருக்கிறார். நீ வாழ்க!" மன்னன் இவ்வாறு தன் உள்ளத்தைத் திறந்து விட்டான். யாவரும் பிரமித்துப் போயினர்.

* * *

கிழவி பழைய கிழவியாக இருக்கவில்லை. அவள் அரசகுடும்பத்துள் ஒருத்தியைப்போல வாழலானாள்.

பயிற்சி

1. "சாரப்பள்ளம்" என்று பெயர்வரக் காரணம் என்ன?
2. இராஜ ராஜன் கோயிலை நிருமிப்பதைப் பற்றி என்ன எண்ணி இருந்தான்?
3. இராஜராஜன், கோயில் வேலையில் ஈடுபட்டிருந்தோர்க்கு எத்தகைய உதவிகளைச் செய்திருந்தான்?
4. கிழவி எத்தகைய திருப்பணி செய்துவந்தாள்?

5. கிழவியிடம் அன்புமிகுந்த சிற்பியர் தலைவன் என்ன நினைத்தான் ?
6. கிழவி தன் புண்ணியம் நிலைக்கொள்வதற்காக எதனை அளித்தாள் ?
7. கும்பாபிஷேகம் நடைபெற்ற விதத்தைச் சுருக்கி வரைக ?
8. இராஜ ராஜன் எவ்வாறு கர்வம் கொண்டான் ?
9. இறைவன் இராஜ ராஜனுடைய கனவில் கூறியன எவை ?
10. சோழன் கிழவியை எவ்வாறு புகழ்ந்தான் ?
11. 'தஞ்சைப் பெரிய கோயில் நிருமாணம்' என்னும் பொருள் பற்றி ஓர் சிறுகட்டுரை வரைக.

---

# 13. மைசூர்த் தசரா

பண்டிதர், திரு. கா. போ. இரத்தினம் அவர்கள், B O L.,
(யாழ்ப்பாணம்)

[ஆசிரியர் யாழ்ப்பாண வாசியாயினும் இந்தியாவில் பல இடங்களைச்சுற்றிப் பார்த்திருக்கிறார். தாம்சென்ற இடங்களில் கண்ட காட்சிகளை விவரித்துப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.]

இக்கட்டுரையில் நவராத்திரியின் வரலாற்றையும், மைசூர்த் தசராத் திருவிழாவில் அவர்கண்ட காட்சிகளையும் கவின் பெறச் செவ்விய நடையில் எழுதியுள்ளார்.]

நவராத்திரி என்று நாம்அழைக்கும் விழாவை மைசூரிலும், வங்காளத்திலும், வேறு சில இடங்களிலும் "தசரா" என்று அழைக்கின்றனர். காளி, கலைமகள், திருமகள் என்னும் முச்சக்திகளுக்கும் நவராத்திரியில் விசேட பூசைகள் நடைக்கும். கல்வியை விரும்பும் புலவர்கள் முதலாயினோர் கலைமகளையும், பொருளை விரும்பும் வணிகர் முதலாயி

ஞோர் திருமகளேயும், வெற்றியை விரும்பும் அரசன் முதலியோர் காளியையும் விசேடமாகப் பூசிப்பார்கள். நவராத்திரியைப் பற்றிப் புராணவரலாறுகள் சிலவுள. மகிஷாசுரன் எனும் கொடிய அசுரனே வதைத்து உயிர்களேத் துன்பத்தினின்றும் காத்தருளிய பேரருட் செயலேக் காளிதேவி இக்காலத்தில் செய்தார் என்பர். அவர் அவ்வசுரனே வென்ற தசமி 'விசயதசமி' என்று அழைக்கப்படுகிறது. இவ்விசயதசமியிலேயே இராமரும் இராவணனுடன் போர் செய்யப் புறப்பட்டார். நவராத்திரிக்கு அடுத்த பத்தாம் நாளாகிய விசயதசமியில் ஆயுத பூசை மிகச்சிறப்பாகச் செய்யப்படும். அன்று குழந்தைகளுக்கு நாட்பாடமும் தொடங்கப்படும்.

'தசரா' என்னும் இந்துஸ்தான் சொல்லுக்குப் பத்தாம் நாள் என்பது பொருள். இந்தப் பத்தாம் நாளில் நடக்கும் பூசைகளும், வணக்கங்களும் இந்தியாவில் பல இடங்களில் பலவாறு செய்யப்படுகின்றன. சக்தி வழிபாடு மிக்க வங்காளத்தில், ஒன்பது நாட்களும் அல்லது இறுதி மூன்று நாட்களும் வைத்து வழிபட்ட காளிதேவியின் விக்கிரகத்தை ஆற்றில் இடுவார்கள். குஜராத்தி, நேபாளம் முதலிய இடங்களில் ஒன்பது நாட்களேயே கொண்டாடுகிருர்கள்.

நவராத்திரியும் தசராவும் இலங்கையிலும், இந்தியாவிலும், இந்தியர்கள் வசிக்கும் மலாயா, மோரிஷஸ், பர்மா, யாவா, போர்னியோ முதலிய இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்

றன. எனினும், மைசூரில் கொண்டாடப்படும் முறையாக வேறேரிடத்திலும் கொண்டாடப்படுவதில்லை. மைசூரில் தசரா ஒப்புயர்வற்ற முறையில் கொண்டாடப்படுகிறது. அதற்குள்ள பெயரும், சிறப்பும் வேறென்றிற்குமில்லை. இதனால் இத்தசராவும் கூட மைசூர்த்தசரா என்று சிறப்புப் பெயர் பெற்றுவிட்டது. எல்லாப் புகைவண்டி நிலையங்களிலும், பத்திரிகைகளிலும் மைசூர்த்தசராவைப் பற்றியவிளம்பரங்கள் காண்போர்மனத்தைக் கவரத் தக்க முறையில் வெளியிடப் பட்டிருக்கும். மைசூர் மாநகருக்கு மலிவான புகையிரதச் சீட்டுக்கள் வழங்கப்படும். இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானேர் மைசூர்த் தசராவைக் கண்டுகளிக்கச் செல்வர். அவர்கள் தங்கியிருந்து கொண்டாடிச் செல்வதற்கு வேண்டிய வசதிகள் பல மைசூர் மாநகரில் செய்யப்பட்டிருக்கும்.

மைசூரில், தசராவிழா நிகழும் பத்து நாட்களும் அரசினர் விடுதலை காலமாகும். பத்து நாட்களும் பலவகையான கொண்டாட்டங்கள் நிகழும். தசராவிழாவோடு மைசூர் அரசினர் ஓர் சிறந்த பொருட் காட்சியும் நடத்துகிறார்கள். பொருட் காட்சிக்கென்றே ஒரு பெரிய மண்டபங்கட்டி வைத்திருக்கிறார்கள். பொருட்காட்சியைக் காண்பவர்கள், அப்பொருள்களிற் பெரும்பாலானவை அங்கேயே செய்யப்பட்டன என்பதை அறியும்பொழுது திகைப்பும் வியப்பும் அடைவார்கள். இந்தியாவிலுள்ள நாடுகளில் எல்லாம் மைசூர் மாநாடே கைத்

தொழிலாலும், இயற்கை வளத்தாலும் சிறந்ததென் பதைக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருள் களே காட்டும். மலைதருபொருள்களும், காடுதரு பொருள்களும, மருதநிலந்தரு பொருள்களும், தட் டார், தச்சர், கொல்லர், ஓவியக்காரர், செம்மார், காருகர், கன்னர், குயவர் முதலிய பலர் செய்த சித் திரப் பொருள்களும் காட்சிச் சாலையை நிறைக் கின்றன; காண்போர் கருத்தைக் கவர்கின்றன. அக்காட்சிச்சாலையிலுள்ள பொருள்களையும், அவற் றின் சித்திர வேலைப்பாடுகளையும், அவற்றின் அருமை பெருமைகளையும் எடுத்துக்கூற யார்தான் வல்லுநர்?

தசரா விழாவின் ஒன்பதாம் நாளிரவு மைசூர் அரசர் தமது மாளிகையில் ஓர் பேரவை (Durbar) கூட்டுவார். மந்திரிகளும், அரசாங்க உத்தியோகஸ் தர்களும், அரசரின் விருந்தினராக வேறிடங்களி லிருந்து அழைக்கப்பட்ட பிரபுக்களும், அப்பேரவை யில் குழுமி இருப்பார்கள். அவர்கள் முறையாக அரசருக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்துவார் கள். பேரவையின் முன் அரசருடைய பெரும் படைகள் அணிவகுத்து நிற்கும். மல்யுத்தம், கழைக் கூத்து, சிலைக் கம்பம் முதலியன பல நடக் கும். பன்னிறப் பூக்கள் மலர்ந்து உதிர்வது போல வும், பல தாரகைகள் திரள் திரளாய் உதிர்வது போலவும், செம்பொற் கம்பிகள் ஆகாயத்திடைப் புகுவது போலவும் பல வாணங்கள் அளிக்கும் காட்சியின் மாட்சி அளவிடற் கரியது. மாளிகை

யின் முன்றிலுள்ள பெரு வெளியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் எள்விழ இடமின்றிக் குழுமி நின்று, அரச சபையையும், படைகளையும், வாண விளையாட்டுக்களையும், பிறவற்றையும் கண்டுகளிப்பர்.

அவ்விரவில் இராஜமாளிகை முழுவதும் பன்னிறக் காந்த விளக்குக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இக்காட்சி காண்டற்கரிய காட்சிதான். இந்த ஒப்புயர் வில்லாக் காட்சியைக் கண்டவர்கள் "இதனைக் காணக் கண்கள் என்ன கண்களோ?" என்றுதான் பல்லவி பாடுவார்கள். கண்ணாரக் களித்தற்குரிய காட்சியைச் சொற்களால் தீட்டிக் காட்டல் ஒல்லுவதொன்றோ?

அவ்வமயம் அக்காட்சியில் மனத்தை விட்ட எம்முடை நண்பரொருவர், "இக்காட்சியைக் கம்பர், அதிவீர ராம பாண்டியர் முதலியோர் கண்டால் எப்படி வர்ணித்திருப்பார்களோ? அவர்கள் இக்காலத்தில் இருக்க நாம் இருந் தவம் செய்திலமே" என்றார். அதற்குப் பதிலாக யான்,

"நிலமகள் முகமோ, திலகமோ, கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகு பூண் மார்பின் ஆரமோ, உயிரின்
இருக்கையோ திருமகட் கினிய
மலர்கோலோ மாயோன் மார்பின்நன் மணிகள்
வைத்தபோற் பேட்டியோ வானோர்
உலகின்மேல் உலகோ ஊழியின் இறுதி
உறையுளோ யாதேன உரைப்பாம்."

என்று கூறிவிட்டுப் பிறகு,

'முற்படு வானில் முளைத்த பற்பல
விற்படு தாரகை விரும்பிக் கொணர்ந்து
சிற்ப நூல்வலார் செவ்விதின் அமைத்த
அற்புத மாளிகை அன்றிவே றென்கொலோ'

எனப் பாடினேன்.

நிற்க, பத்தாம் நாள் காலைப் பொழுது மங்கல விழவில் கழியும். அரசரும் ஆயுதபூசை முதலியவற்றை முறைப்படி முடிப்பார். பிற்பகலில் தான் தசரா விழாவின் மிகச் சிறந்த பகுதியாகிய அரசருடைய ஊர்வலம் நடைபெறும். இந்த ஊர்வலத்தைக் காண்பதற்காகவே பிற இடங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் செல்கின்றார்கள். மைசூர் மக்களும் தங்கள் அரசருடைய தரிசனம் பெற விழைந்து ஊர்வலம் செல்லும் வீதிகளின் இருமருங்கும் நிற்கின்றார்கள். இந்த ஊர்வலம் பல்லாற்றானும் பகர்தற்கு அரிய சிறப்பினை உடையது.

## பயிற்சி

1. நவராத்திரி காலத்தில் வணங்கப்படும் தெய்வங்கள் யாவை?
2. எத்தகையோர், எவ்வெக் கடவுளை, எவ்வெக் காரணங்களால் வழிபடுகின்றனர்?
3. நவராத்திரியைப் பற்றிய புராண வரலாறு யாது?
4. வங்காளத்தில் நவராத்திரியை எவ்வாறு கொண்டாடுகின்றனர்?
5. இவ்விழா கொண்டாடப்படும் அந்நிய நாடுகள் எவை?
6. மைசூர்த் தசரா காலத்தில் ஆங்கு நடத்தப்பெறும் பொருட்காட்சி சாலையைப்பற்றி ஓர் சிறு கட்டுரை வரைக.
7. தசராவின் ஒன்பதாம் நாளிரவு மைசூரில் அரசர் மாளிகையில் நடைபெறுவன எவை?

8. ஒன்பதாம் நாளிரவுக் காட்சியைக் கண்ட ஆசிரியர் அதனை எவ்வாறு புகழ்ந்தார்?
9. தசராவின் பத்தாம் நாளன்று நடப்பன எவை?
10. "மைசூர்த் தசரா" என்னும் பொருள்பற்றி ஓர் கட்டுரை வரைக.

---

# 14. கூட்டுறவு முறையில் விவசாயம்

திரு என். லக்ஷ்மணன், ஆசிரியர், 'கூட்டுறவு,' கோயம்புத்தூர்

[இது 3—10—40 அன்று திருச்சி அகில இந்திய ஒலி பரப்புச் சாலையில் நிகழ்ந்த சொற்பொழிவாகும். இக் கட்டுரையில் ஆசிரியர் பொது மக்கட்கே யன்றி மாணவர்க்கும் பயன்படும்படியான பலவற்றை விளக்கியுள்ளார். இக் கட்டுரையிலுள்ள பொருள்கள் மிக அருமையானவை யாயினும் ஆசிரியர் தமது எளிய நடையில் அவற்றைத் தெளிவாய் விளக்கியுள்ளார்.]

அறம், பொருள், இன்பம், வீடு என்கிற பாகுபாட்டில் முதல் மூன்று வழிகளையும் கூட்டுறவு என்கிற வாழ்க்கை முறையில் அடையமுடியும். பொருள் சேர்ப்பது நியாயமான வழியில் இருக்கவேண்டும். இதற்காகப் போட்டி போடக்கூடாது. அதிக ஆசை அதிக நஷ்டம். பொதுக் காரியங்களைப் பொது நலத்திற்காகவே செய்துமுடிக்க வேண்டும். இயல், இசை, நாடகம் முதலிய அழகுக் கலைகளை அறத்தின் வழியில் போற்றி வளர்க்கவேண்டும். எல்லாக் காரியங்களிலும் சுய உதவி முக்கியமாய் இருக்க வேண்டும். இந்தக் கருத்துக்களை வாழ்க்கையில் சித்தரித்துக் காட்டுவது கூட்டுறவு. கூட்டுறவு நாணயச்

சங்கமென்றால் ஏதோ ஒரு வட்டிக்கடை என்று நினைப்பது தவறு. ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய க்ஷேமத்தைக் கருதுவதே கூட்டுறவின் உலகப் பிரசித்தி பெற்ற கொள்கை.

இந்தியாவின் பெரும்பாலான ஜனத்தொகை அநேகமாகக் கிராமங்களில் இருக்கிறது. ஆகையால் கிராம இந்தியாவில் வசிக்கிற ஜனங்களுக்குக் கூட்டுறவு எவ்வழிகளில் உதவ முடியும் என்பதை முக்கியமாகக் கவனிப்பது பொருத்தமா யிருக்கும்.

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுகோல் கூட மிஞ்சாது' என்பது பழமொழி. இதன் அர்த்தமென்ன?

நமது நாட்டில் விவசாயம் செய்கிறவர்கள் அநேகமாகச் சிறு சிறு பட்டாதார்களாக இருக்கிறார்கள். ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. நிலங்களின் பாகப் பிரிவினையும் அதிகரித்துவிடுகிறது. உதாரணமாக ஒரு கிராமத்தில் ஒரு குடும்பத்தில் நான்கு அல்லது ஐந்து பிள்ளைகள் பிறந்தால் நிலத்தை அவர்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு போட்டுக் கொடுக்கவேண்டும் அல்லவா? இந்து சட்டமும் முகம்மதிய சட்டமும் இதை ஆதரிக்கின்றன. உள்ள நிலமே மிகக் குறைவு. பத்து ஏக்கர் நிலமிருந்தாலும் பங்கு போட்டால், நபர் ஒன்றுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தான் கிடைக்கும். இதுபோல், நாளடைவில் துண்டிக்கப்படுகிற நிலங்கள் அங்குமிங்குமாகச் சிதறுண்டு கிடக்கின்றன. ஒரு குடியானவனுக்குச் சொந்தமான இரண்டு

மூன்று ஏக்கர் நிலமாவது ஒரே இனமாய் இருந்தால் எளிதில் விவசாயத் தொழிலைப் பார்த்துக் கொள்ளலாம். அவ்வாறில்லாமல் சிறு சிறு துண்டுகளாகச் சிதறுண்டு கிடக்கின்ற பட்டா நிலங்களை வைத்துக்கொண்டு விவசாயத் தொழிலை இலாபகரமாய் நடத்துவது முடியாத காரியம்.

இந்தக் கஷ்டத்தை ஒருவாறு சமாளிப்பதற்காகப் பஞ்சாபிலுள்ள கூட்டுறவாளர்கள் ஒரு உபாயத்தை அனுசரித்தார்கள். அவரவருக்கு எவ்வளவு நிலம் உண்டோ அது ஒரே இனமாக இணைக்கப்பட்டால் நன்மை விளையும் என்பதை முதலில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் கண்கூடாகக் காட்டினார்கள். இதனால் கிடைக்கக்கூடிய அநுகூலங்களை முதலில் கவனிப்போம்.

1. நிலத்தின் வரம்பு அல்லது எல்லையைக் குறித்துச் சாதாரணமாக ஏற்படுகிற கலகங்கள் இதனால் குறைந்து விடுகின்றன. நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டிய அவசியமில்லை. ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பஞ்சாயத்தார்கள் உள்ளூரிலேயே விவகாரங்களை விசாரித்து நேராகச் சமரஸம் செய்து விடுகிறார்கள். கூட்டுறவுச் சங்கம் ஏற்படுவதற்கு முன்பு, **சாயல்கோட்** ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் நிலத் தகராறு ஏற்பட்டது. இரண்டு கட்சிக்காரர்களும் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதி மன்றச் செலவு மட்டும் 600 ரூபாய். அரை ஏக்கர் பரப்புள்ள ஒரு துண்டு நிலத்திற்காக இவ்வளவு பெரிய செலவு செய்ய நேரிட்டது. நமது நாடெங்

கும் இத்தகைய துன்பங்கள் வளர்ந்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கம் நடைபெறுகிற எந்த ஒரு கிராமத்திலும் நிலைமை இவ்வளவு இழிவாய் இராது.

2. கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகத் துண்டு நிலங்களை ஒன்று படுத்துவதால் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது சுலபமாகி விடுகிறது.

3. அதிகமான வரப்புக்களும் இட்டேறிகளும் நீக்கப்படுவதால் மிதமாயிருக்கிற நிலம் விவசாயத்திற்கு உபயோகமாகிறது. இந்த வகையில் மட்டும், இவ்விதக் கூட்டுறவு வேலை நடைபெறுகிற எந்த ஒரு கிராமத்திலும் 2500 ஏக்கர் முதற்கொண்டு 5000 ஏக்கர் அகல நீளமுள்ள பூமியில் புதிதாக விவசாயம் செய்வது ஒரு அனுகூலம்.

4. ஒருவனுக்குச் சொந்தமான நிலத்தின் மொத்த அளவு முன்போலவே இருக்கிறது. ஆனால் துண்டிக்கப்பட்ட நிலங்களை ஒன்றாகச் சேர்த்துப் பயிரிடுவதால் அதிகமான வரும்படி ஒவ்வொரு விவசாயிக்கும் கிடைக்கிறது.

5. துண்டிக்கப்பட்ட நிலங்களில் எவ்விதச் சீர்திருத்தமும் செய்யமுடிவதில்லை. ஆனால் கூட்டுறவுச் சங்கத்தாரின் யோசனைப்படி ஒன்று சேர்க்கப்படுகிற நிலத்தில் புதிய விவசாய முறைப்படி உழுது பயிரிடலாம். அதற்குத் தகுந்த அதிக வரும்படியும் கிடைக்கும்.

மேற்சொல்லிய வசதிகள் எல்லாவற்றையும் பஞ்சாபிலுள்ள கூட்டுறவாளர்கள் ஒரு நொடிப் பொழுதில் அடைந்துவிட்டார்கள் என்று நம்பி

விடக்கூடாது. அந்தக் கிராமவாசிகளிடத்தில் நெடுநாட்களாகத் தொடர்ச்சியான பிரசாரம் நடை பெறவேண்டியிருந்தது. துண்டு நிலங்களை இணைப் பது வெகு கஷ்டமான காரியம். அந்தக் குடியான வர்கள் சம்மதம் கொடுக்கத் தயங்கினார்கள். ஒரு கிராமத்திலுள்ள சிறு பட்டாதார்களில் பெரும்பா லோர் இணங்கவில்லையானால் இதற்காக ஒரு கூட் டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து நடத்தமுடியாது. இந்த நிலைமையையும் சட்டத்தையும் தெரிந்த சிலர் பலவிதமான இடையூறுகளைச் செய்வதும் இயற்கை. குற்றங்கள் குறைகள் எல்லாவற்றையும் ஒருவாறு சமாளித்து, பாஞ்சால நாட்டுக் கூட்டுறவாளர்கள் கூடியவரையில் வெற்றியடைந்து வருகிறார்கள்.

பஞ்சாபில் நடைபெறுகிற கூட்டுறவு முறை யைக் கவனித்துச் சென்னை மாகாணத்திலும் துண்டு நிலங்களை ஒன்று படுத்தி விவசாயிகளுக்கு உதவும் நோக்கத்துடன் இப்பொழுது பெருமுயற்சி செய்யப் படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இவ்விதமான கூட்டுறவுச் சங்கம் முதன் முதலாக வேலூருக்கு அருகிலுள்ள மேல்களத்தூரிலும், தக்கோ லத்திலும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றைப்போல் சென்னை மாகாணத்தில் பதினாறு சங்கங்கள் அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சில சங்கங்கள் மட்டும் நன்றாக வேலை செய் திருக்கின்றன. இதற்குச் சில காரணங்கள் உண்டு. துண்டு நிலங்கள் விஷயமாகப் பாஞ்சால நாட்டி லுள்ள நெருக்கடி நமது நாட்டில் அவ்வளவாக

இல்லை என்பது ஒரு காரணம். மேலும், போது மான கூட்டுறவுப் பிரசாரம் இதுவரை தொடர்ச்சி யாக நடைபெறவில்லை. ஆனால் இந்த வேலையை விரிவாய்ச் செய்வதற்காக மத்திய சர்க்கார் ஒரு தொகையை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்தப் பணத்தை இதற்காகச் செலவு செய்து இந்த வகை யில் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னேற்ற வேலை செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நில அடமான பாங்குகள்

கூட்டுறவு முறையில் அடுத்தபடியாக விவசாயி களுக்கு வேறு என்ன உதவி செய்யக்கூடும் என் பதை இனிக் கவனிப்போம்.

நமது நாட்டில் நாளுக்கு நாள் விவசாயக் கடன் சுமை அதிகரித்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங் களில் குறுகிய காலக்கடன்களை வாங்கி இந்தப் பழைய கடன்களை அடைத்துவிடுவது குடியானவர் களுக்குச் சுலபமான காரியமல்ல. இந்த நிலை மையை உணர்ந்து சுமார் 15-வருடங்களுக்கு முன்பு சென்னை மாகாணத்தில் நில அடமான பாங்குகள் ஆரம்பிக்கப் பட்டன. இப்போது மாகாணமெங்கும் நடைபெறுகிற 112 நில அடமான பாங்குகள் சென்னையில் மத்திய நில அடமான பாங்குகளுக்கு இணைக்கப்பட்டிருக்கின்றன.

பருவமழை சரியாய் இல்லாமையாலும் வேறு சில காரணங்களாலும் விவசாயக்கடனை விரைவில் செலுத்த முடியவில்லை. ஆகையால் இருபது வருடத்

தவணையில் இக்கடனைச் செலுத்துவதற்காகக் கூட்டுறவு நில அடமான பாங்குகளில் நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. நஞ்சை நிலத்தை அடகுவைத்துக் குடியானவர்கள் இந்தப் பாங்குகளில் கடன் பெறலாம். சொத்தின் மதிப்பையும் கடன் வாங்குகிறவரின் உழைப்பையும், நாணயத்தையும், திருப்பிச்செலுத்தும் சக்தியையும் சீர்தூக்கிப் பார்த்து, ஒவ்வொருவருக்கு ரூ. 5000 வரையில் கடன் கொடுக்கப்படுகிறது.

## கிராம நாணயச் சங்கங்கள்

கூட்டுறவு முறையில், விவசாயிகளுடைய இதரத் தேவைகளுக்கு எவ்விதம் உதவக்கூடும் என்பதை இனிக் கவனிப்போம். சென்னை மாகாணத்தில் பலவிதக்கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில், கிராமநாணயச் சங்கங்கள்தாம் அநேகமிருக்கின்றன. பத்து ஆயிரம் சங்கங்களுக்கு மேல் நடைபெறுகின்றன. இவற்றின் உபவிதிகளை ஊன்றி வாசித்துப்பார்த்தால் விவசாயத் தொழிலுக்கு அவசியமான எல்லாக் காரியங்களையும் கூட்டுறவுச் சங்கத்தில் செய்து முடிக்கலாம் என்பது தெரியும். இந்தக் காரியங்களையெல்லாம் சீராக நடத்திவைத்தால் அந்தக் கிராமத்தின் செல்வ நிலைமை உயரும். அந்தக் கிராம வாசிகள் சிறந்த குணசாலிகளாக விளங்குகிறார்கள். வாழ்க்கையில் புதியவலிமை உண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அநேக கிராம நாணயச் சங்கங்கள்

இந்தக் காரியங்களையெல்லாம் செய்து முடிப்பதில்லை. ஏனென்றால் இதற்குப் போதுமான ஒற்றுமை உணர்ச்சியும், கூட்டுறவுச்சக்தியும் வேண்டும். ஆகவே பெருமுயற்சி செய்தால்தான் பழைய சமுதாய வாழ்வில் நிலைத்திருந்த கூட்டுறவு ஏற்பாடுகளை இக்காலத்திலும் புதுப்பிக்கமுடியும்.

கல்வி, சுகாதாரம், கைத்தொழில், விளைபொருள் விற்பனை ஆகிய துறைகளில் விரிவான ஏற்பாடுகளை அபிவிருத்தி இலாகா அதிகாரிகளும், கூட்டுறவுச் சங்கத்தாரும் சேர்ந்து ஒரே நோக்கத்துடன் வேலைசெய்தால் கிராமச் சீரமைப்பு வேலை சிறப்பாய் நடைபெறும் என்று விவசாயக் கமிஷன் 1928-ம் வருஷ அறிக்கையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதன் பலனாக, தேர்ச்சிபெற்ற கிராம வழிகாட்டிகளைக்கொண்டு கூட்டுறவு நிலையங்களின் ஆதரவில் பொதுநலவேலை செய்யவேண்டும் என்கிற விருப்பம் நாடெங்கும் பரவி வருகிறது. மேற்சொல்லிய அறிக்கையில், மேற்சொன்ன விளைபொருள்களை இலாபகரமாய் விற்று விவசாயிகள் நன்மையடைவதற்கு வேண்டிய திட்டமும் வகுக்கப்பட்டிருந்தது. அதன்படி இப்போது விளைபொருள் விற்பனை செய்வதற்குத் தேவையான வசதிகள் கிடைத்து வருகின்றன.

கூட்டுறவு விற்பனைச் சங்கத்தார் விவசாயிகளுக்குப் பலவிதமான உதவிகள் செய்யலாம். உதாரணமாகத் திருப்பூரில் சுமார் 4000 ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிரிடுகிறவர்களுக்குச் சுத்தமான

பருத்தி விதை இந்தக் கூட்டுறவு முறையில் அசலுக்குக் கடனுகக் கொடுக்கப்படுகிறது. இதற்கு வட்டி வாங்குவதில்லை. இத்துடன் பருத்திகளை வெட்டும் சமயத்தில் முட்டுவழிச் செலவுக்காக மாகூல் கடன் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிற ஏக்கர் ஒன்றுக்கு சுமார் முப்பது ரூபாய் வீதம், முன் பணம் கொடுக்கப்படுகிறது. திருப்பூர் கூட்டுறவுச் சங்கத்துக்கு இந்தப் பருத்தி வந்தவுடனே விதையின் விலை, மகசூல் கடன் இவற்றை மொத்த விலையிலிருந்து பிடித்துக்கொண்டு, எஞ்சிய தொகை குடியானவனுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவு முறையில் பருத்தி பயிரிடுகிற குடியானவனுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 15 ரூபாய் அதிக இலாபம் கிடைக்கிறது. அதாவது மொத்தத்தில் இந்தச் சங்கத்தின் முயற்சியால் வருஷந்தோறும் 4 அல்லது $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய் குடியானவர்களுக்குக் கிடைக்கிறது.

## பொது

மாடு வளர்ப்பதற்காக மதுரை ஜில்லாவில் ஒரு கூட்டுறவுச் சங்கம் வேலைசெய்து வருகிறது. நீர்ப்பாசன வசதிகளைத் தேடிக்கொடுக்கவும், இதர குடிமராமத்து வேலைகளைச் செய்யவும் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன. தேன், பால், முட்டை முதலியவற்றை விற்பதற்காகத் தனித்தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறுகின்றன. வயல்களிலும் தோட்டங்களிலும் பூச்சிகள் விழுந்து பயிரை அழியாமல் பார்த்துக் கொள்வதற்குக்கூடக் கூட்டுறவுச்

சங்கம் தென் கன்னடத்தில் வேலை செய்கிறது. வைத்திய வசதிகளைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தேடிக் கொடுப்பதற்காக மகாகவி தாகூரின் ஆதரவில் வங்காளத்தில் வேலை நடைபெற்றது. அதுபோல நமது நாட்டில் சங்கங்கள் பரீட்சை பார்க்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொருவருக்கும் புன்செய் நிலங்களைப் பங்கிட்டுக் கொடுத்து, கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விவசாயக் கடன் கொடுக்கப்படுகிறது. பெருந்துறையைச் சுற்றிலும் இதற்காக ஒன்பது குடியேற்ற நிலையங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றில் அரசாங்க அதிகாரிகளும், கூட்டுறவாளர்களும், சமூக ஊழியர்களும் பொதுநல சேவை செய்து வருகிறார்கள். இவ்விதமாக இந்தக் கூட்டுறவு நிலையங்களில் மட்டும் 420 குடும்பங்கள் மரியாதையான வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். கூட்டுறவுச் சக்தி என்பது ஒன்றுதான். அது எவ்வளவு விதத்தில் விவசாயிகளுக்கு உதவுகின்றது பாருங்கள்!

கூட்டுறவுக் கல்வி நமது நாட்டில் பரவப் பரவ இன்னும் அநேக விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவு விசாரணைக் கமிட்டியாரின் சிபார்சுகள் சென்னை மாகாணத்தில் கூடிய சீக்கிரத்தில் நடைமுறைக்கு வரும். அப்போது விவசாயிகள் பற்பல நன்மைகளை அடையக்கூடும்.

## பயிற்சி

1. கூட்டுறவு நாணயச் சங்கம் என்றால் என்ன?
2. விவசாயத்தை மிகப் பயன்படும் முறையில் நடத்தப் பஞ்சாப் கூட்டுறவாளர்கள் என்ன செய்தனர்? விளக்குக.
3. கூட்டுறவுச் சங்கம் இருந்தால் குடியானவர்கள் என்னென்ன நன்மைகளை அடையலாம்?
4. நிலங்களை ஒன்று படுத்துதல் என்றால் என்ன? அதனல் விளையும் நன்மைகள் எவை?
5. நில அடமான பாங்கைப் பற்றிச் சுருக்கி வரைக.
6. கிராம நாணயச் சங்கங்கள் எத்தகைய நன்மைகளை மக்களுக்குச் செய்யலாம்?
7. பெருந்துறையின் சங்க வேலைகளை வரைக.
8. 'கூட்டுறவு முறையில் விவசாயம்' என்னும் பொருள்பற்றி ஒன்றரைப் பக்கங்களில் ஓர் கட்டுரை வரைக.

---

# 15. தாராபாய்

### திரு. சம்பந்தம், யாழ்ப்பாணம்

[இது கலைமகளில் வெளிவந்துள்ள ஓர் சரித்திரக் கதை. மராட்டியர் காலத்தில் சிறப்புற விளங்கிய சிவாஜி மன்னர் நாளில் நிகழ்ந்த ஓர் செய்தியை இக்கட்டுரை விளக்குகின்றது. இக்கட்டுரையில் ஆசிரியர் தம்முடைய சிறந்த தமிழ் நடையினால் மாணவருக்கு இன்பத்தையும், வீரத்தையும் நன்கு ஊட்டுகின்றார்.]

பிரதாப்ராவ், சிவாஜி மகாராஜாவின் மெய்க் காப்பாளருள் ஒருவன். அவனுக்கு இன்னும் இருபத்தைந்து வயது நிரம்பவில்லை. வாட்போரிலும் மற்போரிலும் அவன் நிகரற்றவன். மார்பிலும் முகத்திலும் உள்ள தழும்புகள் அவனுக்கு வீர முத்திரைகளாக அமைந்திருந்தன. அந்த மராட்டிய

வீரனது முகத்தில் ஸ்ரீதேவி எப்பொழுதும் நடமாடிக் கொண்டே இருந்தாள். அவனுடைய வீரப் பிரதாபங்களைப் புகழாத வீரர்களேயில்லை. சிவாஜி மகாராஜா அடைந்த வெற்றிகளிலெல்லாம், அவன் படைகளின் முன்னணியில் நின்று திகழ்ந்துகொண்டிருந்தான்.

சிம்மகட் (துர்க்கம்) பகைவர்களால் அணுக முடியாதது. சிவாஜியின் வீரர்கள் பலத்த சண்டையின் பிறகே அதைச் சுவாதீனப்படுத்திக் கொண்டார்கள். படைகளின் முன்னணியில் நின்று சலியாமல் யுத்தம் செய்த சில வீரர்களை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி சொல்லி, மகாராஜா பொன்னும் மணியும் அள்ளிக் கொடுத்தார். பிரதாப் மட்டும் பேசாமல் நின்றான். மகாராஜா அவனை நோக்கி, "பிரதாப்? நீயும் கொஞ்சகாலம் ஓய்வெடுத்துக் கொள்; வேண்டும்போது அழைக்கிறேன்" என்றார். தாய்நாட்டின் சேவையிலும் மகாராஜாவின் வெற்றிகளிலுமே கண்ணாக இருந்த அந்த வீரனுக்கு ஓய்வெடுத்துக் கொள்வதில் சிறிதும் விருப்பம் வரவில்லை. அதனால் தலை குனிந்தபடியே பேசாமல் அவன் நின்றான். மகாராஜா மறுபடியும், "பிரதாப், நீ போய்வா" என்றார். அவன் சிவாஜி மகாராஜாவை வணங்கிவிட்டுப் புறப்பட்டான்.

* * * *

ஜாவல்லிக் கோட்டைக்குச் சமீபத்தில் காயத்திரி நதி ஊற்றெடுத்துப் பாய்கிறது, அந்த நதியின் உற்பத்தி ஸ்தானத்துக்கு அருகில் மலைகள் பத்தி

பத்தியாகத் தொடர்ந்து செல்லுகின்றன. அங்கு ஒரு மலைச் சாரலில் பிரதாப் ராவின் வீடு இருந்தது. அவனுக்குப் பதினைந்து வயது இருக்கும்போது தாராபாயை மணஞ்செய்து வைத்தார்கள். அதைப் பற்றிய நினைவே அவனுக்கு இல்லை. ஜாவல்லிக் கோட்டையைச் சிவாஜி மகாராஜா சந்திர ராவிடமிருந்து சுவாதீனப்படுத்திக் கொண்ட காலத்திலேயே பிரதாப் அவரது சேனையிற் சேர்ந்து தொண்டுபுரியத் தொடங்கினான். அதன் பிறகு இப்பொழுதுதான் அவனை வீட்டுக்குப் போகும்படி மகாராஜா நிர்ப்பந்தஞ் செய்தார். இதற்கிடையில் எப்படியோ பத்து வருடங்கள் கழிந்தோடின. இந்த காலங்களில் போர்வீரர்களோடு சேர்ந்து கொண்டு பல யுத்தங்களில் புலிபோலப் பகைவர்களின் சேனைக்குள்ளே புகுந்து புகழ்பெற்றான். பல யுத்தங்களைக் கண்டு களித்துவிட்டான். சிவாஜியின் அன்பும் வீரமும் தேசப்பற்றுமே அவனை இழுத்துக் கட்டி வைத்துக் கொண்டிருந்தன. ஆகையினாலே தான் மகாராஜா, "ஓய்வெடுத்துக்கொள், போ" என்று இரண்டாம் முறை வற்புறுத்தும் வரையில் பேசாதிருந்தான்.

ஜாவல்லியை நோக்கி மலைப்பாதையிலே அவன் தன் குதிரையைத் தட்டிவிட்டான். மனித சஞ்சாரமற்ற பாதைகளில் குதிரை போய்க்கொண்டிருந்தது. கடந்த யுத்தங்களின் நினைவுகளே அவன் மனத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வந்து விழுந்து கொண்டிருந்தன. எத்தனை வீரர்களின் உடம்பு

களைத் துண்டு துண்டாக அவன் வெட்டி மகிழ்ந்திருக்கின்றான்! குற்றுயிருங் குலையுயிருமாகக் கிடந்த பகைவர்களின் கூக்குரல் இப்பொழுதும் அவன் செவிகளில் கேட்டுக்கொண்டிருந்தது. இப்படியே பிணக்குவியல்கள், கவந்த நாடகங்கள் எல்லாம் அவன் மனக்கண் முன் வந்து திரை திரையாக விழுந்து கொண்டிருந்தன. தன் புயங்களையும் வடுக்களையும் தொட்டுப் பார்த்துக் கொண்டே அந்த வழியைக் கடந்து சென்றான். வெகு தூரத்திற்கப்பால் தெரியும் தான் பிறந்து வளர்ந்த மலைப் பிரதேசம் அவனுக்கு ஓர் உற்சாகத்தைக் கிளப்பி விட்டது. யுத்தவெறி குடிகொண்டு இரும்புபோல வைரம் பாய்ந்திருந்த அவனது மனத்தில் இப்பொழுது இயற்கையின் அழகு புக ஆரம்பித்தது.

தாரா வெளிப்புறத்தில் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். குதிரையின் காலடிச் சத்தம் கேட்டதும் திரும்பினாள். யுத்த உடையணிந்து பிரதாப் கம்பீரமாக நின்றான். ஒருவரை ஒருவர் திடீரென்று அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. சின்னேரங்கழித்தே அறிந்தனர், தாரா இப்பொழுது குழந்தையாக இல்லை. யௌவனம் அவளை ஏந்தி எழில் செய்து கொண்டிருந்தது. அவளைக் கண்டதும் முதலில் திகைத்து நின்றான் பிரதாப். சின்னேரம் கழித்து அவன் தன் வாளை எடுத்து அவளிடம் கொடுத்தான். தாரா இருகரங்களையும் நீட்டி அதை வாங்கிக்கொண்டு நமஸ்கரித்தாள். அவளை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான் பிரதாப்.

அன்று முதல் அவ்விருவரும் இன்பமாய்க் காலம் கழித்தனர்.

தக்ஷிணத்தில் சிவாஜியின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டே யிருந்தது. பீஜபூர் ராஜ்யத்தின் பல கோட்டைகளைச் சிவாஜி வென்று அடிப்படுத்திக் கொண்டார். பீஜபூர் சுல்தானுன ஆலி அதில் ஷா இவற்றைக் கண்டு கொதிப்படைந்தார். சிவாஜியை எப்படியேனும் கொன்று ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் வரவர அவருக்கு மேலோங்கி வளர்ந்துவந்தது. சுல்தான் தன் படைத் தலைவர்களையும் டபேதார்களையும் அழைத்து ஒரு சபை கூட்டினர். சபையிலுள்ள எல்லோர் கண்களிலும் இருந்து நெருப்புப் பொறி பறந்தது. சுல்தான் கட்டிடமே தகர்ந்து விழுந்து விடும்படி கர்ஜித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் சுல்தானைச் சமாதானஞ் செய்ய எண்ணித் தத்தமக்குப் பட்டவற்றைச் சொன்னர்கள். சிவாஜியிடம் அவர்களுக்குப் பயம் இருந்தது. சபையில் அமைதி நிலை கொள்ள விடாமல் சுல்தான் அடிக்கடி குழப்பி கொண்டிருர்தார்.

அப்பொழுது, சமஸ்தானத் தலைமைக் காரியஸ்தனுன அப்ஸுல்லாகான் எழுந்து, "பாதுஷா! குகைக்குக் குகை புகுந்து வெளிப்படும் அந்த மலை எலியை (சிவாஜி) நானே சென்று பிடித்துக் குதிரையோடு கட்டி ஊரார் சிரிக்கும்படிக் கொண்டு வருகிறேன்" என்று கூறினன். கான் நல்ல கட்டு வாய்ந்த உடலமைப்புள்ளவன்; போர்த்தொழிலில்

மிக வல்லவன் ; பீஜபூர் சுல்தானின் பேகத்திற்கும் உறவினன். சுல்தான் மனம் குளிர்ந்தது. கானுக்குத் துணையாகப் பன்னீராயிரம் குதிரை வீரரைத் தயார் செய்தான். வலிமை கொண்டு திரண்ட குதிரைப்படையோடு கான் புறப்பட்டான். வழியிலுள்ள சில கோட்டைகளை வென்று சுவாதீனப் படுத்தினன். பல ஊர்களையும் கோயில்களையும் சூறையாடிக்கொண்டு வயாநகரில் வந்து தங்கினன்.

அப்பொழுது சிவாஜி மகாராஜா பெருமை பொருந்திய பிரதாப்கட் துர்க்கத்திற்கு வந்து தங்கியிருந்தார். ஒரு தூதுவனை அனுப்பிச் சிவாஜியை வஞ்சனையால் வரச்செய்து எளிதில் சிறை செய்து விடலாமென்று தான் நினைந்திருந்தான். ஆனல் சிவாஜி அதை அறிந்துகொண்டார். கானைக் கொன்று அவன் படையையும் அழிக்கவேண்டிய ஏற்பாடுகளை மகாராஜா விரைவில் செய்தார். ஓய் வெடுத்துக் கொள்ளும்படி விடப்பட்ட வீரர்களிடம் தூதுவரை அனுப்பினர். ஒரு நாள் மாலையில் பிரதாப் ராவும் தாராவும் ஓர் மலைக்குச் சென்றிருந்தனர். அம்மலையின் அடியிலிருக்கும் ரஸ்தா மலைமேல் இருப்பவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அதனல் ரஸ்தாவில் குதிரையில் வந்து கொண்டிருந்த ஒருவனை அவர்கள் கண்டார்கள். சிவாஜி மகாராஜாவின் கட்டளைப்படி தன்னை அழைத்துச் செல்வதற்காகவே அவன் வருகின்ருன் என்பதைப் பிரதாப் தெரிந்துகொண்டான். திடீரென்று அவன் முகத்தில் இருள் கவிந்துகொண்டது. விரைவில்

ஏற்பட்ட இம்மாற்றத்தைத் தாரா நன்கு கவனித்துக் கொண்டாள். பிரதாப்ராவ் அவளை அழைத்துக் கொண்டு வீட்டைநோக்கிப் புறப்பட்டான். போகும் பொழுது அவன் உள்ளத்தின் வேட்கை தானகவே வெளிக் கிளம்பிவிட்டது.

“தாரா! மகாராஜாவே அவனை என்னிடம் அனுப்பி யிருக்கிறார். இனி மகாராஜாவிடம் போக எனக்குப் பிரியமில்லை.”

“ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?”

“ஐயோ இனி எனக்கு யுத்தஞ் செய்ய இஷ்டமில்லையே!”

“தாய் நாட்டின் கௌரவத்தைக் காப்பது கடமை யல்லவா?”

“அதற்கு நான் என்ன செய்வது?”

“உடனே மகாராஜாவிடம் புறப்பட்டுச் சென்று அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண் யது தான்.

“தாரா! உன்னைப் பிரிந்தால் எனக்குச் சோர்வு ஏற்பட்டுவிடும். எப்படி யுத்தபூமியில் நிலைத்துப் போர் செய்ய என்னுல் இயலும்?”

“தங்களுடன் கூட நானும் வருகிறேன்”

“நீ அங்கே வந்து என்ன செய்வாய்?”

‘தங்களுடன் கோட்டைவரையிலும் வருகிறேன். யுத்தம் முடிந்ததும் உடனே சந்திக்கலாம். கடமையைச் செய்யத் தவறினுல் நமக்குச் சுகம் ஏது? தாய் நாட்டின் சாபத்துக்கும் இலக்காக வேண்டுமல்லவா?

இதற்குள் வீட்டை அடைந்து விட்டார்கள். தாராவின் வார்த்தைகளைத் தட்ட அவனுக்கு சக்தி வரவில்லை. அதனால் அவள் பேச்சுக்குக் கட்டுப் பட்டான். தூதன் சிவாஜி மகாராஜாவின் முத் திரை யிட்ட ஓலையைப் பிரதாப்ராவின் கையில் கொடுத்தான். மூவரும் குதிரைகளிற் புறப் பட்டார்கள். வழியெல்லாம் தாரா அவனுடைய மனத்தில் உற்சாகம் உண்டாகும்படியான பேச்சுக் களைப் பேசிக்கொண்டே போனாள். அவனுடைய மனத்தில் அடிக்கடி மாறுதல் உண்டாகியது. வர வர அவன் அமைதி அற்றவனாகவே காணப் பட்டான். பிரதாப்கட் நெருங்கி விட்டது. தாராவை ஒரு காவலுள்ள இடத்திற் கொண்டு போய்விடுத்து அவன் மகாராஜாவிடம் புறப்படத் தயாரானான். தாரா அவனதுஉடைவாளை எடுத்து, 'பவானிதேவி! எங்களுக்கு வெற்றியும் இன்பமும் தந்தருள்' என்று வணங்கிப் பிரதாப் ராவின் கையில் அதைக் கொடுத்து உற்சாகமாக வழி அனுப்பினாள்.

அடுத்த நாளே அப்ஸல்லா கான் பிரதாப் கட்டுக்கு வருவதாக இருந்தான். அதற்குரிய ஏற் பாடுகள் மகாராஜாவின் கட்டளைப்படி நடந்து கொண்டிருந்தன. மகாராஜா படைத் தலைவர்களை அழைத்து, கானின் படைகளை எதிர்க்க வேண்டிய வழிகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். மகா ராஜாவைக் கண்டதும் பிரதாப் வணங்கி நின்றான். அவர் அவனை அன்போடு வரவேற்று ஒரு பெரும் படையை நடத்தும் பொறுப்பை, அவனிடம் ஒப்பி

வித்தார். பிரதாப் தனது பொறுப்பைப் பெருமையாக ஏற்றுக்கொண்டான்.

மறுநாள் கான் தனது பெரிய படையுடன் வந்து கொண்டிருந்தான். முன் பேசிக்கொண்டபடி அப்படை துர்க்கத்துக்கு வெளியில் நிறுத்தப் பட்டிருந்தது. கான் கள்ள நெஞ்சுடனே சில காப்பாளர்களோடு உள்ளே புகுந்தான். ஆனல் அவன் மறுபடியும் அதனின்று வெளி வரவில்லை. கானுடைய படையை எதிர்க்க வேண்டியதற்கான குறிப்பொலி துர்க்கத்திலிருந்து எழுந்தது. மராட்டியர்கள் புலிகள்போல் அங்கங்கே தோன்றிக் கானுடைய சேனையை எதிர்த்தார்கள். இந்த எதிர்பாராத நிலைமையைச் சமாளிக்க முடியாமல் கானுடைய சைனியம் புறங்காட்டியது. ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். அநேகர் சிவாஜியின் வீரர்களுக்குத் தலைவணங்கி நின்றார்கள்.

பிணங்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. மராட்டியர்களுடைய உடைகளும் வாள்களும் இரத்தந் தோய்ந்து பிரகாசித்தன. வெற்றியின் அறிகுறியாக முழங்கும் முரசுகளின் ஓசை வெகுதூரம் வரையிலும் கேட்டுக்கொண்டு இருந்தது. பிரதாப் வெற்றிகொண்டு நின்ற தனது படையைக் கோட்டையை நோக்கி நடத்திக்கொண்டு வந்தான். வீரர்கள் வெற்றியின் சந்தோஷத்தால் வெறிகொண்டு ஆரவாரஞ் செய்து குதிரைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். பிரதாப்ராவின் குதிரை எல்லோருக்கும் முன்பு கம்பீரமாக நடந்து சென்

றது. சிறிது தூரத்தில் ஒரு மராட்டிய இளைஞன் வந்து கொண்டிருந்தான். கையில் வாளும், வீரக் கழலும், கச்சையும், வழிந்து கொண்டிருக்கும் இரத்தமுமுடைய அவன் தோற்றம் அந்த யுத்த பூமியை அழகு செய்தது. யுத்தத்தில் பட்ட அடியினால் தளர்ந்து தடுமாறிக்கொண்டே வந்து விழுந்து விட்டான். பிரதாப் குதிரையை விட்டு இறங்கிச் சென்று அவனை எடுத்து நிறுத்தினான். அவ்வீரன் உருவு கொண்டிருந்தது தாராவே. அதை அறிந்த பிரதாப் அசையாதிருந்தான். அவன் சரீரம் நடுங்கியது. கண்களில் நீர் நிறைந்து வழிந்தோடியது. சடுதியில் எங்கும் அமைதி நிலவியது.

பிரதாப் யுத்தவீரன் வேஷத்தில் விளங்கிய தாராவை கைகளில் ஏந்திக்கொண்டு துர்க்கத்தை நோக்கி நடந்தான். தாராவின் கையிலுள்ள வாள் இன்னும் நழுவி விழவில்லை. அவள் கண்களினின்றும் நீர் இரத்தத்தொடு வழிந்தோடிக்கொண்டிருந்தது. சிவாஜி தூரத்தில் வந்து கொண்டிருந்த பிரதாப்ராவின் தோற்றத்தைக் கண்டார். எல்லோரையும் விலக்கிக்கொண் டுஅவனுக்கு அருகில் வந்து நின்றார். அவன் மகாராஜாவை வணங்கித் தாராவை மடியில் வைத்துக்கொண்டு விம்மினான். தாரா சிறிது கண்ணை விழித்துப் பார்த்தாள். தன் கையிலிருந்த வாளை சிவாஜியின் பாதங்களில் வைத்து, "மஹாராஜா தங்களுக்கு பவானி வெற்றியைக் கொடுப்பாள்" என்றாள். கணவன் பக்கம் திரும்பி, "நான் என் கடமையைச்செய்துவிட்

டேன். தாங்களும் தவறிவிடலாகாது. நாம் மராட்டியர்'' என்று சொல்லித் தன்பதியை அணைத்துக்கொண்டு கண்ணைமூடினள். சிவாஜி மன்னர் கண்களும் கலங்கின.

அவள் நினைவிற்காகத்தான் சிவாஜி அங்கே பவானிக்கு ஓர் ஆலயம் கட்டுவித்தார்.

## பயிற்சி

1. பிரதாப் ஓய்வெடுத்துக்கொள்ள மறுத்தது ஏன்?
2. ஜாவல்லியை நோக்கிச் சென்ற பிரதாபின் மன நிலையைச் சுருக்கி வரைக.
3. சிவாஜியுடன் போருக்கு வந்தவர் யார்? போரின் முடிவை வரைக.
4. தாராபாயின் வீரத்தை விளக்கி வரைக.
5. தாராபாயின் கதையினைச் சுருக்கி வரைக.

# குறிப்புரை

## I. கடவுட் போற்றுதல்

### 1. பெரிய புராணம்

பெரிய புராணம் என்பது பெருமையை உடைய புராணம் என்று பொருள்படும். இது பன்னிரண்டு திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாகும். இதனை அருளியவர் சேக்கிழார் சுவாமிகள். இவரது இயற் பெயர் அருண்மொழித் தேவர் என்பதாகும். சேக்கிழார் குடியில் பிறந்ததனால் இப்பெயரைப் பெற்றார். பெரியபுராணத்திற்குத் திருத்தொண்டர் புராணம் என்ற வேறு பெயரும் உண்டு. சேக்கிழார் அநபாய சோழனுக்கு அமைச்சராய் இருந்தார். அவருக்குச் சிவபெருமான் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். இவர் 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்று சிலரும், 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்று சிலரும் கூறுவர். இவருடைய பாடல்களில் பக்திச் சுவை சொட்டும்.

1. உலகு - உலகத்திலுள்ள மக்கள்.
உணர்ந்து - அறிந்து.
நீர் - கங்கை.
வேணியன் - சடையினை உடைய சிவபெருமான்.
அலகு - அளவு.

### 2. இராமாயணம்

இதனை இயற்றியவர் கம்பர்; சோழநாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் சாதியில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஆதித்தர் என்பவர். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் என்பவராவர். இவர் விருத்தப் பாக்கள் பாடுவதில் வல்லவர். இவரைப்பற்றிய கதைகள் எண்ணிறந்தன. இவர் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்பர்.

2. நிலை பெறுத்தலும் - நிலையாக இருக்கும்படிச் செய்தலும்.
இலா - இல்லாத.
அன்னவர் - அத்தகைய திருமால்.

### 3. தேவாரம்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர் அருளிய பாக்களுக்குத் தேவாரம் என்று பெயர். தேவாரம் என்ற சொற்றொடர் கடவுளுக்கு மாலை என்றும், கடவுளிடம் அன்பினால் பாடிய பாட்டென்றும் பொருள்படும். தேவு + ஆரம்; தே + வாரம். தே, தேவு - கடவுள். ஆரம் - மாலை. வாரம் - அன்பு.

இப்பதிகத்தை இயற்றியவர் திருநாவுக்கரசு நாயனர். இவர் இளமையில் சமண சமயத்தைச் சார்ந்தார். பின்னர், சிவபிரானருளால் சூலைநோய் வரப் பெற்றுச் சைவ சமயத்தைச் சேர்ந்தார். இவருக்கு மருள் நீக்கியார், தருமசேனர், அப்பர், வாகீசர் முதலிய வேறு பெயர்கள் உண்டு, இவரது காலம் கி. பி. 655-க்குச் சிறிது முன்னுகும்,

3. கண்ணி - தலைமாலை.
போது - பூ,
ஐயாறு - திருவையாறு.
ஐந்து ஆறுகள் பாய்தலால் இப்பெயர் பெற்றது.
ஏளிறு - ஆண் யானை.

4. காரிகை - உமாதேவியார்,
இணை - இரண்டு.
ஏனம் - பன்றி.

## 4. திருவாசகம்

திருவாசகத்தை இயற்றியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இவர் திருவாதவூரில் அந்தணர் குலத்தில் தோன்றினர். அரிமர்த்தன பாண்டியனிடம் சில காலம் அமைச்சராயிருந்தார். சிவபிரான் இவர் பொருட்டு நரிகளைப் பரிகளாகவும், பரிகளை நரிகளாகவும் செய்தார். இவர் காலம் கி. பி. 3-ம் நூற்றுண்டு என்று சிலரும், கி. பி. 9-ம் நூற்றுண்டு என்று சிலரும் கூறுகின்றனர். ‘திருவாசகம்’ என்ற சொல்லுக்கு ‘அழகிய சொற்கள்’ என்பது பொருளாகும். இவர் திருச்சிற்றம்பலக் கோவையார் என்ற நூலையும் அருளிச் செய்திருக்கிறர்.

5. சுற்றம் - உறவினர்கள்.
புனல் - நீர்.
தில்லை - சிதம்பரம்.

6. குரை - ஒலிக்கின்ற.
ஞாலம் - உலகம்,
பரவுதல் - வணங்குதல்.

## 5. நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

### (நாச்சியார் திருமொழி)

பன்னிரண்டு ஆழ்வார்களாற் பாடப்பெற்ற பாடல்களுக்கு நாலாயிரத் திவ்ய பிரபந்தம் என்று பெயர். நாச்சியார் திருமொழியை இயற்றியவர் கோதை என்ற ஸ்ரீ ஆண்டாள் ஆவர். இவரைத் திருமாலே மணந்தார். இவர் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெயர் பெறுவர். இவருடைய பாடல்கள் அழகுவாய்ந்தவை.

7. வாரணம் - யானை,
நம்பி - ஆண் பிள்ளைகளில் சிறந்தவன்.

8. மட்டித்து - பூசி.
மஞ்சனம் ஆட்ட - நீராட்ட.

### பெரிய திருமொழி

இதனை இயற்றியவர் திருமங்கை யாழ்வார். பன்னிரு ஆழ்வார்களில் இவர் ஒருவர். இவரது இயற்பெயர் நீலன் என்

பது. பரகாலன், திருமங்கை மன்னன் என்ற பெயர்களும் இவருக்கு உண்டு. இளமையில் சோழ அரசனுக்குச் சேனுதிபதியாய் இருந்தார். குமுதவல்லி என்னும் அம்மையாரை மணந்தார். திருமால் அடியார்களுக்கு அமுதளிக்கச் செல்வம் இல்லாமற்போகவே, திருடும் தொழிலைக் கைக்கொண்டு திருமால் பக்தர்களுக்கு அமுதளித்தார். இறுதியில் கடவுளால் நல்லுணர்வு பெற்ருர். இவர் காலம் 9-ம் நாற்ருண்டு என்பர். இவர் திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் முதலியவற்றை அருளிச்செய்திருக்கிருர்.

9. ஏதலன் - அயலான்.
உம்பி - உன் தம்பி.
எம்பி - என் தம்பி.
ஆழிவண்ண - கடல்போன்ற நிறத்தினை உடையவனே.
பொழில் - சோலை.

10. கடி - வாசனை.
காமரு - அழகிய.
பொய்கை - நீர்நிலை.
வைகு - தங்கிய.

## 6. சகலகலாவல்லி மாலை

இதனை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள். இவர் ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் சுமார் 250 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர். முருகக் கடவுளது அருளால் இவர் பேசும் திறமை பெற்றுப் பாடல்கள் பாடத் தொடங்கினுர். இவர் திருச்செந்தூர்க் கந்தர் கலி வெண்பா, மீனுட்சி யம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், மீனுட்சி யம்மை குறம், மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை, திருவாரூர் நான்மணி மாலை, நீதி நெறி விளக்கம், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமி யம்மை இரட்டைமணி மாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக் கலம்பகம், ஆகிய எண்ணிறந்த நூல்களைச் செய்துள்ளார்.

1. வெள்ளை - களங்கமில்லாத வெறுமனம்.
தண் - குளிர்ந்த.
கரும்பே - கரும்புபோன்ற கலைமகளே.

2. ஆர்ந்து - உண்டு.
பனுவல் - நூல். [உருவகம்.
கவிமழை - கவியாகிய மழை;
கலாபம் - தோகை.

3. தூக்கும் - ஆராய்கின்ற.
செந்நா - செம்மையான அல்லது தவருத.

4. கடைக்கண் நல்காய் - அருள் செய்வாய்.
ஓதிமம் - அன்னம்.
ஓதிமப்பேடு - பெண் அன்னம்.

5. பண் - பாடல்.
படைப்போன் - பிரமன்.
விண் - தேவருலகம்.

## II. பெரியார் பொருண் மொழிகள்.

### 1. புற நானூறு

புறநானூறு என்பது கடைச் சங்க நூல்களில் எட்டுத் தொகையைச் சேர்ந்தது. புறநானூற்றுச் செய்யுட்கள் நானூறும் புறப்பொருளைப் பற்றிக் கூறுவனவாகும். அறமும் பொருளும் புறப்பொருள் எனப்படும். இதனைப் புறம் என்றும், புறப்பாட்டு என்றும் வழங்குவர். இந்நூலால் பண்டைக் காலத் தமிழர்களின் பழக்க வழக்கங்களும், நடை யுடை பாவனைகளும் நன்கு வெளிப்படுகின்றன. இதனுள் பல சங்கப் புலவர்களின் பாடல்கள் இருக்கின்றன.

1. புறந்தருதல் - காத்தல்.
   தலைக்கடன் - சிறந்த கடமை
   வடித்து-கூரியதாகச்செய்து.
   நடை - ஒழுக்கம்.
   ஒளிறு - ஒளி வீசுகின்ற.
   சமம் - போர்.
   உழக்கி - கலக்கி.
   காளை - காளைபோன்றமகன்

2. சான்றீரே - பெரியவர்களே.
   கவுள் - கன்னம்.
   கணிச்சி - மழு.
   திறல் - வலிமை.
   பிணிக்குங்காலை - பாசத்தினால் கட்டியிழுக்கின்ற காலத்தில்.
   அல்லது - தீயது.
   ஆறு - வழி.

### 2. நீதிநெறி விளக்கம்

இதன் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள். இவரைப் பற்றிய வரலாறு முன்பு கூறப்பட்டது. நீதிக்கு வழிகாட்டும் விளக்கு என்று பொருள்படும்.

1. விதிர்ப்பார் - நடுங்குகின்றவர்கள்.
   ஆகுலம் - ஆரவாரம்.
   நவை - குற்றம்.
   பூத்தலில் - தோன்றுவதைக் காட்டிலும்.

2. அணிகலம் - ஆபரணம்.
   முற்ற - முழுவதும்.
   பூண் - ஆபரணம்.

3. நட்டல் - சினேகித்தல்.
   ஐயுறுதல் - சந்தேகித்தல்.
   கோறல் - தட்டி நடத்தல்.
   குறி - அடையாளம்.

4. செவ்வி - காலம்.
   கருமம் - காரியம்.

5. கண் இன்று - தாட்சணியம் இல்லாமல்.
   ஒறுக்கும் - தண்டிக்கும்.

### 3. திருக்குறள்

இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் பிறந்த ஊர் மயிலாப்பூர் என்பர். இவர் மனைவியார் வாசுகி அம்மையார். காலம் கடைச் சங்க காலம். இவர் வள்ளுவர்குடியில் பேரும் புகழும் பெற்று விளங்கினர் என்பர். வள்ளுவர் என்பார் அரசனது அரண்மனையில் நடைபெறும் மங்கல விழாக்களை யானைமீதிருந்து நகர்

வலம் செய்து பறையடித்து மக்களுக்கு உணர்த்துபவர்கள் ஆவர். இந்நூல் 133 அதிகாரங்களைக் கொண்டது. முப்பால் என்பது திருக்குறளின் வேறு பெயராகும். தமிழ் மொழிக்கு இந்நூலால் ஏற்பட்ட பெருமை அளவிடற் கரியது. இந்நூல் பல மொழிகளில், மொழி பெயர்க்கப்பட்டுளது.

1. அவ்வுலகம் - வீட்டுலகம்.
   இல்லாகியாங்கு - இல்லையாயினாற் போல்.
2. கூப்பி - குவித்து.
3. நோன்றல் - தாங்குதல்.
   உறுகண் - துன்பம்.
4. உள்ளல் - நினைத்தல்.
   கள்வேம் - அபகரிப்போம்.
5. வாய்மை - உண்மை.
6. புரை - குற்றம்.
7. அறிவது - அறிந்தவற்றை.
9. சேர்ந்தாரைக் கொல்லி - நெருப்பு.
   புணை - தெப்பம்.
10. இன்னா - துன்பம்.
   நயம் - நன்மை.
   விடல் - அவர் செய்த தீங்கையும், நாம் செய்த நன்மையையும் மறந்து விடுதல்.
12. நல்லாறு - நல்லவழி.
13. நீக்கும் - போக்குகின்ற.
   வினை - காரியம்.
15. நெருநல் - நேற்று.
16. சாக்காடு - இறப்பு.
17. நுண்ணிய - நுட்பமான.
   முந்துறும் - முன்னதாக வந்துவிடும்.
18. திருவினை - செல்வத்தை.
   முயற்றின்மை - சோம்பல்.
   இன்மை - தரித்திரம்.
19. தெய்வம் - ஊழ்.
20. உப்பக்கம் காணுதல்- வெல்லுதல்.
   உலைவு - வருத்தம்.
   உஞற்றுபவர்- முயற்சிசெய்கின்றவர்கள்.

## 4. பழமொழி

இதனை இயற்றியவர் முன்றுறையரையனார். அரையன் - அரசன். இவர் முன்றுறை என்னும் ஊரை ஆண்ட குறு நில மன்னராவர். இந்நூல் பதினெண் கீழ்க் கணக்குகளில் ஒன்று. பழமொழி என்பது பழமையாகிய மொழி என விரியும். இவர் சமண சமயத்தினர் என்பர்.

1. மாட்சி - பெருமை.
   இன்ன - இப்படிப்பட்ட
   அணி - ஆபரணம், அழகு
2. வியன் - பெரிய.
   விடல் - விடுதலை ஒக்கும்.
3. மன்ற - நிச்சயமாக.
4. இறப்ப - மிகவும்.
5. ஏத்துதல் - துதித்தல்.
   கடை - ஏழனுருபு.
6. கூற்றம் - சொல்.
   சேர்ப்ப - நெய்தல் நிலத் தலைவனே.
7. வாமான் - தாவுகின்ற குதிரை.
   ஆமா - காட்டுப் பசு.
   உகளும் - சஞ்சரிக்கின்ற.
   வரை - மலை.

வெற்ப - குறிஞ்சி நிலத்தலைவனே.
ஏமாரார் - காவலைப் பொருந்தார்.
8. காய்வன - கோபிக்கின்றனவற்றை.
புல்வாய் - மான்.
9. பிழைப்பு - குற்றம்.
ஆற்றவும் - பொறுக்கவும்.
யாழின் - யாழைப்போல.
ஊர - மருத நிலத்தலைவனே
10. நீர்மை - நல்ல தன்மை.
நேர் - சமமாக.
தகவு - தகுதி.
திங்கஸ் - சந்திரன் [ஒக்கும்.
குரைத்தற்று - குரைத்ததை

## 5. நாலடியார்

இதுபதினெண்கீழ்க்கணக்குகளில் ஒன்று. இதனை இயற்றியவர்கள் சமண முனிவர்கள் ஆவர். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பதனால் இதன் பெருமையை உணரலாம். இந்நூல் 400 பாக்களை உடையது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பகுதிகளை உடையது.

1. நினைக்கில் - நினைத்தால்.
குருகின் - குருகைப் போல.
தெரிந்து - ஆராய்ந்து.
2. கோட்படா - கவர்ந்துகொள்ளப்படாது.
செறின் - கோபித்தால்.
விச்சை - கல்வி.
3. இம்மை - இப்பிறப்பில் இன்பம்.
மம்மர் - மயக்கம்.
அறுக்கும் - போக்கவல்ல.
4. தவல் - கெடுதல்.
தொல் - பழைய.
குழீஇ - கூடி.
உம்பர் - ஆகாயம். [லும்.
5. நல்லின் - நெல்லைக்காட்டிலும்.
விழுமிதா - சிறந்ததாக.
6. சால - மிகுதியாக.
உய்த்து - கொணர்ந்து.
7. அல்லல் - துன்பம்.
நாவின் கிழத்தி - கலைமகள்.
பூவின் கிழத்தி - திருமகள்.
புலந்து - கோபித்து.
8. இராது - வாளா இராமல்.
9. கேண்மை - நட்பு.
நந்தும் - வளரும்.
வைகலும் - தினந்தோறும்.
தொடர்பு - நட்பு.
10. விடர் - பொந்து அல்லது பூமியின் வெடிப்பு.
உரும் - இடி.
சேண் - நெடுந்தூரம்.
உட்கும் - பயப்படும்.
அரண் - காவல்.

## 6. ஆசாரக்கோவை

இதனை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார். இவர் கடைச் சங்க காலத்தவர். இந்நூல் பதினெண் கீழ்க் கணக்குகளில் ஒன்று. இந்நூல் ஆசாரம் அல்லது மனிதனது ஒழுக்கங்களைத் தொகுத்துக் கூறுவது ஆகும்.

1. பொறை - பொறுமை.
ஆற்ற - முழுவதும்.
2. வைகறை - அதிகாலை.
முந்தையோர் - முன் காலத்தோர்.

3. குரவர் - ஆசாரியர்கள்.
4. குறளை - கடுஞ்சொல்.
அழுக்காறு - பொறாமை.
ஐயம் - சந்தேகம், பிச்சை.
நிரயம் - நரகம்.
5. நந்து - நத்தை அல்லது [சங்கு.
பெற்றி - தன்மை.

---

## III. காதை

### 1. பாரத வெண்பா

இதனைப் பாடியவர் பெருந்தேவனார். இவரும், சங்க காலத்துப் பெருந்தேவனாரும் ஒருவரே என்பது சிலர் கொள்கை. அவர் வேறு; இவர் வேறு. இவருடைய காலம் 9-ம் நூற்றாண்டு என்னலாம். இந்நூல் உரை நடையும், செய்யுளும் கலந்ததொரு நூலாகும். ஆகவே இதனை உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் என்னலாம்.

1. கொற்றம் - வெற்றி.
அந்தரர் - ஆகாயத்திலுள்ளவர்கள்.
அங்கர்கோன் - கன்னன்.
3. தரளம் - முத்து.
இசைந்து - ஒப்புக்கொண்டு.
4. மறையோன் - அந்தணன்.
வேண்டி - விரும்பி.
கார் - மேகம்.
5. வண்மை - கொடை.
6. இறைஞ்சும் - வணங்கு [கின்ற.
7. மாற்றம் - சொல்.
இரு பிறப்பாய் - அந்தண [னே.
8. சுரும்பு - வண்டு.
தொங்கல் - மாலை.
பெயர்ந்து - மறுபடியும்.
9. பட - இறக்க.
மன் - அரசன்.
10. பேதை - அறிவில்லாதவன்.
11. எற்கு - எனக்கு.
பானு - சூரியன்.
12. பொன் மொண்டு இடு கையான் என மாற்றுக.
13. உய்ய - பிழைக்க.
அமர்ந்து - விரும்பி.
15. பார்த்தன் - அருச்சுனன்.
மாயன் - கண்ணன்.
பணி - கட்டளை. [ன்.
ஏற்கின்றான் - யாசிக்கின்றா
அசதி - சொல்.
16. வசை - பழிச்சொல்.
உந்தை - உன் தந்தை.
உகந்து - விரும்பி.
17. என்ன - என்று கூறி.
18. கோலம் - அழகிய.
செங்கை - சிவந்தகை.
19. கோது - குற்றம்.
20. வானவர் கோன் - தேவேந்திரன்.

### 2. திருவிளையாடற்புராணம்

இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் 280 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவர் திருமறைக் காட்டில் அபிடேகத்தர் மரபில் தோன்றியவர். இந்நூல் மிக எளிய நடையில் அமைந்துள்ளது. இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க்காண்டம் என்ற மூன்று பிரிவுகளை உடையது.

1. கடிமனை - திருமணச்சாலை.
போனகம் - உணவு.
அருத்தா - உண்ணும்படியாகச்செய்து.

2. மெல்லிலை - வெற்றிலை.

3. மடைத்தொழில் - சமையல் தொழில்.
அட்ட - சமைக்த.
குறுகா - நெருங்கி.

4. உணங்குகின்றது - வாடிப் போகின்றது.

5. குன்றம் - மலை.
ஈட்டம் - தொகுதி.

6. இறை-கடவுள், சிவபிரான்.
பாரிடம் - பூதம்.

7. வாள் - ஒளி.
நகை - சிரிப்பு.

8. மறு - குற்றம்.
மீனவன் - மீனக்கொடியை உடைய பாண்டியன்.
வான்தரு - கற்பக மரம்.
மூரல் - பல்வரிசை.

9. அகடு - வயிறு.
வடவை - வடவைத்தீ.
உன்னினன் - நினைத்தான்.
ஆலம் - விஷம். [ன்.
உயங்கினேன் - வருந்தினே

11. சொன்றி - சோறு, உணவு.
அயின்றதும் - உண்டதும்.
அடிசில் - சோறு.

13. ஓதி - கூந்தல். ஈண்டுக் கூந்தலை உடைய பெண்ணாகிய மீனாட்சி அம்மையாரைக் குறித்தது.
சுவல் - தோள்.
கிளைத்து - பெயர்த்து [ள்.
நிருபன் - அரசனாகிய கடவு

14. அஞ்சிலோதி - அம்சில் ஓதி எனப் பிரித்துக் காண்க. மீனாட்சியம்மை.
குஞ்சி - ஆடவர் தலைமயிர்.
ஓதி - பெண்டிர் தலைமயிர்.

15. வெய்ய - கொடிய.

16. அறிதி - அறிவாயாக.
எயிற்று - பல்லையுடைய.
முழை - குகை.

18. கையர் - கீழோர்.
உயிர்த்திடும் - பெரு மூச்சு
ஆவி - உயிர். [விடுவான்.

## 24. குசேலோபாக்கியானம்

இதனை இயற்றியவர் வல்லூர் தேவராச பிள்ளை என்பவராவர். இவர் 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணவர். தமிழினிடத்து மிகுந்த அன்பு வாய்ந்தவர். தமிழ்ப் புலவர்கள் பலரை ஆதரித்த பெருமை இவர்க்கு உரியது. இவரது பாடல்கள் மிக எளிய நடையில் அமைந்துள்ளன.

1. அறல் - கருமணல்.
இயை - ஒத்த.
கதுப்பு - கூந்தல்.
வதுவை - திருமணம்.

2. தணவு - பிரிதல்.

3. கொண்கன் - கணவன்.
திண் - வலிய.

4. மகவு - குழந்தை.
முட்டாள் - முள் பொருந்திய தாள்.
அம்புயம் - தாமரை.

5. பருவரல் - துன்பம்.
துணை - இரண்டு.
வீட்டி - போக்கி. [திலும்.
எந்த ஞான்றும் - எக்காலத்

6. ஏற்பதை - இரப்பதை.
அருகிய - குறைந்த.

7. மெல்லியல் - மெல்லிய தன்மையினை உடைய குசேலனின் மனைவி.
அதிதி - விருந்து.
அயின்று - உண்டு.

8. இற்று - இத்தன்மைத்து.

10. இவ்வண்மை - இவ்விதம்.
வண்ணம் - நிறம்.
மை - கரிய.
வெரிந் - முதுகு.
தைவந்தும் - தடவியும்.

11. மடம் - அறியாமை.

12. துப்பு - பவளம்.
இதழ் - உதடுகள்.

13. பவம் - பிறப்பு.
பொலி - விளங்குகின்ற.
திகிரி - சக்கரம்.

14. உறை - தங்குகின்ற.
சேமம் - பாதுகாவல்.
வைப்பு - இருப்பிடம்.

15. அரி - செந்நிறமும், கருநிறமும் உடைய இரேகைகள்
உண் கண் - மை பூசப்பட்ட
துடி - உடுக்கு. [கண்.

16. துழாய் - துளசி.
அண்ணல் - பெருமை பொருந்தியவன்.
எண்ணல் - நினையாதே.

17. மாழ்கேல் - வருந்தாதே.
மருள் - மயங்கும்படியான.

18. சேய் - குழந்தைகள்.
எழில் - அழகு.
கூர்வர் - மிகுந்திருப்பர்.
உணர்ச்சி - அறிவு.

## 4. பெரிய புராணம்

இதன் ஆசிரியரான சேக்கிழாரைப்பற்றி முன்னரே விளங்கக் கூறப்பட்டது.

1. நாவுக்கு மன்னர் - திருநாவுக்கரசர்.
நம்பர் - சிவபெருமான்.
பா - செய்யுள்.

2. கண்ணுதலோன் - நெற்றிக் கண்ணையுடைய சிவபிரான்.
இறைஞ்சி - வணங்கி.
ஆர்வம் - அன்பு.

3. வாளை - வாளை மீன்கள்.
பழனம் - வயல்.
பணி - பாம்பு.
கலன் - ஆபரணம்.

4. மேவினர் - தங்கினர்.
செப்பு அரும் - சொல்வதற்கு அருமையான.

5. தனையர் - பிள்ளைகள்.
கூவல் - கிணறு.
வாகீசர் - திருநாவுக்கரசர்.

6. கூர - மிக.
மொழிக் கொற்றவர் - திருநாவுக்கரசர்.
இறைகொள்ள - தங்க.

8. நாமம் - பெயர்.
தண்டலை - சோலை.
கதலி - வாழை.

குரு - நிறம். [யது.
நாளம் - அன்று தோன்றி

9. பேணுன் - கவனியாதவ
ஒல்லே - விரைவில். [னுய்
அணேந்தான் - சேர்ந்தான்.

10. தெருமந்து - மயங்கி.
அமுதுசெய - உண்ண.

11. சவம் - பிணம்.
உம்பர்பிரான் - சிவபெரு
நவை - துன்பம். [மான்.

12. உடையான் - இவ் வுலகத்
தைத் தன்னுடையதாகக்
கொண்ட சிவபெருமான்.

13. இடர் - துன்பம்.
மேவுதல் - தங்குதல்.

14. பைங்கண் - பசிய கண்களே
விடை - இடபம். [யுடைய.
பாகர் - சிவபிரான்.
காதல் - அன்பு.
போற்று - துதி.
இசைப்பார் - பாடுவார்.

15. புரி - முறுக்கு ஏறிய.
பொன் - அழகிய.
சீலம் - உயர்வு.
தீந்தமிழ் - இனிய தமிழ்.
தொடை - தொடுத்தல்.

## 5. அரிச்சந்திர புராணம்

இதனேப் பாடியவர் இராம நாதபுரத்தைச் சார்ந்த நல்லூரில் வாழ்ந்திருந்த வீரகவிராயர் என்பவர். இவர் ஆசுகவி பாடுவதில் வல்லவர். சைவ சமயத்தினர். காளியினிடத்தில் பக்தி வாய்ந்தவர். இந்நூல் 10 காண்டங்களே உடையது. இந்நூல் எளிய நடையில் அழகுடன் அமைந்திருக்கின்றது. இவரது காலம் 16-ம் நூற்ருண்டு ஆகும்.

1. கணே - அம்பு.
குருதி - இரத்தம்.

2. கரி - யானே.
மா - குதிரை.
மாள - இறக்க.
போந்தேன் - வந்தேன்.
உய்வு - பிழைப்பு.

3. கோலம் - பன்றி.
கேளா - கேட்டு.
கண்ணன் - கண்ணே உடை
கால் - காற்று. [யவனுய்
கிளர்ச்சி - எழுச்சி.

4. ஆழி - கடல்.

5. கனே - ஒலிக்கின்ற.
இணேயர் . இத்தன்மையான
வர்கள்.
ஐயுறவு - சந்தேகம்.
எல்லே - சமயத்தில்.
புனே - அலங்கரிக்கப்பட்ட.
இழை - ஆபரணம்.
புரவலன் - அரசனுகிய அரிச்
சந்திரன்.

6. வெய்யவன் - சூரியன்.
செய்யவள் - இலக்குமி.
கவிகை - குடை.

7. அருத்தி - ஆசை.
போதம் - அறிவு.
புல்லியேம் - அற்பமானவர்
கிளத்தி - சொல்லி. [கள்.

8. ஏத்திய - புகழ்ந்த.
பார்த்திப - அரசனே.

10. வள்ளல் - வரையாது அளி
ஈயா - கொடாத. [ப்பவன்
வருகலம் – வந்திருக்கமாட்
டோம்.

11. தூக்குவான் - அடிப்பதற் காத்திரம் - உடம்பு. [காக இரிந்தனர் - ஓடினர்.
12. அடவி - காடு.
உதிரம் - இரத்தம்.
ஈர்க்க - இழுக்க.
துகில் - ஆடை.
13. கடையுகம் - யுகாந்தகாலம்.
கனல் - நெருப்பு.
கோதைமார் - பெண்கள்.
13. படி - விதம்.
பைய - மெதுவாக.
பரிசு - தன்மை.
15. கடம் - காடு.
கடிது - விரைவில்.
16. கேழல் - பன்றி.
கா - சோலை.
பா - செய்யுள்.
பொதிந்து - மூடி.
அடு - கொல்லுகின்ற.
18. வடித்த - ஆராய்ந்த.
அறைதி - சொல்வாயாக.
உணர்ந்திலம்-அறியவில்லை.
16. மாதவ - மிகத் தவத்தைச் செய்தவனே.
20. ஈனமாய் - இழிவாய்.
21. அடினும் — கொன்றாலும்.
இசைகிலன் — ஒப்பமாட்டே [ன்
22. மருங்குல் - இடை.
தோகையார் - மயில் போன்ற சாயலினை உடைய பெண்கள்.

## IV. பல்சுவை

### 1. திருவரங்கக் கலம்பகம்

இதனை இயற்றியவர் ஸ்ரீ பிள்ளைப் பெருமாளையங்கார வர்கள், 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். கலம்பகம் என்பது புய வகுப்பு, மறம் முதலிய 18 உறுப்புக்களை உடையது. இவர் அஷ்டப்பிர பந்தம், திருநறையூர் நம்பி மேக விடு தூது முதலிய நூல்களைச் செய்ததாகத் தெரிகிறது.

அரவு - பாம்பு.
உரம் - வலிமை.
புடவி - பூமி.
இடந்தான் - பெயர்த்தவன்.
அத்தி - குவலயாபீடமென்ற யானை.
விளித்தான் - கொன்றவன்.

### 2. திருவேங்கடத் தந்தாதி

இதனை இயற்றியவரும் ஸ்ரீ பிள்ளைப் பெருமாளையங்கார வர்களேயாவர். அந்தம் + ஆதி = அந்தாதி. அஃது ஒரு செய்யுளின் ஈற்றடியிலுள்ள சீர், அசை முதலியவற்றில் ஒன்றை மறு செய்யுளின் தொடக்கமாகக் கொண்டது ஆகும்.

தாயவன் - தாண்டியவன்.
சரம் - அம்பு.
வன் கண்ணன் - கொடியவனாகிய இராவணன்.
தூயவன் - பரிசுத்தமானவ [ன்

### 3. மதுரைக் கலம்பகம்

இதன் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள். அவர் வரலாறு முன்பே கூறப்பட்டது.

காண்பு - பார்ப்பதற்கு.
காயம் - உடம்பு அல்லது வாளினால்உண்டான காயம்

## 4. சிதம்பரச் செய்யுட் கோவை

இதன் ஆசிரியராகிய குமர குருபரரைப் பற்றி முன்னரே கூறப்பட்டது.

போற்றுமின் - துதியுங்கள்.
கூற்றம் - இயமன்.
நாமரங்காள் - நம்மவர்களே.
ஏறு - இடபம்.
உவந்தான் - விரும்பியவன்.
பொன் - அழகு.

## 5. பணவிடு தூது

இதன் ஆசிரியர் பெயர் இன்னும் தெரியவில்லை. அவர் திருநெல்வேலி நகரைச் சேர்ந்தவர். சைவ சமயத்தினர். இவர் காலம் 200 ஆண்டுகளுக்குமுன் என்பர்.

1. குண நிதி - குணத்திற்கு இருப்பிடம்.
2. பொன்மகள் - இலக்குமி.
4. மாயோன் - திருமால்.

## 6. குற்றாலக்குறவஞ்சி

இதனை இயற்றியவர் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவர். இவர் குற்றால விஷயமாகப் பதின்மூன்று நூல்கள் செய்திருக்கிறார். சைவ சமயத்தினர். வேளாண்மரபினர். இவர் குற்றாலத்தை அடுத்துள்ள 'மேலகரம்' என்ற ஊரில் வாழ்ந்திருந்தார்.

1. கவி - குரங்கு.
எறிந்து - அசைத்து.
கூனல் - வளைந்த.

## 7. ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும்.

இவ்விருவரும் ஒரு காலத்தவர். ஒட்டக்கூத்தர் சோழநாட்டுப் புலவர். புகழேந்தியார் பாண்டிய நாட்டுப் புலவர். இவ்விருவர் வரலாறுகளையும் இப்புத்தகத்திலமைந்துள்ள 'புகழேந்திப் புலவர்' என்ற பாடப் பகுதியாலறிக.

1. கோரம் - சோழனின் குதிரை
கன வட்டம் - பாண்டியனின் குதிரை.
ஆர் - ஆத்தி.
ஆதித்தன் - சூரியன்,
அம்புலி - சந்திரன்.
உறந்தை - உறையூர். சோழர்களின் தலைநகரம்.

2. நேரி - சோழ நாட்டுமலை.
கடிப்பகை - வேம்பு.
பரவை - கடல்.

## 8. தனிப்பாடல்கள்

பல புலவர்களால் தனிச் செய்யுட்களாகப் பாடப் பெற்றவை தனிப் பாடல்கள் எனப்படும். சிவஞான முனிவரவர்கள் இலக்கணத்தில் வல்லவர். இராமச்சந்திரக் கவிராயர் நகைச்சுவை தோன்ற பலதனிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

1. காயம் - பெருங்காயம்.

2. இல்லம் - வீடு.
மெய் - உடம்பு.
நோவ - வருந்த.
ஒண்ணு - முடியாத.

Printed at The Liberty Press, G.T., Madras